கல்கி



டிசம்பர் 26, 1954

4 அணா


"வெண்மையான, சுத்தமான

லக்ஸ் டாய்லட் சோப்பின்

நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது..."

என்கிறார்

பத்மினி



இந்தியாவில் தயாரித்தது

லக்ஸ் டாய்லட் சோப் தயாரிக்க மிகவும் சுத்தமான எண்ணெய்கள் மட்டும்தான் உபயோகிக்கப்படுகின்றன. அதனால்தான் எப்பொழுதும் அது அவ்வளவு வெண்மையாக இருக்கிறது. பத்மினி கூறுவதாவது: "லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான, வெண்மையான நுரை சருமத்துவாரங்களுக்குள் ஆழப்புகுந்து என் வதனத்தை மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன்!"



முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை
கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

"...அதனால்தான்
என் வதனத்தை
கவர்ச்சியோடு வைத்திருக்க
லக்ஸ் டாய்லட் சோப்பை
உபயோகிக்கிறேன்!"

★ ஸினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 431-50 TM


மலர் 14 :: இதழ் 22

கல்கி

ஜய ௵ :: மார்கழி 11

பொருளடக்கம்

1954 டிசம்பர் 26



"நாக நாடு" என்று வழங்கப்பெறும் சீன தேசத்துக்கும், நமது பாரதப் புண்ணிய நாட்டுக்கும் நெருங்கிய கலாச்சாரத் தொடர்பு, நீண்ட காலமாக இருந்து வந்தது. சூழ்நிலைகளினால் பல மாறுதல்களுக்கு உள்ளான இந்தப் புராதனத் தொடர்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் சமீப காலத்தில் இருநாடுகளுக்கும் பல உறவுகள் ஏற்பட்டுள்ளன. அதன் பயனாக, சீனாவிலிருந்து அறுபது பேருக்கு மேற்பட்ட கலைஞர்களைக் கொண்ட ஒரு சீன கலாச்சார தூது கோஷ்டி பாரத நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறது. அந்தக் கோஷ்டியார் வருகிற 25-ம் தேதி சென்னைக்கு விஜயம் செய்து, தங்கள் நாட்டுப் பாடல்கள் நடனங்கள் முதலிய கலைநிகழ்ச்சிகளை 29, 30, 31, ஜனவரி 1-ந் தேதிகளில் நடித்துக் காட்டப் போகிறார்கள். தமிழகத்துக் கலைஞர்களும், நம் நாட்டுக் கலைகளை அவர்கள் கண்டு களிக்கும் முறையில் வாய்ப்பை அளிக்கப் போகிறார்கள். சீன கோஷ்டியார் நடிக்கும் 'வெண்ணிறப் பாம்பின் கதை' என்ற நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சியை மேலே படத்தில் காணலாம். ★ ★ ★



தமிழர் நெஞ்சத்தில்
தனியிடம் பெற்றுவிட்ட
இனியதோர் ஓவியம்!!
சரவணபவா &
யூனிட்டி பிக்சர்ஸ்
எதிர்பாராதது
டைரக்ஷன்
Ch.நாராயணமூர்த்தி
கதை, வசனம்
ஸ்ரீதர்
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
இப்பொழுது தென்னாடெங்கும் நடைபெறுகிறது

மலர் 14



இதழ் 22

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

வீரத் தலைவருக்குக் குதூகல வரவேற்பு!

சென்ற வாரத்தில் ஒரு நாள் திடீரென்று அரபிக் கடலின் களிப்பில் அலைகள் மலைபோல் ஆர்த்தெழுந்தன.

அதே சமயம் அக் கடலில் அணிவகுத்து நின்ற இந்திய யுத்தக் கப்பல்களின் பீரங்கிகள் படபடவென்று பெரு முழக்கம் செய்தன.

அலைகளின் சப்தத்துக்கும் பீரங்கிகளின் முழக்கத்துக்கும் போட்டியாக, கடற்கரையிலிருந்து எழும்பிய ஆயிரக்கணக்கான மக்களின் ஜெய கோஷங்கள் வானைப் பிளந்தன.

உழைப்பினால் உயர்ந்த வெளிநாட்டு வீரர் ஒருவரை இத்தனை கோலாகல வைபவங்களுடன் பாரத நாடு அமோகமாக வரவேற்றது.

ஐரோப்பாவிலே சமீப காலத்தில் சுதந்திரம் பெற்ற யூகோஸ்லேவியாக் குடியரசின் தலைவர் மார்ஷல் டிட்டோ பம்பாயில் வந்து இறங்கியபோது, பாரத மக்கள் அவருக்கு மகத்தான வரவேற்பு அளித்து, அவரிடம் தங்களுக்குள்ள மதிப்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள யூகோஸ்லேவியாவுக்கும் இந்தியாவுக்கும் சமீப காலமாக இவ்வளவு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம்.

பூகோள ரீதியாக யூகோ நாடு வெகு தொலைவில் இருப்பினும், ஜனநாயக தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் இரு நாடுகளுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டிருப்பது உலகம் அறிந்த விஷயம்.

பூகோள ரீதியாக ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் உள்ள தேசங்கள் நட்புக் கொண்டு, நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வது சாத்தியம் என்பதற்கு இந்தியா-யூகோஸ்லேவியாவின் நல்லுறவைக் காட்டிலும் வேறு என்ன உதாரணம் வேண்டும்?

* * * *

யூகோஸ்லேவியாவின் தற்போதையக் கொள்கையின் உயர்வை உணர வேண்டுமாயின், அக் குடியரசின் தலைவரான மார்ஷல் டிட்டோவின் அற்புத வாழ்க்கை விவரங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

மார்ஷல் டிட்டோ ஏழை விவசாயியின் குடும்பத்தில் பிறந்தவர்; பஞ்சக் கோலத்தையும் பட்டினிக் கொடுமையையும் தாமே அனுபவித்தவர்.

மார்ஷல் டிட்டோ தமது பதினைலாவது வயதில் ஆரம்பப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு ஜீவனத்துக்காகக் கருமான் தொழிலில் ஈடுபட்டார்; உழைப்பினால் மேன் மேலும் உயர்ந்து திறமை வாய்ந்த இஞ்ஜினீரானார்.

பிறகு முதலாவது உலக மகா யுத்தத்தில் கலந்து கொண்டு ருஷ்யாவிலே யுத்தக் கைதியாகிப் படாதபாடு பட்டார்.

1917-ம் ஆண்டில் நிகழ்ந்த ருஷ்யப் புரட்சிக்குப் பின் மார்ஷல் டிட்டோ போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்து போரிட்டார்.

முதலாவது மகா யுத்தத்துக்குப் பிறகுதான் யூகோஸ்லேவியா நாடு பல நூற்றாண்டுகளுக்குப் பின் மறுபடியும் உருவாயிற்று.

அகில உலகையும் திடுக்கிட வைத்த ருஷ்யப் புரட்சியை நேரில் பார்த்த டிட்டோ அரசியலில் மும்முரமாகப் பிரவேசித்து யூகோஸ்லேவியாவிலும் அரசியல் சண்டமாருதத்தை உண்டாக்க முற்பட்டார். அதன் விளைவாக அவர் ஐந்து ஆண்டுகள் சிறைப்பட்டுச் சொல்லொணுக் கஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்தது.

விடுதலை அடைந்த பின் மார்ஷல் டிட்டோ ருஷ்யாவுக்குச் சென்று அங்கு பல ஆண்டுகள் வசித்தார். பிறகு யூகோஸ்லேவியாவுக்குத் திரும்பி வந்து, மறுபடியும்


டிட்டோவின் ஆசை



கார்ட்டூன்

போட்டா போட்டி!





சாப்பாட்டு வேளை!
ஆந்திரத் தேர்தலுக்கு ரூ 30 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது – செய்தி
ரூ 30 லட்சம்
கோஷ்டிப் பூசல்கள்
கதம்பம்
ரகு
1 மந்திரி பரமேசுவரன் மாறு வேடத்தில் ஆட்டோ-ரிக்ஷாக்களில் ஏறிச் சென்று பார்த்திருப்பதாகச் சென்னைச் சட்டசபையில் தெரிவித்தார்!
நவீன விக்ரமாதித்தர்!
2 அவர் இவ்விதமே சென்னை சர்க்கார் பஸ்களில் பிரயாணம் செய்வாரா?
கொஞ்சம் வேகமா தள்ளுங்க ஸார்! நீங்க தள்ளினாத்தான் வண்டியிலே ஏற முடியும்!
3
ஸ்தல ஸ்தாபனம்
ஆரோக்கியம்
விவசாயம்
பாதுகாப்பு
மற்ற மந்திரிகளும் நேரிடையாக விஷயத்தை அறிந்துகொள்ள இப்படிப் புறப்படலாம்!

அரசியலில் பிரவேசித்து அபரிமிதமான செல்வாக்கைப் பெற்ருர்.

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின் சிதறிக் கிடந்த பல்வேறு சமூகத்தினரையும் ஒன்று திரட்டி யூகோஸ்லேவியா குடியரசை உருவாக்கிய பெருமை முற்றிலும் மார்ஷல் டிட்டோவுக்கே உரியது.

அந்த நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த மார்ஷல் டிட்டோ சென்ற வருஷத்தில் தான் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரும்புத் திரைக்குள் மறைந்து விடாமல், அதாவது, ருஷ்யாவின் கட்டளைக்கு முற்றிலும் அடி பணிந்து விடாமல் ஸ்டாலினை அரசியல் சதுரங்கத்தில் எதிர்த்து நின்று வெற்றி பெற்ற தனிப் பெருமையும் மார்ஷல் டிட்டோவுக்கு உண்டு.

ஒரு சுதந்திர ஐரோப்பிய நாட்டின் ஜனாதிபதி சுதந்திர இந்தியாவுக்கு விஜயம் செய்வது இது தான் முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிணக்கு ஒழிக! ஒற்றுமை வளர்க!

இரண்டாவது மகா யுத்தத்தில் யூகோஸ்லேவிய மக்கள் அடைந்த உயிர்ச் சேதத்தையும் பொருள் நஷ்டத்தையும் கேட்போர் திடுக்கிடாமல் இருக்க முடியாது.

அப்படி யிருந்தும் மார்ஷல் டிட்டோவின் தலைமையில் யூகோஸ்லேவியா மக்கள் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, கொடிய யுத்தத்தினுல் சூறையாடப்பட்ட தங்கள் நாட்டை அதிசீக்கிரத்தில் புனருத்தாரணம் செய்து விட்டார்கள்.

அவ்வாறு புத்துயிர் பெற்ற யூகோஸ்லேவியா இன்று நேருஜியின் தலைமையில் இந்தியா அனுஷ்டித்து வரும் வழியைப் பின்பற்றி நடுநிலைமை வகிப்பதாலேயே, அது சிறிய நாடாக இருந்தும் தனிச் சிறப்புற்று விளங்குகிறது.

பாரத நாட்டைப் போல் யூகோ நாடு ருஷ்ய வல்லரசின் கட்சியிலோ அல்லது அமெரிக்க வல்லரசின் கட்சியிலோ சேராமல் நடு நியாயமான கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

அதிலும் ஓர் ஐரோப்பிய நாடு ஐரோப்பிய வல்லரசுகளின் கட்சியில் சேராமல் நடுநிலைமை வகிப்பது போற்றத் தக்க விஷயம் அல்லவா!

பாரத நாட்டைப் போலவே யூகோ நாடும் வெகு காலமாகப் போராடிச் சுதந்திரம் பெற்றது என்பதையும் எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று இந்தியாவுக்கும் யூகோஸ்லேவியாவுக்கும் நட்பும் நல்லுறவும் ஏற்பட்டிருப்பதற்கு மேற்படி கொள்கை ஒற்றுமைதான் முக்கிய காரணம் ஆகும்.

எந்த வல்லரசின் கட்சியிலும் சேராமல் நடு நிலைமையாக இருந்து போரைத் தவிர்க்க வேண்டும்; இந்த உலகில் சமாதான மண்டலத்தை அதாவது சமாதான நோக்கம் கொண்ட நாடு களடங்கிய பிரதேசத்தை விஸ்தரிக்க வேண்டும் என்பதே நேருஜியின் இலட்சியம்.

மேற்படி இலட்சியத்தைத் தாம் பூரணமாக ஆதரிப்பதாக மார்ஷல் டிட்டோ உலகம் அறியப் பிரகடனம் செய்துள்ளார்.

"யூகோஸ்லேவியாவும் இந்தியாவும் அந்தந்த தேச மக்களின் நல்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டு வருகின்றன. இத்தகைய ஆக்க வேலைகள் பூர்த்தியாவதற்கு உலக சமாதானம் அத்தியாவசியமாகும். எனவே, உலக நாடுகளிடையே சமாதானம் நிலவ வேண்டும்; உலக நாடுகளுக்குள் பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்பட வேண்டும் என்பதே எங்களுடைய அபிலாஷை. உலக நாடுகளிடையே இருந்து வரும் பிணக்கும் பொருமையும் போட்டிகளும் தீர்ந்து, நல்லுறவு ஏற்படுவதற்கு நாங்கள் எங்களால் இயன்ற வரையில் பெரு முயற்சி செய்து வருகிறோம். இந்தியாவின் கொள்கைகளும் இவை தான். அதனாலேயே நம் இரு நாடுகளுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு, புது டில்லி ராஷ்டிரபதி பவனில் நடந்த விருந்தில் யூகோ நாட்டின் தலைவர் மார்ஷல் டிட்டோ இந்தியாவுக்கும் யூகோஸ்லேவியாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்புக்குக் காரணங்களை நன்ருக விளக்கிக் கூறினர்.

நேருஜிக்கும் மார்ஷல் டிட்டோவுக்கும் புது டில்லியிலே நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாக, சர்வதேச அரசியல் விவகாரங்களில் அவ்விருவருக்கும் உள்ள கருத்து ஒற்றுமை உறுதியாயிற்று என்று தெரிகிறது.

சீனா, பர்மா, இந்தோனேஷ்யா முதலிய ஆசியா நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள பஞ்ச சீலக் கொள்கைகளை ஐரோப்பிய நாடுகளிடையே பரப்ப மார்ஷல் டிட்டோ தீவிர முயற்சி எடுத்துக் கொள்வார்; அந்தக் கொள்கை ஐரோப்பாவில் வெற்றி பெறும் என்றும் அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே நல்லுறவு ஏற்படலாம் என்றும் இரு தலைவர்களும் நம்புகிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

* * *

கொரியா, இந்தோ சீனா, சீனா முதலிய நாடுகள் சம்பந்தமான பிரச்னைகளை ஒட்டி இந்தியாவின் கருத்துக்கும் யூகோஸ்லேவியாவின் கருத்துக்கும் சிறிதும் வேற்றுமை இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்துக்கு வரும் பல விஷயங்களிலும் இந்தியாவுக்கும் யூகோஸ்லேவியாவுக்கும் ஐக்கிய பாவம் இருந்து வருவதையும் எல்லோரும் அறிவர்.

இதையெல்லாம் கவனிப்போர்தான் மார்ஷல் டிட்டோ இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பதின் முக்கியத்தை உணர முடியும்.

ஆதிக்க ஆசை, போர் வெறி, அணு குண்டு, ஜலவாயு குண்டு உற்பத்தியில் போட்டா போட்டி முதலிய விபரீதகாரியங்களில் மனத்தைச் செலுத்தி இரண்டு கட்சிகளாகக் கச்சை கட்டி நிற்கும் உலகில், நேருஜியும் மார்ஷல் டிட்டோவும் அனுஷ்டித்து வரும் கொள்கை, ஆழ்ந்த அந்தகாரத்தினிடையே நக்ஷத்திரம்போல் நம்பிக்கையை அளிக்கக் கூடியதாக இருக்கிறது எனலாம்.

நேருஜியின் வழியை ஏற்கெனவே பர்மா, இந்தோனேஷ்யா போன்ற ஆசியா நாடுகள் பின்பற்றத் தொடங்கி யிருக்கின்றன.

அதுபோலவே ஐரோப்பிய நாடுகளும் மார்ஷல் டிட்டோவின் உயர்ந்த கொள்கையை அனுஷ்டிக்க முற்படுமாயின் உலகில் போர் மண்டலத்தின் பலம் குறைந்து சமாதான மண்டலத்தின் செல்வாக்கு அதிகமாகும் என்பதில் ஐயமில்லை.

உலகம் சிரிக்கின்றது!

சரியான போடு போட்டார்கள்!

டில்லிமா நகரிலே உள்ள ஜனப் பிரதிநிதி சபையில் பாரத மக்களின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் சில விந்தை மனிதரைப் பற்றியே குறிப்பிடுகிறோம். அவர்களின் செயலைக் கண்டு ஊர் மாத்திரம் சிரிக்கவில்லை; நாடும் நகரமும் மாத்திரம் சிரிக்கவில்லை; உலகம் முழுவதும் சிரிக்கின்றது.

அந்தப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தைக் கூடத் தூக்கி அடித்து விட்டார்கள். பிரிட்டிஷார் கூடச் செய்யத் துணியாத வெட்கக்கேடான காரியத்தைச் செய்து விட்டார்கள்.

அவர்கள் இந்தியா பார்லிமெண்டாகிற லோக சபையின் நாயகரான ஸ்ரீ மாவ்லங்கரைக் கண்டித்து, அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து விட்டார்கள். மேற்படி தீர்மானம் படுதோல்வி யுற்றதெனினும், அந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கச் சபையில் உள்ளவர்களில் ஐம்பது பேருக்கு மேல் கையெழுத்திட்டதுதான் விந்தையிலும் விந்தையாகும்.

ஜனப்பிரதிநிதிகளில் ஒரு சிலர் விபரீத புத்தி காரணமாக அப்படிச் செய்திருந்தால், அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஐம்பது பேர்களின் அனுமதி கிடைக்காததால், தீர்மானம் செல்லாது என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கும். ஆனால், அத்தகைய தீர்மானத்துக்கு ஐம்பது பிரதிநிதிகள் ஆதரவு அளித்ததிலிருந்து, பாரத நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் மகோன்னத ஸ்தாபனமான லோக சபையில் கூடக் கட்சி மாச்சரியம் என்ன பாடு படுத்துகிறது, எத்தனை பேருடைய புத்தியைக் கெடுத்து விடுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

* * *

பாரத நாட்டில் சுதந்திரப் போராட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில், சர்தார் வல்லபாய் பட்டேலின் சகோதரரான ஸ்ரீ வித்தல்பாய் பட்டேல் இந்தியா சட்ட சபையின் தலைவராக இருந்தார். அப்போது அவருக்கும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்கும் பலப் பரீட்சை நடக்கலாயிற்று. தமது உத்தரவின்றிப் போலீசார் முதலிய எவரும், ஏன், வைஸ்ராய் கூடச் சபைக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று வித்தல்பாய் பட்டேல் கர்ஜித்தார். இவ்வாறாக, நிலைமை முற்றியது. அந்த நெருக்கடியான நிலைமையிலும் சர்வ வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் அதிகாரிகள் சபாநாயகரை மரியாதைக் குறைவாக ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவர்மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று முணுமுணுக்கவும் இல்லை. அதற்கு மாறாக, சபாநாயகரின் கட்டளைக்கு அடிபணிந்தனர். அவரது கௌரவத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டனர்!

இந்தியாவிலேயே பார்லிமெண்டு நடவடிக்கை முறைகளில் ஸ்ரீ மாவ்லங்கரைக் காட்டிலும் அனுபவம் பெற்றவர் வேறு யாருமில்லை. அவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது கட்சி பேதமின்றிச் சகலரும் அவரைப் பாராட்டியதே அதற்குத் தகுந்த சான்று ஆகும். ஸ்ரீ மாவ்லங்கர் பம்பாய் சட்ட சபையிலும் இந்தியா பார்லிமெண்டிலும் சுமார் பதினைந்து வருஷ காலமாகச் சபாநாயகராக இருந்து தமது கடமையைப் பாரபட்சமின்றித் திறம்படச் செய்து வருகிறார்; எல்லாருடைய நன்மதிப்பையும் பெற்றுள்ளார். அப்படிப்பட்டவர் மீது எதிர்க் கட்சியினர் தகுந்த காரணமின்றித் திடீரென்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததன் மூலம் தங்களிடம் தங்களுக்கே நம்பிக்கையில்லை என்பதைப் பறைசாற்றிக் கொண்டனர் என்றுதான் கூற வேண்டியிருக்கிறது! எனவே, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள் தங்களுடைய அறிவைத் துஷ்பிரயோகம் செய்தவர்கள் ஆவர் என்று நேருஜி கண்டித்திருப்பது முற்றிலும் நியாயமே ஆகும்.

சர்வதேச அரங்கத்தில் மற்றொரு வெற்றி!

காந்திய வழியைப் பின்பற்றி வரும் நேருஜியின் கொள்கை உலக நாடுகளின் விதியையே மாற்றவல்லது என்பது, இப்போது நிகழ்ந்துள்ள மற்றொரு சம்பவத்தின் மூலம் நிரூபணமாகி யிருக்கிறது. உலக சமாதானம் மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருந்த பல சந்தர்ப்பங்களில், பாரத நாட்டின் அருமைத் தலைவர் ஜவாஹர்லால்ஜியின் தலையீட்டினால் நெருக்கடி தீர்ந்து சமாதானம் ஏற்பட்டது உலகம் அறிந்த உண்மை.

சில மாதங்களுக்கு முன் சீனக் குடியரசின் எல்லையில் அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டுப் பதினொரு அமெரிக்க விமானிகள் கீழே இறங்கி விட நேர்ந்தது. உளவறிய முற்பட்டதாக அவர்கள் மீது நடந்த வழக்கில் சீன சுப்ரீம் கோர்ட்டார் அந்த விமானிகளுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை விதித்தனர். இச் சம்பவம் காரணமாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் தகராறு முற்றி, பெரும் கொதிப்பு உண்டாயிற்று.

மேற்படி தண்டனையை அமெரிக்கா கண்டித்து, அவ்விஷயமாகத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுக் கொண்டது. அச் சபை, சீனாவில் தண்டனை அடைந்த அமெரிக்க விமானிகள் விடுதலை பெறுவதற்குற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்படி ஐ. நா. ஸ்தாபனத்தின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ ஹாமர்ஷெல்டுக்குக் கட்டளையிட்டது. தங்களை மதியாமல் தங்களுக்கு ஐ. நா. ஸ்தாபனத்தில் இடம் அளிக்க மறுக்கும் ஒரு சபையின் கோரிக்கையைச் சீனக் குடியரசு சர்க்கார் ஒப்புக் கொள்வார்களா!

அவ்விஷயமாக ஸ்ரீ ஹாமர்ஷெல்ட் நேருஜியின் உதவியை நாடவே, நேருஜியின் கோரிக்கைக்கு இணங்க ஸ்ரீ ஹாமர்ஷெல்டை பீகிங்கில் வரவேற்றுப் பேசச் சீனப் பிரதமர் சூ என் லாய் இசைந்தார். அமெரிக்காவின் கண்டனத்தை ஏற்க முடியாது என்று பிடிவாதமாக இருந்த சீனப் பிரதமரின் மனமாற்றத்துக்கு நேருஜியின் தலையீடுதான் காரணம். இல்லாவிடில், ஏற்கெனவே புகைந்து கொண்டிருக்கும் அமெரிக்கா — சீனத் தகராறு ஜ்வாலைவிடத் தொடங்கி யிருக்கலாம்.

இவ்வாறாக, சர்வ தேச அரங்கத்திலே, உலக சமாதானத் தொண்டில் வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் நேருஜியின் பெருமைக்கு இது மற்றொரு மகத்தான எடுத்துக் காட்டாகும்!

இலங்கைத் தமிழர் அஞ்சலி

கொழும்பு, டிஸம்பர் மீ 18உ.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் 'கல்கி' பத்திரிகையிடமும் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தியிடமும் எவ்வளவு மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறார்களென்பது சென்ற ஞாயிற்றுக் கிழமை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான அனுதாபக் கூட்டத்தில் வெளியாயிற்று. தபால் மந்திரி ஸ்ரீ எஸ். நடேசன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்துக்கு ஈழகேசரி ஆசிரியரும் 'கல்கி'யுடன் நெருங்கிய தொடர்புடையவருமான ஸ்ரீ ராஜ அரியரத்தினம் ஏற்பாடு செய்திருந்தார். மந்திரி ஸ்ரீ நடேசன் பேசுகையில், தமிழ்க் கவிதையிலே மகாகவி பாரதியார் ஒரு புதிய சகாப்தத்தை உண்டு பண்ணியதைப் போல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வசன நடையில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தாரென்றும், தமிழ் நாட்டு மூவேந்தர்களின் மகோன்னதமான காலத்தை அடிப்படையாகக் கொண்டு அரிய பல நவீனங்களை எழுதிய முதலாவது தமிழ் எழுத்தாளர் 'கல்கி' தானென்றும் எடுத்துக் கூறினார். யாழ்ப்பாணத்தில் நான்காவது தமிழ் விழாவைச் சிறப்பாக நடத்தியதையும் அவர் மிக மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்.

திருவாளர்கள் வி. நாகலிங்கம், ஸி. முத்துத்தம்பி, எஸ். சின்னத்தம்பி, செனட்டர் ஆர். கனகநாயகம், ஸ்ரீ எஸ். அம்பிகைபாகன் முதலான பல தமிழ் அறிஞர்கள் 'கல்கி'யின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். 'கல்கி'யை 1950-ம் வருடம் இலங்கைக்கு அழைத்து முதல் முதலாக தமிழ் விழாக்கள் நடத்துவதை இலங்கையில் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்குக் காரணமாயிருந்த வித்வான் வ. மு. கனகசுந்தரம் தலைமையில் சென்ற வாரம் களுத்துறையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிலும் 'கல்கி'யின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புத்தூர் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் விசேஷக் கூட்டமொன்றில் சங்கத் தலைவர் ஸ்ரீ ஏ. ரங்கநாதன் பேசிய பொழுது இலக்கியத் துறையில் மகோன்னத நிலைமையை அடைந்த வல்லுநர்களுக்கு நோபல் பரிசுகளை வழங்கும் குழுவினர் தற்காலத் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்திருப்பார்களானால் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னரே அந்தப் பரிசு 'கல்கி'க்கு வழங்கப் பட்டிருக்கு மென்று கூறினார். திரிகோணமலை திருவள்ளுவர் கழகம், இலங்கை பாரத தேசிய சங்கம் முதலான மற்றும் அனேகம் சங்கங்கள் இறந்தும் இறவாத அமரர் கல்கியின் பிரிவுக்கு அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அடுத்த வாரம் கொழும்பு தமிழ்ச் சங்கம் கொழும்பு நகரில் ஒரு பெரிய அனுதாபக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

'கல்கி' விட்டுச் சென்ற "அமரதாரா" கதை தொடர்ந்து வெளிவரப் போகிற செய்தியை "வீரகேசரி" மூலமாக அறிந்ததும் இலங்கைத் தமிழ் அன்பர்கள் சற்றே ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். அதிலும் இந்தக் கதையைக் 'கல்கி'யின் புதல்வியே தொடர்ந்து எழுதப் போகிறாரென்பது எல்லோருக்கும் திருப்தியை அளித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து இந்திய தத்துவ சாஸ்திரம், கீழ் நாட்டின் அரும் பெரும் கலைகள் ஆகியவற்றை உலகறியச் செய்த கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமியின் உருவப்படம் ஒன்றை யாழ்ப்பாண நகர மேயர் ஸ்ரீ ஸாம் ஏ. சபாபதி இவ்வாரம் யாழ்ப்பாணம் மத்திய நூல் நிலையத்தில் திறந்து வைத்தார். அந்த வைபவத்தின் பொழுது ஸ்ரீ கே. நவரத்தினம் பேசுகையில் அகில உலகப் புகழ் பெற்ற ஸ்ரீ ஆனந்த குமாரஸ்வாமியை இலங்கை சர்வகலாசாலை தனது முதல் துணை வேந்தராக வைத்துக் கொள்ளத் தவறியதற்கு வருத்தம் தெரிவித்து விட்டு யாழ்ப்பாண மத்திய நூல் நிலையத்துக்கு அவருடைய பெயரை வைத்து அதை அவரது ஞாபகச் சின்னமாக்க வேண்டுமென்றார். இந்திய தத்துவ, கலை கலாசாரப் பெருமைகளை அகிலமெல்லாம் அறியச் செய்த முதல் தமிழர் டாக்டர் குமாரஸ்வாமிதானென்றும் அவர் சொன்னார்.

—ரஜனி

அட்டைப் படம்:

வேய்ங்குழல் பொழி கீதம்!

ஆசிரியர் 'கல்கி' அவர்கள் தம் வாழ்நாளில் எத்தனையோ அற்புதமான கவிதைகள் இயற்றியிருக்கிறார்கள். "வேய்ங்குழல் கீதம்" என்னும் இந்தக் கவிதையில் வரும் ஒரு காட்சியை இந்த இதழ் அட்டையில் மணியம் தீட்டியிருக்கிறார். 'மீரா' படத்தில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடி, இசைத் தட்டிலே பதிவாகி, லட்சக்கணக்கான மக்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள இந்தப் பாடல் "கல்கி" அவர்கள் இயற்றியது.

காற்றினிலே வரும் கீதம்

கண்கள் பனித்திடப் பொங்கும் கீதம்
கல்லும் கனியும் கீதம்

பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம்
பண்ணொளி கொஞ்சிடும் கீதம்


காட்டு விலங்கும் கேட்டே மயங்கும்
மதுர மோகன கீதம்

நெஞ்சினில் இன்பக் கனலை எழுப்பி
நினை வழிக்கும் கீதம்

சுனை வண்டுடன் சோலைக் குயிலும்
மனம் குவிந்திடவும்
வான வெளிதனில் தாரா கணங்கள்
தயங்கி நின்றிடவும்
ஆ! என் சொல்வேன்! மாயப்பிள்ளை
வேய்ங்குழல் பொழி கீதம்

நிலா மலர்ந்த இரவினில் தென்றல்
உலா விடும் நதியில்
நீல நிறத்துப் பாலகன் ஒருவன்
குழல் ஊதி நின்றான்
காலமெலாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம்!

ரஸமான க்ஷணங்கள் ஒவ்வொன்றையும் என்றும் நிலைத்திருக்கச் செய்யுங்கள்




இவ்வளவு குறைந்த செலவில் இத்தனை இன்பந்தரும் 'ஹாபி' வேறு எதுவுமில்லை! சொற்ப ரூபாய்களுக்கே ஒரு சிறந்த 'கோடக்' காமிரா வாங்கிவிடலாம். பிறகு ஸ்படிகம்போன்ற வியூபைண்டரில் காட்சியைக் குறிபார்த்துக்கொண்டு, பொத்தானை அமுத்தவேண்டியது மட்டுமே... முதல்முறை முயற்சியிலேயே அற்புதமான படங்கள் எடுத்துவிடுகிறீர்கள்.

உங்கள் கோடக் வியாபாரியிடமுள்ள ஏராள நிறுவ நேர்த்தியான காமிராக்களை போய்ப்பாருங்கள்... சௌகரியமான விலையில் ஒரு நல்ல 'கோடக்' மாடல் உங்களுக்கு அவசியம் கிடைக்கும்.

'கோடக்' பிளாஷ்ஹோல்டர்களையும் பாருங்கள். அவைகளின் உதவியால் வெளிக்காட்சிகளைப் போலவே சுலபமாக வீட்டினுள்ளும் படம் பிடிக்கலாம்.

இதுபோன்ற சந்தோஷ க்ஷணங்களை ஏன் மறந்துபோக விடவேண்டும்? பொத்தானை அமுத்தவேண்டியதே... உங்கள் 'கோடக' ஸ்னேப்புகள் அவைகளை என்றென்றும் உங்களுக்கு ஞாபகமூட்டிக்கொண்டேயிருக்கும்.






'பிரௌனி' 127 காமிரா: யாவற்றிலும் மிக எளிதான அழகிய சிறு காமிரா இது. சிக்கனமான 'கோடக்' 127 பிலிம் சுருள் ஒவ்வொன்றிலும் எட்டு ஸ்னேப்புகள். விலை ரூ. 17/8



'பிரௌனி' ரிப்ளெக்ஸ் காமிரா: கையாள அதிகப்படி சுலபமானது. அநேகமாக பூர்ண சைஸ் வியூபைண்டர். 'கோடக்' 127 பிலிம் சுருளில் 12 ஸ்னேப்புகள். விலை ரூ. 45/-
'கோடக்' பிளாஷ்ஹோல்டர் ரூ. 22/12



கோடக் 'டுவாப்ளெக்ஸ்' காமிரா: 'கோடக்' 620 பிலிம் சுருளில் 2¼" சதுரத்தில் 12 பெரிய ஸ்னேப்புகள். பெரிய அளவு வியூபைண்டர் இருப்பதால் பிழை ஏற்படுவது துர்லபம். ரூ. 59/-
'கோடக்' பிளாஷ்ஹோல்டர் ரூ. 22/12
அசல் தோல் கேஸ் ரூ. 11/-

இவ்விலைகளில் விற்பனை வரி சேராது

K. 663

கோடக் லிட். (இங்லேண்டில் இணைக்கப்பட்டது) பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்.

விதூஷகன் சின்னுமுதலி*

கல்கி



சித்திரப்பட்டியைச் சுற்றிப் பதினைந்து மைல் விஸ்தீரணத்துக்கு, விதூஷகன் சின்னு முதலியைப் பற்றி அறியாதவர் யாருமில்லை. சிறு பிள்ளைகள் முதல், கிழவர் கிழவிகள் வரையில் எல்லாருக்கும் அவனைத் தெரியும். எந்த ஊரிலே யார் நாடகம் போட்டாலும் அவனுக்கு அழைப்பு வராமலிராது. சின்னு முதலி வருகிறான் என்றால் அன்று கூட்டம் இரண்டு மடங்குதான். அவனுடைய அகட விகட அதிசய சாமர்த்தியங்கள் அந்தத் தாலுகா முழுவதும் பிரசித்தியாயிருந்தன.

கூத்து மேடைக்குச் சின்னு முதலி வந்து விட்டானானால் ஒரே குதூகலந்தான். சில சமயம் கோணங்கிக் குல்லா தரித்து, புலி வேஷத்தைப் போல் கோடு போட்ட கால் சட்டையும் மேற் சட்டையும் போட்டுக் கொண்டு வருவான். அவனுடைய நடை, உடை, பாவனை ஒவ்வொன்றும் ஜனங்களுக்குச் சிரிப்பு உண்டாக்கும். அவனுடைய பொய் மீசை நிமிஷத்துக்கொரு முறை மேலும் கீழும் போய் வரும். பேசுவதற்கு அவன் வாயைத் திறந்து விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை. நாடகக் கொட்டகை கிடு கிடாய்த்துப் போகும். சில சமயம் வெள்ளைக் காரனைப்போல் தொப்பி போட்டுக்கொண்டு வருவான். "லேடீஸ் அண்டு ஜெண்டில் மென்" முதலிய ஐந்தாறு இங்கிலீஷ் வார்த்தைகள் அவனுக்குத் தெரியும். இவைகளை வைத்துக் கொண்டு அரைமணி நேரம் அவன் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்வான். "அசல் வெள்ளைக் காரன் கெட்டான்!" என்று சொல்லி ஜனங்கள் சந்தோஷப் படுவார்கள்.

என்னதான் பேசினாலும், பாட்டுப் பாடத்தெரியாவிட்டால் 'விதூஷகப் பார்ட்' ரஸப்படுமா? சின்னு முதலிக்குப் பாட்டுப் பாடவும் தெரியும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதல் சிருங்கார ரஸக் கீர்த்தனைகள் வரையில் அவன் வாயில் அகப்பட்டுப் படாதபாடு படும். 'சுயம்' பாடும் சக்தியும் அவனுக்கு உண்டு.

"இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதோ — சும்மா
இருந்தா லிருப்பே னெழுந்தேனே யாயிற்
பெருங்கான மேகம் பிளாய்!"


என்று காளமேகப் புலவர் பாடினார் அல்லவா? அந்தப் புலவரும் நமது சின்னு முதலியிடம் பிச்சை வாங்க வேண்டும். அவன்வாயில் வருவதெல்லாம் பாட்டுத்தான். பிராஸங்களைச் சரமாரியாய்ப் பொழிவான். "பாட்டு" என்று தொடங்கினான். ஆனால், "பாட்டு, காட்டு, எட்டு, வாட்டு, குட்டு, மேட்டு......" என்று அடுக்கிக்கொண்டே போவான். இவற்றின் பொருள் அவனுக்கும் தெரியாது; கேட்பவர்களுக்கும் விளங்காது. ஆயினும் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

2

சின்னு முதலியின் பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. ஆனால் அந்தத் தொழிலை அவன் மறந்து வெகு

* ராஜாஜி நடத்திய 'விமோசனம்' பத்திரிகையிலிருந்து.

புதிய ஷெரீப்



ஸ்ரீ டி. ஸி. கோத்தாரி சென்ற திங்கட் கிழமை ராஜ பவனத்தில் சென்னைக் கவர்னர் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் செய்து, ஹைகோர்ட்டுக்குச் சென்று ஷெரீப் பதவி ஏற்றார்.

காலமாயிற்று. அவனுக்கு மனைவியும், ஒரு பிள்ளையும், ஒரு பெண்ணும் இருந்தனர். மனைவியும் பதினைந்து வயதான பிள்ளையும் நன்றாக நெசவு செய்வார்கள். இவர்கள் சம்பாதிக்கும் பணத்தினால்தான் குடும்ப நிர்வாகம் நடந்து வந்தது. மனைவி வீட்டுக் காரியங்களைப் பார்ப்பாள். சின்னு முதலி நாடகம் நடிக்கும் இடங்களில் தனக்குக் கிடைக்கும் வெள்ளரிக்காய், வாழைப்பழம், வடை, முறுக்கு முதலிய பரிசுப் பொருள்களையும் கொண்டு வருவான். அப்பொழுதெல்லாம் குழந்தைகள் அவனை ஆவலுடன் எதிர்கொண்டு அழைப்பார்கள். அவனுக்குப் பணங்காசும் கிடைப்பதுண்டு. ஆனால் அது மட்டும் வீட்டுக்கு வராது. பின், எங்கே போயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

ஆம்; சின்னுமுதலியின் விதூஷக சாமர்த்தியங்களுக்கெல்லாம் பெரும்பாலும் ஆதாரமாயிருந்தது கள்ளு, சாராயந்தான். ஆரம்பத்தில் கள்ளுக் குடித்து வந்தான். ஆனால் நாளடைவில் கள்ளில் அவ்வளவு 'ஜோர்' பிறப்பதில்லை யென்றறிந்து, சாராயத்தில் புகுந்தான். கூத்து நடத்துபவர்கள், சாராயக்கடை எவ்வளவு தூரத்திலிருந்தாலும் முன்னால் ஆள் அனுப்பி இரண்டு புட்டி சாராயம் வாங்கி வந்து தயாராய் வைத்திருப்பார்கள். ஆனால் வருஷம் 365 நாளுமா கூத்து நடக்கும்? எனவே, கூத்தில் கிடைக்கும் பணம் மற்ற நாட்களுக்கு உபயோகமாகும். அத்துடன் சின்னு முதலிக்குத் தறிகள் செப்பனிடத் தெரியும். சிறு வயதில் பழகி யிருந்தான். இந்த வேலையில் கிடைக்கும் கூலிப் பணத்தையும் சாராயக் கடைக்கே அர்ப்பணம் செய்து வந்தான்.

அவன் மனைவி பத்மாவதிக்கு இது மிகவும் கஷ்டமாய்த்தான் இருந்தது. ஆனால் அவள் என்ன செய்ய முடியும்? 1921-ம் வருஷத்தில் நடந்த காந்தி இயக்கத்தின் போது ஊரில் ஒருமுறை கட்டுப்பாடு செய்தார்கள் – யாரும் குடிக்கக் கூடாது; குடித்தால் பதினைந்து ரூபாய் அபராதமென்று. ஆனால் பஞ்சாயத்தார் முதல் ஊர் ஜனங்கள் வரையில் எல்லாரும் ஒருமுகமாகச் சேர்ந்து சின்னு முதலி விஷயத்தில் மட்டும் விலக்குச் செய்து விட்டார்கள். அவன் குடிக்கா விட்டால் விதூஷக 'பார்ட்' போட முடியாது. அவன் விதூஷகனாய் வராவிட்டால் கூத்து எதுவும் ரசப்படாது. ஆகவே அவனை மட்டும் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கி யிருந்தார்கள். இந்த நிலைமையில் பத்மாவதி "குடிக்க வேண்டாம்" என்று சொன்னால் நடக்கிற காரியமா?

3

கலியாணம் ஆன புதிதில் பத்மாவதிக்குத் தன் கணவனைப் பற்றி மிகவும் பெருமையாயிருந்தது. எல்லாரும் அவனைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். அவன் விதூஷகனாய் நடிப்பதைப் பார்க்கப் பத்து மைல் தூரத்திலிருந்தும் ஜனங்கள் வந்தார்கள். ஆனால் பத்மாவதி மட்டும் வெகு நாள்வரை அவன் கூத்தைப் பார்க்கப் போகாமலிருந்தாள். பார்க்க வேண்டுமென்னும் ஆவல் அவளுக்கு மனத்திற்குள் நிரம்ப இருந்தது. ஆனால் வெட்கம் தடை செய்தது. கடைசியாக ஒருநாள் பக்கத்து ஊரில் கூத்துப் போட்ட போது அயல் வீட்டுப் பெண்கள் வற்புறுத்தி அவளைக் கூட்டிச் சென்றார்கள். கூட்டத்தின் ஓரத்தில் உட்கார்ந்து பத்மாவதி தன் புருஷன் மேடைக்கு வருவதை ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தாள்.

கோணங்கிக் குல்லாவும் விகாரமான உடைகளும் தரித்து, கூத்தாடிக் கொண்டு சின்னு முதலி மேடைக்கு வந்ததைப் பார்த்ததும் பத்மாவதிக்குப் பகீர் என்றது. அவன் செய்த கோரணி ஒவ்வொன்றும் பத்மாவதிக்கு அளவிலாத மனவேதனையை யளித்தது. அசங்கியமாகவும், அர்த்தமில்லாமலும் அவன் பேசிய பேச்சு அவளுக்கு நாராசமா யிருந்தது. இதற்கிடையில் மேடைக்கு மோகினிப் பெண் வந்தாள். விதூஷகன் அவளிடம் சென்று சிருங்காரப் பேச்சுகள் பேசலானான். "கண்ணே பொன்னே" என்று ஏதேதோ பிதற்றினான். பல்லைக் காட்டி இளித்தான். மோகினிப் பெண் அவன் கன்னத்தில் ஓர் இடி இடித்தாள். எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். சின்னு முதலியும் சிரித்தான். பத்மாவதிக்குக் கண்ணில் நீர் ததும்பிற்று. அவள் மெதுவாய் எழுந்திருந்து தன் ஊரை

நோக்கி நடந்தாள். கண்ணீர் விட்டு அழுது கொண்டே போனாள்.

இதற்குப் பிறகு, கூத்தாடப் போக வேண்டாமென்றும், குடிக்க வேண்டாமென்றும் அவள் சின்னு முதலிக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. அவன் ஒருவேளை கேட்பதாயிருந்தாலும் ஊரார் அதற்கிடங் கொடுக்கவில்லை. இவ்வாறு நாள் போய்க் கொண்டேயிருந்தது. அவனைச் சீர்திருத்தலாம் என்ற எண்ணத்தையே பத்மாவதி விட்டு விட்டாள். தன் குழந்தைகளே கதி என்றிருந்தாள். வீட்டுக்கு வந்தால் அவனுக்குச் சோறு போடுவாள். மற்றப்படி அவன் எங்கே போகிறான், என்ன செய்கிறான் என்று கேட்பதில்லை. அவனும் எப்போதும் ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருந்தான். ஊரிலிருந்தால் சாப்பாட்டு வேளைக்கு வருவான். உடனே போய் விடுவான். குடித்து விட்டு மட்டும் வீட்டுக்கு வருவதில்லை.

4

ஒரு சமயம் இரண்டு மாத காலம் வரையில் வெளியூர்களில் சுற்றிவிட்டு ஒரு நாள் மாலை வீட்டுக்கு வந்து சேர்ந்தான். உடம்பு சரியாயில்லை யென்றும், தலை வலிக்கிறதென்றும் கூறினான். உடம்பெல்லாம் பற்றி எரிகிறதென்று சொன்னான். அவன் முகம் மினுமினுவென்று பிரகாசித்தது. கண்கள் திரு திருவென்று விழித்தன: பத்மாவதி அவனுக்குச் சோறு போட்டு வீட்டிலேயே படுத்துக் கொள்ளச் சொன்னாள். அப்படியே படுத்துக் கொண்டான். ஆனால் தூக்கம் வராமல் முனகியவண்ணம் புரண்டு கொண்டேயிருந்தான். காலையில் வைத்தியனை அழைத்துக் காட்ட வேண்டுமெனப் பத்மாவதி எண்ணினாள். அவளும் குழந்தைகளும் பகலெல்லாம் வேலை செய்தவர்களாதலால் விரைவில் தூங்கிப் போனார்கள்.

பத்மாவதி ஏதோ சத்தம் கேட்டு விழித்தெழுந்தாள். அப்போது அவள் கண்ட காட்சி அவளை நடுநடுங்கச் செய்தது. அர்த்த ராத்திரி; மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. சின்னு முதலி தலையில் ஒரு பழைய முறத்தைக் கவிழ்த்துக் கொண்டு கூத்தாடிக் கொண்டிருந்தான். முறம் கீழே விழா வண்ணம் அவன் உடம்பையும் கைகளையும் நெளித்துக் கொடுத்து ஆடினான். பத்மாவதி இன்னதென்று சொல்வதற்கில்லாத பயங்கரமடைந்தாள். மெதுவாக எழுந்து அவனருகில் சென்றாள். சின்னு முதலி ஆடுவதை நிறுத்தி அவளை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தான். உடனே "கண்ணே பொன்னே" என்னும் விகாரமான கூத்தாடிப் பேச்சுகளை ஆரம்பித்தான். பத்மாவதியின் முகவாய்க் கட்டையைப் பிடித்தான்; பல்லை இளித்தான்.

பத்மாவதி தன்னை யறியாமல் பயங்கரமான கூச்சல் ஒன்று போட்டாள். இதனால் குழந்தைகள் விழித்துக் கொண்டார்கள். மறுபடியும் சின்னு முதலி பக்கத்திலிருந்த கூடை ஒன்றைத் தலையில் எடுத்து வைத்துக் கொண்டு ஆடினான். இதைப் பார்த்ததும் குழந்தைகளும் அழத் தொடங்கினார்கள். இதற்குள் சத்தம் கேட்டு அயல் வீட்டுக்காரர்கள் வந்து விட்டார்கள். எல்லாரும் சின்னுமுதலியைப் பிடித்துச் சமாதானவார்த்

முஸ்லிம் தேசபக்தர்



கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் தீவிர காங்கிரஸ்வாதியாக இருந்து, சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்ட பிரபல தேசிய முஸ்லிம் தலைவர் ஷாபி முகமது சென்ற ஞாயிற்றுக்கிழமை காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். சென்னை ஷெரீபாக இருந்த அவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இருபத்தைந்து வருஷகாலம் அங்கத்தினராக இருந்தார். சென்னை கார்ப்பொரேஷனிலும் பத்து வருஷங்கள் வரையில் அங்கத்தினராக இருந்து பணியாற்றினார். மற்றும் அண்ணாமலை சர்வகலாசாலை செனெட், சென்னை மகாஜன சபை, தென்னிந்திய வர்த்தகர் சங்கம் முதலிய பல்வேறு ஸ்தாபனங்களில் அங்கம் வகித்துத் தேசத்துக்கும் சமூகத்துக்கும் ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமைக்கும் தொண்டு புரிந்த அவரது மறைவைக் குறித்து. அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தைகள் சொல்லிப் படுக்க வைத்தார்கள். மறு நாள் காலையில் கொங்கணப் பட்டியிலிருந்து சமாசாரம் கிடைத்தது. அவ்வூரில் கூத்து நடந்து கொண்டிருந்த போது, சின்னா முதலியின் ஆர்ப்பாட்டம் வழக்கத்தைவிட அதிகமாயிருந்த தென்றும், அவன் திடீரென்று ஒரு கூச்சல் போட்டு, ஸ்திரீ வேஷம் தரித்திருந்தவனின் மூக்கைக் கடித்து விட்டு நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் நடுவில் புகுந்து ஓடினானென்றும், சிலர் அதுவும் ஒரு விகடம் என்று நினைத்துச் சிரித்தார்களென்றும், மற்றும் சிலர் "இன்று போதை அதிகம்" என்று பேசிக் கொண்டார்களென்றும், அப்படி ஓடியவன் திரும்பி வரவேயில்லையென்றும் கொங்கணப்பட்டியிலிருந்து வந்தவன் சொன்னான்.

சின்னா முதலியின் விதூஷக நடிப்பை இன்றும் நீங்கள் பார்க்கலாம். சத்திரப் பட்டிக்கு நீங்கள் சென்றால், அவன் தன் பிதிரார்ஜித வீட்டின் வாசல் திண்ணையில் உட்கார்ந்து அரட்டை யடித்த வண்ண மிருப்பதைக் காண்பீர்கள். கவிதைகளும், கீர்த்தனங்களும், அகட விகடங்களும், சிருங்காரப் பேச்சுகளும் அவன் சரமாரியாய்ப் பொழிந்து கொண்டிருப்பதைக் கேட்பீர்கள். ஆனால், கொங்கணப்பட்டிக் கூத்தில் செய்தபடி நடுவில் விழுந்தடித்து ஓடாவண்ணம், அவன் கால் ஒன்றைத் திண்ணையின் தூணுடன் சங்கிலியால் பிணைத்துக் கட்டியிருப்பதும் தெரிய வரும். உங்களைக் கண்டதும் அவன் 'ஒன்றரை டிராம்' சாராயம் வாங்கி வரும்படி கெஞ்சிக் கேட்பான். "ஆகட்டும்" என்று சொன்னால் சந்தோஷமாய்ப் பேசிச் சிரிக்கப் பண்ணுவான். மாட்டேன் என்றீர்களோ திட்டுவான். அந்த ஊர்ச் சிறுவர் சிறுமிகளுக்குங்கூட இன்னும் அவன் சிரிப்பு மூட்டித்தான் வருகிறான். ஆனால், அவன் மனைவி பத்மாவதி அவனைக் காணும் போதெல்லாம் கண்ணீர் விடுகிறாள்; குழந்தைகளோ வெட்கித் தலைகுனிகிறார்கள்.

திரிவேணியில் கலந்தார்!


கல்கி ஆசிரியரின் அஸ்தி சென்ற 1-டி கங்கையும் யமுனையும் கலக்கும் திரிவேணி சங்கமத்தில் வேத முறைப்படி கரைக்கப்பட்டது.

பொன்னி நதி பாயும் தமிழ் நாட்டில் மட்டுமன்றிக் கங்கையும் யமுனையும் பாயும் வட நாட்டிலும் கல்கியின் தமிழ் எவ்வளவு பேரை ஆட்கொண்டது; அவர் மறைவு எவ்வளவு பேரை உலுக்கி விட்டது என்பதை அன்று கண்கூடாகக் காண முடிந்தது.

கல்கி அவர்களின் அஸ்தியை, அவருடைய மருமகன் ஸ்ரீ வி. கோபாலன் அலகாபாத்துக்கு எடுத்துச் சென்றார். அலகாபாத் ஸ்டேஷனிலேயே கல்கி அவர்களின் புனித அஸ்திக்கு உள்ளூர்ப் பிரமுகர்கள் மலர்மாலை யிட்டு, மரியாதை செய்தனர். ரயில்வே சர்விஸ் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீ வி. ஜகந்நாத், அலகாபாத் சர்வகலாசாலை பேராசிரியர் ஸ்ரீ கே. ஆர். ஆர். சாஸ்திரி, அலகாபாத் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ பி. டி. டாண்டன், 'பாரத்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ சங்கர் தயாலு ஸ்ரீ வாஸ்தவா, 'லீடர்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ ஜிதேந்திர சிங், 'பாரத்' பத்திரிகையின் விளம்பர இலாக்கா மானேஜர் ஸ்ரீ சிவசங்கர் பாண்டேய், அலகாபாத் தென்னிந்தியர் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ வி. ராமன், உதவி காரியதரிசி ஸ்ரீ ஜி.வி. சலபதிராவ், அலகாபாத் பத்திரிகையாளர் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ சுசீல் தீக்ஷித் முதலியோரைக் குறிப்பிட வேண்டும்.

பின்னர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து காரில் அஸ்தி கொண்டு செல்லப்பட்டது. யமுனைக் கரையை அடைந்ததும், ஒரு படகு அமர்த்தி அதில் ஸ்ரீ கோபாலனும் மற்ற நண்பர்களுமாகச் சென்று கங்கை நீர் வந்து கலக்குமிடத்தில் வேத விதிப்படி அஸ்தி கரைக்கப்பட்டது. கங்கைத் தாயும் யமுனைத் தாயும் தங்கள் சகோதரி காவேரியின் புதல்வனைக் கண்களில் நீர் துளிக்க ஏற்றுக் கொண்டனர்!

அன்று மாலை ஸ்ரீமான் ஜகந்நாத் அவர்கள் இல்லத்தில் தென்னிந்தியர் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ எஸ். சுந்தரராமன் அவர்கள் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடந்தது. அப்போது அமிர்த பஜார் பத்திரிகையைச் சேர்ந்த ஸ்ரீ பிமல் சந்திர கோஷ், கல்கி அவர்களின் மறைவுச் செய்தி இந்தியா எங்கிலுமே பேரிடியாக வந்தது என்றார். பிறகு பேசிய ஸ்ரீ கே. ஆர். ஆர். சாஸ்திரி கல்கி அவர்கள் அரசியலுக்குச் செய்துள்ள தொண்டைப் பாராட்டினார். கல்கி பத்திரிகையே கல்கி அவர்களின் நிரந்தர நினைவுச் சின்னமாக விளங்க வேண்டுமென்று கூறினார். பின்னர் ஸ்ரீ எச். கிருஷ்ணன், ஸ்ரீ சுந்தரய்யர், ஸ்ரீ எஸ். கிருஷ்ண மூர்த்தி முதலிய பிரமுகர்களும் தங்கள் மரியாதையைத் தெரிவித்து, கடைசியில் ஓர் அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.



ஸ்ரீ எஸ். ஏ. எல். நாராயணராவ், ஸ்ரீ வித்யாபாஸ்கர், ஸ்ரீ என். டி. அகர்வால் முதலியவர்களும் இந்த அஸ்தி கரைப்பு வைபவத்தில் கல்கி அவர்களிடம் மிகுந்த பக்தியும், சிரத்தையும் காண்பித்து மிக்க உதவியுடன் பணியாற்றினர்.


IN NEW YORK...
9·48 pm.
IN NEW DELHI...
8·18 a.m.
(by your 'West End' Watch!)
At top:— Impression of New York, (U. S. A). Lower Picture shows the Assembly Buildings, New Delhi.
தேசத்திற்குத் தேசம் நேரம்மாறுபடக் கூடும். ஆனால் ஒரு "வெஸ்ட் எண்ட்" கடியாரத்தின் நம்பகம் எப்பொழுதும் நிலையாகவே இருக்கும். பரம்பரையாக மிக அநுபவம் வாய்ந்த தொழிலாளிகளின் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்படும் "வெஸ்ட் எண்ட்" கடியாரம், மற்ற கடியாரங்களை விட முன்னணியில் நிற்பதோடு மட்டுமல்லாது, நம்பகம், கவர்ச்சிகரமான தோற்றம், உறுதி இவைகளுக்கும் சிறப்புற்று விளங்குகிறது.
விவரமான இலவச கேட்லாகிற்கு எழுதவும்
The MATCHLESS (New Shape) Nickel Silver Rs. 101
West End
WATCH CO.
BOMBAY & CALCUTTA



அமிருத தாரை



அன்பின் சக்தி அதிசயமானது. கல்கி விட்டுப் போன தொடர் கதை நின்று போகாமல் மகள் ஆனந்தி தகப்பனார் வைத்திருக்கும் குறிப்புகளைக் கொண்டு எழுதிக் கொண்டு போவதாக தைரியமான ஒரு தீர்மானம் செய்திருக்கிறாள். ஆனந்தியின் பரத நாட்டியத்தைப் பார்த்து மெச்சாதார் இல்லை. தற்போது ஆனந்தியின் முக்கியமான பணி தன்னுடைய தாய் ருக்மணி அம்மையின் துயரத்தை ஆற்றிவருவது. அதில், தன் துக்கத்தைப் பெரும் பகுதி மறந்து வருகிறாள். **அமிர்ததாரையை** நின்று போகாமல் காப்பாற்றி கல்கி வாசகர்களுக்குத் தருவதாகத் தீர்மானித்திருப்பது மறைந்து போன தந்தைக்கு அருமை மகள் செய்யும் அரிய சிராத்தம். அதனால் அவளுடைய துக்கம் நம் எல்லோருடைய ஆசியின் பெருக்கத்தில் முற்றிலும் மறைந்து விடும்.

இராஜகோபாலாச்சாரி



[என் அருமைத் தந்தை இந்த "அமரதாரா" கதையை எழுத ஆரம்பித்த புதிதில் ஒரு நாள் நான் அவரிடம் "அப்பா! அமரதாரா கதையை ரொம்பப் பேர் மிகவும் பாராட்டுகிறார்கள். நான்கு வாரங்களுக்குள்ளேயே கதை மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்" என்றேன். என் தந்தை, "இந்தக் கதை தான் என்னுடைய கடைசிக் கதையாக இருக்கும். பிறகு நான் ரிடையர் ஆகி விடப் போகிறேன்" என்றார். நான் சிரித்துக் கொண்டே "ஆமாம்! நீங்கள் அப்படிச் சொன்னால் யார் விடப் போகிறார்கள்? இன்னும் பொன்னியின் செல்வனுக்குத் தொடர்ச்சியாக ஒரு நாவல் எழுத வேண்டாமா? உங்களால் எழுதாமல் இருக்கவே முடியாது" என்றேன்.

"இல்லை அம்மா! முப்பத்தைந்து வருஷம் எழுதியாச்சு. கொஞ்ச நாளாவது நிம்மதியாக இருக்க வேண்டாமா! ஒரு குடிசை போட்டுக் கொண்டு தனியாகக் கொஞ்ச காலம் இருக்கப் போகிறேன். இந்தக் கதையைப் பிரமாதமாக எழுதிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். "இந்தக் கதைதான் என் கடைசிக் கதையாக இருக்கும்" என்ற அவருடைய வார்த்தைகள் இப்படி விபரீதமான முறையில் நிறைவேறும் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை.

இத்தகைய துரதிர்ஷ்டத்திலும் அவர் இந்தக் கதை முழுவதையும் சுருக்கமாக எழுதி வைத்திருந்ததை ஒரு அதிர்ஷ்டமாகவே நான் கருதுகிறேன். சுருக்கமாக எழுதி வைத்திருந்ததையே அவர் வாரந்தோறும் விரிவுபடுத்தி எழுதி வந்தார். அன்னை தந்தையை இழந்த அநாதைப் பெண் இந்துமதி தன் சோகக் கதையை எழுதியது போல் இந்த நாவலை வரைந்திருக்கிறார் என் தந்தை. தந்தையை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் நானும் அந்தக் கதையைத் தொடர்ந்து எழுதி ஓரளவு எனக்கும் வாசகர்களுக்கும் ஆறுதல் தேடிக் கொள்ள எண்ணி இந்தப் பணியில் இறங்கி விட்டேன். தமிழன்னையின் அருளும், என் தந்தையின் ஆசியும், இந்தப் பணிக்கு வேண்டிய தைரியத்தை எனக்கு அளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். தந்தைக்கு நான் செய்யக் கூடிய ஒரு சேவை என்ற முறையிலே தொடரும் இம் முயற்சியில், எத்தனையோ குற்றங் குறைகள் இருக்கும். அவற்றையெல்லாம் நேயர்கள் மன்னித்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.]

பூர்வகதை

மரண தண்டனை பெற்றுச் சிறையில் வாடும் இந்துமதி தன் சோகக் கதையை எழுதுகிறாள்:

"பெரிய இந்தச் சிறைச்சாலையில் தனி அறையில் என்னை அடைத்து வைத்திருக்கிறார்கள். மரணத்தை விடக் கொடுமையான சித்தப் பிரமை எனக்கு ஏற்படாமலிருக்கும் பொருட்டும், ரங்கதுரையின் வேண்டுகோளுக்காகவும் நான் என் கதையை எழுதுகிறேன். நான் குற்றமற்றவள் என்பதையும், அவரிடம் நிரந்தரமான அன்பு வைத்திருக்கிறேன் என்பதையும், இதன் மூலம் அவர் அறிந்து கொண்டால் எனக்குப் போதுமானது.

என் சொந்தத் தந்தையைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் என்னை அருமையாக வளர்த்த தந்தை மந்திரமூர்த்தி அவரைப் பற்றிச் சொன்ன விவரங்களை இங்கே எழுதுகிறேன்.

மந்திர மூர்த்தி நல்ல செல்வந்தர். மனைவியை இழந்த தனி மனிதர். ஒரு சமயம் கோர்ட்டு விவகாரமாக வெளியூர் போய்த் திரும்பி வரும் போது, பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

ஆனந்தி

அப்போது என் தாய் தந்தையரான சந்திர மணியையும், காசிலிங்கத்தையும் சந்தித்தார்.

எட்டு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் மறுபடியும் என் தாய் தந்தையரைச் சந்தித்தார். என் தந்தை காசிலிங்கம், "குடியிருக்க வீடு கிடைக்குமா?" என்று கேட்டார். தமது வீட்டைக் காட்டலாம் என்று சாவி எடுத்து வர மந்திரமூர்த்தி உள்ளே சென்ற சமயத்தில், ஒரு மோட்டார் சைக்கிள் தெரு வழியே சென்றது. அதன் சத்தத்தில் மிரண்ட ஒரு குரங்கு சந்திரமணி இருந்த வண்டி மேல் பாய, மாடுகள் மிரண்டு நகர்ந்தன. வண்டியின் பின் சக்கரங்கள் ஒரு பள்ளத்தில் இறங்கி விடவே சந்திரமணி உருண்டு விழுந்தாள். அப்போது அவள் பூரண கர்ப்பிணி. பிறகு மூவரும் சாப்பிட்டுவிட்டு அருவிக்கரை பங்களாவைப் பார்க்கச் சென்றார்கள். அங்கேயே தங்குவதென்று தீர்மானித்தார்கள்.

இதற்கிடையில் மந்திரமூர்த்தி காசிலிங்கத்தைப் பற்றிய விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டார். காசிலிங்கம் மிகப் பலசாலி. சிறுவயதிலேயே சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து விட்டார். ஒரு சமயம் வேறூருக்குச் சென்றிருந்த போது சந்திரமணியைச் சந்தித்தார்.

சந்திரமணியின் தாயாருக்குச் சொத்துக்கள் இருந்தன. சந்திரமணியின் மாமன்மார்கள் இருவரும் அதைப் பிடுங்கிக் கொண்டுவிட முயற்சித்து வந்தார்கள். இதற்காகத் தங்களில் ஒருவரே அவளைக் கலியாணம் செய்து கொண்டு விடுவது என்று தீர்மானித்திருந்தார்கள். இதையெல்லாம் அறிந்து கொண்ட காசிலிங்கம், தாயாரின் சம்மதத்துடன் சந்திரமணியை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார். ஸ்ரீ முருகன் சந்நிதியில் மணந்து கொண்டார்கள். இந்தச் சமயத்தில்தான் மந்திரமூர்த்தியை முதலில் பஸ்ஸில் சந்தித்தார்கள். தங்களை யாரோ விரோதிகள் தொடர்ந்து வருகிறார்கள் என்ற பயத்தினால் சொல்லாமல் கிளம்பி விட்டார்கள். பிறகு சந்திரமணியின் கால் வைத்தியத்துக்காக ரொம்பச் செலவாயிற்று. காசிலிங்கத்துக்குக் கிடைத்திருந்த 'டிரில் மாஸ்டர்' உத்தியோகத்தையும், எஸ். என். ஈசுவர மூர்த்தி என்பவரின் மூலமாகச் சந்திரமணியின் மாமன்மார்கள் பிடுங்கி விட்டார்கள். இத்தகைய நிராதரவான நிலையில் தான் இருவரும் குங்குமத் துறைக்கு வந்து சேர்ந்தார்கள். வந்து சேர்ந்த இரண்டு மாதங்களில் நான் பிறந்தேன். எல்லோரும் ஆனந்தமாகச் சில நாட்கள் இருந்தார்கள்.

குங்குமத்துறை ஜமீன்தாருக்குச் சொக்கையா என்று ஒரு மைத்துனன் இருந்தான். யாவரும் அவனை வெறுத்தனர். அவனுக்கு ஜமீன்தார், காசிலிங்கத்துடன் பழகுவது பிடிக்கவில்லை. மந்திரமூர்த்தியையும் அவனுக்குப் பிடிக்காது. ஒருநாள் காசிலிங்கமும் ஜமீன்தாரும் வேட்டைக்குப் போயிருந்தனர். மந்திர மூர்த்தியும் வீட்டில் இல்லை. சந்திரமணி தனியாக இருந்த போது சொக்கையா போலீஸ்காரர்களுடன் வந்து, காசிலிங்கம் ஜமீன்தாரைக் கொன்று விட்டதாகக் குற்றம் சாட்டினான். மந்திர மூர்த்தி சமயத்தில் வந்து, இங்கே ஜமீன்தார் செத்துப் போயிருந்த அதே நேரத்தில் திருநந்திபுரத்தில் கலாட்டா செய்ததாகக் காசிலிங்கம் கைது செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவித்தார். இதனால் காசிலிங்கம் கொலைக் குற்றத்திலிருந்து தப்பினாலும், எஸ். என். ஈசுவர மூர்த்தியின் வீட்டில் புகுந்து கலாட்டா செய்ததற்காக ஒன்றரை வருஷம் தண்டனை அடைந்தார். என்னையும் என் அன்னையையும் காப்பாற்றும் முழுப் பொறுப்பையும் மந்திரமூர்த்தி ஏற்றுக் கொண்டார்.

சிறையிலிருந்து வந்த பிறகு காசிலிங்கத்தின் போக்கு வெகுவாக மாறி விட்டிருந்தது.

காசிலிங்கம் தான் மறுபடியும் சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து விடுவதாகக் கூறியபோது சந்திரமணி மனமுடைந்து போனாள். என்ன சொல்லியும் கேளாமல் காசிலிங்கம் போய்விட்டார். சில மாதங்களுக்கு ஒரு தடவை வந்து கொண்டிருந்தார். என் அன்னை மீது வைத்திருந்த அன்பு மாத்திரம் என்னளவும் மாறவில்லை. ஒரு தடவை வந்த போது, "சந்திரமணியின் மாமன்மார்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று சொல்லி மூவாயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்து விட்டுப் போனார். அன்று என் தந்தையைப் பார்த்தது மங்கலாக நினைவிருக்கிறது. அன்று விடைபெற்றுக் கொள்ளும்போது தான் மலாய் நாட்டுக்குப் போய் நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு இரண்டு வருடங்களில் திரும்பி வருவதாகக் கூறிச்சென்றார். பிறகு சில சமயம் தலை காண்பிப்பார். பின்னர் காணவே இல்லை.

எனக்குப் பதினைந்து பிராயமாக இருந்த போது ஒரு நாள் கொட்டிலில் இருந்து கன்றுக் குட்டி அவிழ்த்துக் கொண்டு ஓடி விட்டது. அதைப் பிடிக்க நான் ஓடினேன். அந்தச் சமயத்தில் எதிரே ஒரு கார் வந்தது. அதிர்ஷ்டவசமாக டிரைவர் பிரேக்கைப் போட்டதால் பிழைத்தேன். காரில் தங்க பாண்டியனும் ஒரு புதிய இளைஞரும்

இருந்தனர். அன்று முழுதும் அந்தப் புதிய மனிதரின் நினைவாகவே இருந்தது.

குங்குமத் துறையில் பாதிரித் தோட்டம் என்று ஒரு தோட்டம் இருந்தது. அதில் ஒரு சிவப்புப் பங்களா உண்டு. அத்தோட்டத்தின் ஓரத்தில் இருந்த சிறிய வீட்டில் என் உபாத்தியாயினியான சுசீலா என்னும் கிறிஸ்துவப் பெண்மணி இருந்தார். அவர் மிகவும் நல்லவர். என்னிடம் தனியாக வாஞ்சை உள்ளவர். காலஞ்சென்ற ஜமீன்தாரின் புதல்விகளுக்குத் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டுக்குப் போயிருந்த போது அந்தப் புதிய மனிதரைப் பற்றிச் சிறிது அறிந்து கொண்டேன். அவர் பெயர் ரங்கதுரை என்றும், சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமாக வந்திருக்கிறார் என்றும் சுசீலா அம்மாள் கூறினார்.

பின்னர், ரங்கதுரை வந்து மந்திர மூர்த்தியைப் பார்த்த போது கோயில், கோட்டை முதலியவற்றைப் பற்றிக் கேட்டார். மந்திரமூர்த்தியும் உற்சாகமாக அவருக்குத் தெரிந்தவற்றைக் கூறினார். ரங்கதுரை போட்டோ ஆல்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது என் தந்தை காசிலிங்கத்தின் படத்தை மிகவும் கவனித்துப் பார்த்தார். அவர் என் தந்தையைப் போன்று சாயலுடையவரைச் சந்தித்திருக்கலாமென்று எனக்குத் தோன்றியது.

பிறகு ஊமையன் கோட்டைக்கும், குமரன் கோயிலுக்கும் போவதைப் பற்றி ரங்கதுரை கேட்டார். மந்திர மூர்த்தி உற்சாகமாக ஒப்புக் கொண்டார். அடுத்த வாரத்தில் ஒரு நாள் போவதாக நிச்சயித்திருந்தோம்.

அத்தியாயம் 27

வாக்குறுதி

நாம் நினைக்கிறபடி இந்த உலகத்தில் எந்தக் காரியமுமே நடப்பதில்லை. நம்மையும் மீறிய ஒரு சக்தி நம்மை எங்கெங்கேயோ இழுத்துச் செல்லுகிறது. மலை உச்சியில் ஏற்றி வைக்கிறது. அதல பாதாளத்தில் தள்ளுகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பது நமக்குப் புரிவதே இல்லை.

என்னை அருமை பெருமையுடன் வளர்த்த தந்தை மந்திரமூர்த்தி பகவத் கீதையைப் படித்து எனக்குச் சொல்லியிருக்கிறார். என்னைப் படிக்கச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார். எனக்கோ அப்போதெல்லாம் சிறிய வயது. கையில் கீதை இருக்கும். மனம் எங்கெங்கோ சுற்றி அலைந்து கொண்டிருக்கும். ஆனாலும் சில விஷயங்கள் மட்டும் நன்றாக ஞாபகம் இருக்கிறது.

"மரணம் என்பதற்கு அஞ்ச வேண்டியதில்லை. நமக்கு வேண்டாத உடையை எறிந்து விட்டு வேறு உடை தரித்துக் கொள்வது போல நமக்கு வேண்டாத உடலை விட்டு ஜீவன் பிரிகிறது" என்றெல்லாம் படித்திருக்கிறேன். ஆயினும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஏதேனும் நேரும்போது இந்த நினைப்பே வருவதில்லை. "ஐயோ இப்படி நேர்ந்து விட்டதே. இது தெய்வத்துக்கு அடுக்குமா? தெய்வம் என்று ஒன்று இருந்தால் அதற்குக் கண்ணிருக்காதா?" என்றெல்லாம் எண்ணுகிறோம். பொறுக்க முடியாத துன்பம் என்று நினைத்ததை எல்லாம் பல காலத்துக்குப் பிறகு "கடவுளின் கருணை" என்றே நினைக்க வேண்டியிருப்பதை நான் நன்றாக இப்போது உணர்கிறேன்.

குமரன் கோயிலுக்கும், ஊமைத் துறைக் கோட்டைக்கும் போவதாகத் தீர்மானித்தோமே. இரண்டு நாட்கள் முன்னதாகப் போயிருந்திருக்கக் கூடாதா? நாங்கள் எதற்காகத் திங்கட் கிழமையைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்?

ரங்கதுரையைச் சந்தித்த நிமிஷம் முதலே ஆகாய வெளியில் துள்ளித் திரிந்துகொண்டிருந்த என் மனத்தை இப்போது என்னால் கட்டுக்குள்ளே வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவரோடு மலைமேல் ஏறுவது, அருவி



யைப் பார்ப்பது, புஷ்பங்களைப் பார்த்து மகிழ்வது எல்லாவற்றையும் மனத்தில் நினைத்துக் கொண்டாலே இன்பமாக இருந்தது. மலையும், பூவும், காடும், அருவியும் எனக்கு ஒன்றும் புதிது அல்லவே. ஆயினும் அவருடன் போய்ப் பார்க்கும் போது நான்கு மடங்கு அதிகமான மகிழ்ச்சி உண்டாகும் எனத் தோன்றிற்று. மூன்று நாட்களுக்கு முன்னதாகவே நான் கோட்டைக்குப் போக ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டேன். அதுவரை நான் பாவாடையும் தாவணியும்தான் அணிந்து கொண்டிருந்தேன். அதைக் கூடச் சிரத்தையாக உடுத்திக் கொள்ள மாட்டேன். தண்ணீரிலும் சேற்றிலும் அலைந்து பாவாடையின் ஓரமெல்லாம் அழுக்காக இருக்கும். ஆனால் மூன்று நாட்களுக்கு முன்னமேயே குமரன் கோயிலுக்குப் போகும் போது — இல்லை — ரங்க துரையுடன் போகும்போது, புடவைதான் உடுத்திக் கொள்வது எனத் தீர்மானித்தேன். என் அருமைத் தந்தை ஏதோ கோர்ட்டு விஷயமாக வெளியூருக்குப் போயிருந்த பொழுது தங்க மாம்பழத்தைப் போன்ற நிறத்தில் ஒரு சேலை வாங்கிக் கொண்டு வந்திருந்தார். அதையும் அதற்கு ஏற்ற சிவப்பு நிற ரவிக்கையும் அணிந்துகொள்வது என்று எடுத்துப் பெட்டியில் மேலாக வைத்திருந்தேன்.

மறுநாள் அம்மாவிடம் "அம்மா நான் புளிக் காய்ச்சல் செய்யக் கற்றுக் கொள்ளப் போகிறேன்" என்றேன். அம்மா சிரித்துக்கொண்டே "உனக்குக் கூடவா சமையல் செய்ய ஆசையாக இருக்கிறது?" என்றாள். "ஆமாம் அம்மா, என்ன செய்ய வேண்டும் என்று சொல், நானே செய்கிறேன்" என்று சொல்லி விட்டு அடுப்பை மூட்டிக் கல் சட்டியைப் போட்டேன். பிறகு என் தாயார் சொன்னமாதிரியே பக்குவமாய்ச் செய்து வைத்தேன். அதை நாளைக்குப் பிசைந்து எடுத்துக்கொண்டு போய் மலைமேல் ரங்க துரையுடன் சாப்பிடுவோம் என்ற எண்ணமே என் உள்ளத்தை யெல்லாம் தித்திக்கச் செய்தது.


ரங்கதுரை அன்று மாலை தங்கபாண்டியனுடன் மறுபடியும் வந்தார். சிறிது நேரந்தான் இருந்தார். பண்ணையார் மந்திர மூர்த்தியும் என் தாயாரும் அருகிலேயே இருந்தபடியால் நான் ஒன்றும் சொல்ல இயலவில்லை.

"நாம் நாளைக் கண்டிப்பாய்ப் போவோம். காலை ஏழு மணிக்கு இங்கு வந்து விடுகிறேன். சீக்கிரமாகவே புறப்பட்டு விடுவோம்" என்றார் ரங்கதுரை. அவர் என்னைப் பார்த்துக் கொண்டே தான்பேசினார். ஆனால் என் தந்தை பதில் சொன்னார் :- "ஆகட்டும், அப்போது தான் வெகு நேரம் சுற்றிப் பார்த்து விட்டு இருட்டுவதற்கு முன் திரும்ப முடியும்" என்றார். தங்க பாண்டியன் அவரை அவசரப்படுத்தி அழைத்துக் கொண்டு போய் விட்டார்.

மறு நாள் அதிகாலையில் எழுந்திருந்து நானே அடுப்பைப் பற்றவைத்துச் சாதம் வடித்தேன். முதல் நாள் செய்து வைத்திருந்த புளிக் காய்ச்சலைச் சேர்த்துச் சாதம் பிசைந்தபோது என்னுள்ளம் எவ்வாறு குளிர்ந்தது தெரியுமா? பிறகு தயிர் சாதமும் பிசைந்து வைத்து விட்டு ஸ்நானம் செய்தேன். நான் இரண்டு நாட்கள் முன்னதாகவே தேர்ந்தெடுத்து வைத்திருந்த மாம்பழ வர்ணச் சேலையை உடுத்திக் கொண்டு கண்ணாடியில் என்னை அழகு பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. ஓட்டமாக ஓடிப் போய்ப் பார்த்தேன். ரங்கதுரை தான் உள்ளே வந்து கொண்டிருந்தார். அவர் தோளிலிருந்து ஒரு காமிரா தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு சிறிய பையும் அவர் கையில் இருந்தது. அவரைப் பார்த்ததுமே என்னுடைய முகம் மலர்ந்திருக்க வேண்டும்.

"உன் பெயர் இந்துமதி என்றுதான் நினைத்திருந்தேன். ஸ்வர்ணமுகி என்றிருந்தால் மிகப் பொருத்தமாக இருக்கும். இளஞ் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் உன் தங்க நிறச் சேலையில் விழுந்து உன் முகத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றன" என்றார். அந்த வார்த்





தைகள் தேவலோகத்து மந்தார புஷ்பங்கள் பொல பொல வென்று உதிர்வது போல என் காதுகளில் விழுந்தன. "ஸ்வர்ண முகி" என்று உள்ளத்திற்குள் நானே சொல்லிக் கொண்டேன். அவரைப் பற்றி அந்த மாதிரி ஏதாவது அழகாகச் சொல்ல வேண்டு மென்று நினைத்தேன். ஆனால் ஏனோ என்னை யறியாமல் நாணம் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டு பேச முடியாமல் செய்து விட்டது!


அதற்குள் மந்திரமூர்த்தி ஸ்நானம் செய்து விட்டு வந்து விட்டார். நான் பேச வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, "ஓ! நீங்கள் போட்டோ கூட எடுப்பீர்களா? கையோடு காமிராவையும் கொண்டு வந்திருக் கிறீர்களே, உங்க ளுடையதா?" என்று கேட்டு வைத்தேன்.

"எனக்கு போட்டோ எடுக்கத் தெரியும். ஆனால் காமிரா தங்க பாண்டியனுடையது. என்னுடைய ஜாதக விசேஷமே எனக்கு ரொம்ப வேண்டிய பொருள்க ளெல்லாம் மற்றவர்க. ளிடந்தான் இருக்கும்!" என்று என்னைப் பார்த்துச் சிரித் துக் கொண்டே கூறினார்.

மந்திர மூர்த்தி யும், "அட, இந்து! இவ்வளவு சீக்கி ரம் தயாராகி விட்

டாயே! இதோ நானும் வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே சட்டை போட்டுக் கொண்டார். தன் தலையைத் தட்டி முடிந்து கொண்டார்.

இந்தச் சமயத்தில், "இந்து" என்று என் தாயாரின் அலறல் கேட்டது. நான் ஓட்டமாக ஓடினேன். என் அருமை அன்னை குப்புறப் படுத்துக்கொண் டிருப்பதைப் பார்த்தேன். அவள் முகம் கறுத்திருந்தது. அளவிலாத வேதனையை அந்த முகம் காட்டியது. நான் துடித்துப் போனேன். என் அன்னையின் முகம் அவ்வளவு வேதனை யைக் காட்டியதை நான் பார்த்து வெகு கால மாயிற்று. என் தங்கை காசிலிங்கம் வந்துவிட்டுப் போன அன்றுதான் அத்தனை வேதனை அவள் முகத்தில் கண்டதாக எனக்கு ஞாபகம். அப்படியே அவளை இரு கைக ளாலும் சேர்த்து எடுத்து மடியின் மேல் சாய்த்துக் கொண்டு, "அப்பா! அப்பா!" என்று நான் கத்தினேன். முதலில் ரங்கதுரை தான் ஓடி வந்தார்.



அவருடைய முகத்தில் இருந்த கலவரத்தைப் பார்த்ததுமே எனக்கு இனந் தெரியாத ஒரு ஆறுதல் உண்டாயிற்று. என்னுடைய துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்ளவும் என்னுடைய கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளவும் ஒருவர் இருக்கிறார் என்று ஒரு எண்ணம் அப்போது எனக்கு உண்டாயிற்று!

அம்மாவுக்குப் பெருமூச்சு வாங்கியது. "என்னம்மா, என்ன செய்கிறது?" என்று ரங்கதுரை கேட்டார். "மார்பை வலிக்கிறது" என்றாள் என் அன்னை. அவ்வளவுதான்; உடனே அவள் பிரக்ஞை இழந்தாள். ரங்கதுரை ஓடிப் போய்த் தண்ணீர் கொண்டு வந்தார். சிறிது எடுத்து முகத்தில் தெளித்தார். அதற்குள் அப்பா வரவே, "நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று சொல்லி விட்டு ஓடினார்.

அரை மணி நேரம் நிம்மதியில்லாமல் ஒரே பரபரப்பாய்க் கழிந்தது. டாக்டரை அழைத்துக் கொண்டு தங்கபாண்டியனுடன் காரில் வந்து இறங்கினார் ரங்கதுரை. அதற்குள் தாயார் கண்களைத் திறந்து சிறிது தண்ணீர் பருகினாள். டாக்டர் வந்து சோதித்துப் பார்த்து விட்டு, "எத்தனை நாளாக இப்படி இருக்கிறது?" என்று கேட்டார். என் அன்னை மிகவும் ஈனமான குரலில், "இரண்டு மாதங்களுக்கு முன்னால் இப்படி ஒரு நாள் மார்பை வலித்தது. ஆனால் ஒன்றரை மணி நேரத்திற் கெல்லாம் சரியாகி விட்டது. வலியும் பொறுக்கும் படியாகத்தான் இருந்தது. இன்றுதான் தாங்க முடியவில்லை" என்றாள்.

"நீங்கள் உடனே யாரிடமாவது சொல்லி யிருக்க வேண்டும். ஓய்வு எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்!" என்றார் டாக்டர்.

நான் கவலையுடன், "டாக்டர்! அம்மாவுக்கு என்ன உடம்பு?" என்றேன்.

டாக்டர், "ஒன்றுமில்லை அம்மா! நீ கவலைப்படாதே" என்று என்னிடம் சொல்லி விட்டு ரங்கதுரையை வாசலுக்கு அழைத்துச் சென்று ஏதோ பேசிக் கொண்டிருந்தார். சற்று நேரங் கழித்து "டாக்டர் என்ன சொன்னார்?" என்று நான் ரங்கதுரையைக் கேட்டேன். அவர் மிகவும் ஆதரவுடன், "இந்து! உன்னிடம் சொல்லத்தான் வேண்டும். அதனால் சொல்லுகிறேன். உன் தாயாருக்கு இதயம் பலஹீனமாக இருக்கிறதாம். கவலையையும் துக்கத்தையும் உள்ளத்திலேயே வைத்துக் கொண்டு மறுகி மறுகி அவள் இதயம் பலஹீனமாகி விட்டது. நீ ரொம்ப ஜாக்கிரதையாக அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்றார். இப்படி அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே எனக்குக் கண்ணீர் பெருகி வழிந்தது.

"என்ன இந்து! நீ இப்படி வருந்தலாமா? தைரியமாக இருக்க வேண்டும், அம்மா!" என்றார் ரங்கதுரை.

"நீங்களும் அப்பாவும் இன்று குமரன் குன்றுக்குப் போய் விட்டு வாருங்கள். காமிராவை வேறு கொண்டு வந்து விட்டீர்கள். எதற்காகப் போகாமலிருக்க வேண்டும்?" என்று சொன்னேன். அதற்குள் மந்திரமூர்த்தி அங்கே வந்தார்.

எனக்கு அழுகையே வந்து விட்டது. ஆனாலும் அடக்கிக் கொண்டு "ஆமாம்! நான் பிசைந்து வைத்த கட்டுச் சாதமெல்லாம் வீணாகப் போகிறது. நீங்கள் போய்விட்டு வாருங்கள்" என்று சற்று ஆத்திரத்துடனேயே கூறினேன். என்னுடைய ஏமாற்றத்தை ரங்கதுரை உணர்ந்திருக்க வேண்டும்.

என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து விட்டு, "இல்லை! இல்லை! இன்று போகவே வேண்டாம். அம்மாவை இப்படி விட்டு விட்டு வந்தால் உங்களுக்கும் இருப்புக் கொள்ளாது; எனக்கும் ரஸிக்காது. இந்துவுக்கும் ஏமாற்றமாக இருக்கும். கட்டுச் சாதமெல்லாம் வீணாகப் போவானேன்? இங்கேயே சாப்பிட்டு விடுவோம்" என்றார். அந்த வார்த்தைகள் என் காதில் தேன் துளிகளைப் போல் இனித்தன. என்னை விட்டுவிட்டுப் போக அவருக்கும் இஷ்டமில்லை என்று தெரிந்தது, எனக்கு அளவிலாத மகிழ்ச்சியை ஊட்டியது. என் அன்னையை அவர் "அம்மா" என்று குறிப்பிட்டது இன்னும் மகிழ்ச்சி யளித்தது.

மூவருமாக என் அன்னை படுத்திருந்த இடத்துக்குப் போனோம். "அம்மா! நாங்கள் இன்று குமரன் குன்றுக்கும், கோட்டைக்கும் போகவில்லை. இன்னொரு நாள் போகிறோம்" என்றேன்.

பொறுமையே அவதாரமான என் அன்னை அப்பொழுது கூட, "எனக்கு இப்போது ஒன்று மில்லையே, இந்து! நீங்கள் தாராளமாகப் போய் விட்டு வரலாமே!" என்றாள்.

ரங்கதுரை, "அம்மா! உங்களை இந்த நிலையில் விட்டு விட்டுப்போக எப்படி

மனம் வரும்? இந்துவை விட்டுப் போனால் எங்களுக்கும் வருத்தமாக இருக்கும். குன்றுதான் எங்கே ஓடிவிடப் போகிறது? நாங்கள்தான் எங்கே போய் விடப் போகிறோம்? அடுத்த வாரம் போனால் போகிறது" என்றார்.

என் அருமை அன்னை ஒரு புன்னகை செய்தாள். அவள் முகம் ஒரு தனியான சோபை பெற்று விளங்கிற்று. "பாவம்! இந்துவுக்கு எப்போதும் என்னால் சிரமம்தான்" என்றாள்.

அன்று முழுதும் ரங்கதுரை எங்களுடனேயே இருந்தார். மத்தியானம் "அப்பாவையும், ரங்கதுரையையும் சாப்பிடச் சொல்லு, அம்மா!" என்றாள் என் அருமை அன்னை.

அப்பாவுக்கும் ரங்கதுரைக்கும் பரிமாறும்பொழுது, "ரங்கதுரை! குழந்தைதான் இன்று எல்லாக் காரியமும் செய்தாள். புளிக் காய்ச்சல்கூட அவளே காய்ச்சினாள்" என்றாள்.

"ஓ, அப்படியா! அதனால்தான் புளியோதரை புளிக்காமல் இத்தனை இனிக்கிறது போலும்!" என்றார் ரங்கதுரை. நானும் நாணத்துடன் பரிமாறினேன்.

சாப்பிட்டதும் என் தங்கை எங்கோ வெளியில் போனார். நான் உள்ளே ஆக வேண்டிய காரியங்களைச் செய்யப் போனேன். எனக்கு ரங்கதுரையோடு அம்மா பேசுவதைக் கேட்க ஆவலாக இருந்தது. நான் குழந்தையாக இருந்தபோது அம்மாவுக்கு ஒத்தாசையாக இருந்த சத்திரத்து அண்ணி தன் மகன் வீட்டுக்குப் போய் விட்டார். அவர் சிவலோகப் பிராப்தி அடைந்தே ஆறு வருஷங்கள் ஆகிவிட்டிருந்தன. அதன் பிறகு என் தாயார் யாரையும் வீட்டில் வைத்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. தானே வீட்டு வேலைகளையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்தாள். மந்திரமூர்த்திக்குத் தான் பாரமாக இருப்பதற்கு எந்த விதத்திலேனும் ஈடு செய்ய வேண்டுமென்று அவள் கருதியிருக்க வேண்டும். ஆகையால் நானும் விவரம் தெரிந்த பிறகு கூடிய வரையில் அவளுக்கு உதவியாக இருந்து வந்தேன்.

ஆனால் அன்றைய தினம் எனக்கு வேலையே ஓடவில்லை. "ஹார்லிக்ஸ் கொண்டு வரட்டுமா, அம்மா!" என்று ஒரு தடவை கேட்டு விட்டு வந்தேன். "காப்பி போட்டுத் தரட்டுமா?" என்று ஒரு தரம் கேட்டேன். "மார்பு வலி இல்லாமலிருக்கிறதா?" என்று கேட்டேன். "மணி என்ன ஆகிறது? மருந்து கொடுக்க நேரமாகி விட்டதா?" என்றெல்லாம் சற்றைக்கொரு முறை கேட்டு விட்டுக் கேட்டு விட்டு வந்தேன். சமையல் அறை பின்னால் தள்ளியிருந்தது எனக்கு வேதனையாக இருந்தது.

ஒருவாறு வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு வந்தபோது என்னைப் பற்றி என் தாயார் ஏதோ சொன்னது என் காதில் விழுந்தது. உடனேயே மறைந்திருந்து என்ன சொல்லுகிறாள் என்பதைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் இயல்பாக உள்ளத்தில் எழுந்தது.

"இந்து பாவம்! உலகமறியாத குழந்தையாக இருந்தாள். உன்னைப் பார்த்தது முதல் அவள் நடை உடை பாவனைகளில் எனக்கு வித்தியாசம் தெரிகிறது. ரங்கதுரை! உன்னிடம் மனம் விட்டு நான் சொல்லுகிறேன். இந்துவின் தந்தையைப் பார்த்த உடனே நான் எப்படியிருந்தேனோ, அதே போல் இந்து இப்போது இருக்கிறாள். அவள் முகம் மலர்கிறது. தன்னையறியாமலேயே சில சமயம் சிரித்துக் கொள்கிறாள். உலகத்தில் இப்படி ஏற்படுகிற அன்புதான் சாசுவதமானது. அதை நினைக்க நினைக்க என் உள்ளம் பெருமிதத்தால் பூரிக்கிறது. என் கண்மணி இந்துவும் தன் மணவாழ்க்கையில் பரிபூரண இன்பத்தை அடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஒரே ஆசை" என்று சொல்லி நிறுத்தினாள்.

"அம்மா! நான் ஒரு அனாதைச் சிறுவன். எனக்குச் சொத்து, மனிதர்கள் ஒன்றும் கிடையாது. ஏதோ அதிர்ஷ்டவசமாகப் பள்ளியிலும் காலேஜிலும் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. ஸ்காலர்ஷிப்பிலேயே சீமைக்குப் போய் மேல் படிப்பையும் முடித்துவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்......"

என் தாயார் குறுக்கிட்டு, "ரங்கதுரை! இதையெல்லாம் நான் உன்னைக் கேட்கவில்லையே. ஒன்று மட்டும் பதில் சொல்லு. என்னைப் பற்றியோ, அல்லது என் கணவரைப் பற்றியோ, நாங்கள் மணந்து கொண்ட விதத்தைப் பற்றியோ உனக்கு எவ்விதத் தப்பெண்ணமும் இல்லையே?" என்று கேட்டாள்.

"அம்மா! நீங்கள் இப்படிக் கேட்பதை என்னால் தாங்க முடியவில்லை. அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இந்து என்னை மணந்து கொள்ள விரும்பினால் அதைவிட ஆனந்தத்தை அளிக்கக்

கூடிய விஷயம் எனக்கு ஒன்றுமே கிடையாது!" என்றார்.

என் மனம் ஆனந்தத்தால் விம்மியது. ஓடிச் சென்று என் தாயாரின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டுமென்று என் மனம் துடித்தது.

"ரங்கதுரை, என் மனத்தில் ஏதோ அதைரியமாயிருக்கிறது. நான் பிழைக்க மாட்டேனென்று ஏதோ ஒன்று சொல்கிறது. நான் அவரைப் பிரிந்து இத்தனை நாள் பட்ட துன்பம் போதும் என்று என்னைப் பராசக்தி தன் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்ளும் நாள் நெருங்கி வந்து விட்டதாக எண்ணுகிறேன்" என்றாள் என் தாயார்.

"அம்மா! நீங்கள் இவ்வாறு பேசவே கூடாது. தைரியம்தான் வியாதிக்கு முக்கியமான மருந்து. ஒரு கவலையும் கூடாது. இந்துவைக் கவனித்துக் கொள்ள மந்திரமூர்த்தி யிருக்கிறார். நான் இருக்கிறேன். நீங்களும் இருந்து கவனித்துக் கொள்ளுவீர்கள்."

"நான் சொல்வதைச் சற்றுப் புரிந்து கொள், ரங்கா. நான் சின்னக் குழந்தையில்லை. என்னைத் தேற்ற வேண்டிய அவசியமுமில்லை. புண்ணியவானான மந்திரமூர்த்தி எத்தனையோ வருஷமாக என் தந்தையாகவே இருந்து வந்திருக்கிறார். ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் அவரையும் பிடித்திருக்கிறது. எனக்குத் தெரியாதென்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். எனக்குத்தான் ஒரு சொத்தும் வந்து சேரவில்லை. ஆனால் இந்தப் பாழாய்ப்போன சொக்கையாப்பாண்டியனின் உபத்திரவத்தால் அப்பா இழந்திருக்கும் சொத்துக்களுக்கு மதிப்பே இல்லை. அவனும் அவன் வைரக்கடுக்கனும்! பாவி! என்ன புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளப் போகிறானோ? இந்த வீடுகளையெல்லாம் வைத்து அப்பா கடன் வாங்கி இருக்கிறார். அவரும் ரொம்பத் தெம்பு தைரியமாக இல்லை. அவருக்கும் ஏதேனும் . நேர்ந்து விட்டால் குழந்தை இந்துமதியின் கதி என்னவாகும் என நினைப்பதற்கே மனம் நடுங்குகிறது. அதனால்தான் உன்னிடம் இப்படி மனம் விட்டுப் பேசுகிறேன். என்ன கஷ்டம் வந்தபோதிலும் அவளைக் கைவிட்டுவிட மாட்டாயே?" என்றாள் என் அருமை அன்னை.

அந்த சமயத்தில் ஆவலை அடக்க முடியாமல் நான் எட்டிப் பார்த்தேன். என் அன்னை அருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்த ரங்கதுரை எழுந்து நின்றார். என் அன்னையின் கரத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டார்.

"அம்மா! இந்துமதியை மாத்திரம் நான் என்ன கஷ்டம் வந்தாலும் கைவிட மாட்டேன். என்னை அவள் மணந்து கொள்ள விரும்பினால் ஆனந்தத்தோடு மணந்து கொள்வேன். இல்லை என்றால், அவளுடைய மனதிற்கு உகந்தவனை மணம் முடித்து வைப்பேன். இது சத்தியம். நீங்களும் இருந்து நான் என் வார்த்தையைக் காப்பாற்றுவதைக் காண்பீர்கள். தைரியமாக இருங்கள்!" என்றார். என் அன்னையின் முகம் பிரகாசமாக இருப்பதை நான் கண்டேன். சட்டென்று உள்ளே போய் விட்டேன். காரணமில்லாமல் என் கண்களில் நீர் பெருகிக் கொண்டே இருந்தது. அவர் சொன்னதில் முதல் பாகம் உண்மையாயிற்று. இத்தனை காலத்திற்குப் பிறகும், இந்த துர்ப்பாக்கிய தசையிலும், மரணத்திற்காக நான் ஏங்கிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்திலும் அந்த உத்தமர் என் அன்னைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி வருகிறார். ஆனால் என் தாயார் அதைப் பார்க்க இப்போது இல்லை!

அத்தியாயம் 28

அன்னையின் பிரிவு

அவளுடைய தீர்க்க தரிசனத்தை எண்ணும்போது எனக்குப் பெருவியப்பாக இருக்கிறது. இன்று இந்தச் சிறையில் நான் வாடி வதங்கும்போது எனக்கு அன்பும் ஆதரவும் அளிக்கும் சக்தி ரங்கதுரை ஒருவருக்குத்தான் உண்டென்பது அவளுக்கு அப்போதே தெரிந்து விட்டது போலிருக்கிறது. தீபம் அணையும் சமயத்தில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அல்லவா? அதைப் போல் அவளும் தன் அந்திய காலத்தில் தீர்க்க தரிசனத்துடன் பேசினாள். அவள் கூறியது எனக்கு ஆனந்தத்தை அளித்த போதிலும் அதன் முக்கியத்துவம் எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. இன்றுதான் அவள் கேட்ட வாக்குறுதியின் அவசியத்தை நான் உணர்கிறேன். பத்தே நாட்கள் பழகிய ஒரு இளைஞரிடம் அவளுக்கு

எப்படி அத்தனை நம்பிக்கை ஏற்பட்டது என்பது மிக விந்தையான விஷயம் அல்லவா? இறக்கும் தறுவாயில் அவள் எப்படியோ பின்னல் வரப்போவதையெல்லாம் அறிந்து கொண்டு விட்டாள் போலும். அவளைத் தன் பாதாரவிந்தங்களில் சேர்த்துக் கொண்டு விட்ட இறைவனை நான் வணங்குகிறேன். இன்று அவள் இருந்து என்னுடைய இந்த நிலையைப் பார்த்திருந்தால் எத்தனை வேதனைப் பட்டிருப்பாள்?

இப்போது இதெல்லாம் தெரிகிறதே தவிர அந்த சமயத்தில் என் அன்னையின் முடிவு நெருங்கிவிட்டது என்பதை நான் சிறிதும் உணர்ந்திருக்கவில்லை. ஒரு விஷயம்தான் என் மனத்தில் பதிந்தது. ரங்கதுரை என்னை நேசிக்கிருர், என் தாயும் அதை விரும்புகிருள் என்பது தான் நான் அறிந்து கொண்ட விஷயம். முன்பு இருந்த கூச்சமும், தயக்கமும் கூடப் பிறகு விலகிவிட்டன. என் அன்னையின் எதிரிலேயே ரங்கதுரையுடன் பேசிச் சிரித்து மகிழலானேன். நாங்கள் இருவரும் சந்தோஷமாக இருப்பதைக் கண்டு என் அன்னை மனமகிழ்ந்தாள். என்னைப் பாடச் சொல்லுவாள்.

நானும் வேணுமென்றே,

வள்ளி கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடி—கிளியே
ஊனும் உருகுதடி!

மாடுமனை போனலென்ன?
மக்கள் சுற்றம் போனலென்ன?
கோடிச்செம்பொன் போனலென்ன—கிளியே
குறுநகை போதுமடி!

என்று பாடி விட்டு ரங்கதுரையின் முகத்தைப் பார்ப்பேன். அவரும் குறுநகை புரிவார். என் அன்னையும் புன்னகை புரிவாள்.

என் தந்தையைப் பிரிந்த பிறகு என் அன்னை சந்தோஷமாக இருந்தது அந்த ஒரு வாரம்தான் என்று எண்ணுகிறேன். அவள் பழைய மாதிரி சந்தோஷமாக இருக்கிருளென்று என் தந்தை மந்திரமூர்த்தி இரண்டொரு முறை குறிப்பிட்டார். அவரும் எங்கள் நட்பைப் புரிந்து கொண்டு சந்தோஷமாகவே இருந்தார். தன் சகோதரி மகனுக்கு என்னைக் கொடுக்கும் எண்ணத்தையே அவர் விட்டு விட்டார். தமது சொத்துக்காகவே அவர்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவார்கள் என்றும், சொத்தெல்லாம் போய் விட்டதென்று தெரிந்தால் அவர்கள் ஒரு நாளும் என்னை மணந்துகொள்ளச் சம்மதிக்க மாட்டார்கள் என்றும், என்னை வளர்த்த தந்தைக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவரும் நான் ரங்கதுரையுடன் பழகியதை விரும்பினர் என்றே கூற வேண்டும். அவரும் முற்போக்கான கொள்கைகளை உடையவர்தானே?

திங்கட்கிழமை என் அன்னை சந்திரமணிக்கு வந்த மார்பு வலி மறுபடியும் வியாழக்கிழமை யன்று வந்தது. இந்தத் தடவை அப்படியே துடித்துப் போய் விட்டாள். சில நிமிடங்கள் மயக்கமாகக்கூட இருந்தாள். ரங்கதுரைதான் மறுபடியும் டாக்டரை அழைத்துக் கொண்டு ஓடி வந்தார். டாக்டரும் ஊசியைப் போட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் என் அன்னை கண்களை அகல விரித்து, "என் கண்மணி எங்கே?" என்ருள். நான் அருகில் ஓடினேன். "என்ன ஆயிற்று?" என்று கேட்டாள். "ஒன்று மில்லையே அம்மா! நீ சற்று பலஹீனமாக இருக்கிருய், கஞ்சி சாப்பிடு!" என்று கூறிக் கொண்டே கஞ்சியைக் கொடுத்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் தேகநிலை சரியாகி விட்டது. கொஞ்சங்கூட வலியே இல்லை என்று கூறிவிட்டு நடமாட ஆரம்பித்து விட்டாள். ரங்கதுரை, அப்பா, நான்—மூவருமாக அவளைப் படுத்திருக்கச் செய்வதற்கு ரொம்ப சிரமப் பட்டோம்.

பிறகு என் தந்தை காசிலிங்கத்தைப் பற்றி நிறையப் பேசினள். என்னிடத்திலேயே கூச்சத்தை விட்டு, தான் கலியாணம் செய்து கொண்ட விவரங்களையெல்லாம் கூறினள். நானும் ரங்கதுரையும் உண்மையிலேயே அந்த உணர்ச்சிகளை அனுபவித்துக் கொண்டிருந்தபடியால் அவளுடைய துயரகரமான காதல் கதை எங்களுக்கு மிகவும் இன்பத்தை அளித்தது!

"இந்து, என்றாவது ஒருநாள் உன் தந்தையைப் பார்த்தால் நான் அவர் நினைவாகவே இருந்தேன் என்பதைச் சொல்லுகிருயா? அவருக்கு என் அன்பையும், நமஸ்காரங்களையும் சொல்வாயா?" என்று என்னைக் கேட்டாள்.

நான் அந்த சமயத்தில்கூட என் அன்னை இறந்து விடுவாளென்று நினைக்கவே இல்லை. "அதற்கென்ன அம்மா! சொன்னல் போகிறது. ஏன் வீணுக அலட்டிக் கொள்கிருய்? அப்பாவை

நீயே சந்திப்பாய். அவரே உன் அன்பைத் தெரிந்து கொள்ளுவார். உனக்குச் சந்தேகமே வேண்டாம்!" என்றேன்.

மறுநாள் டாக்டர் வந்து என் அன்னை அபாய கட்டத்தைத் தாண்டி விட்டதாகவும், ஒரு கவலையும் இல்லை என்றும் கூறினர். ரங்கதுரையும் உற்சாகமாக, "பார்த்தீர்களா, அம்மா! நான் சொன்னமாதிரியேதான் நடக்கப் போகிறது!" என்ருர்.

அம்மா லேசாகச் சிரித்து, "நான் இருந்ததெல்லாம் போதாதா?" என்ருள்.

"அப்படிச் சொல்லாதீர்கள், அம்மா! இந்துவுக்கு நீங்கள்தானே ஆதரவு?"

"அதுதான் இந்துக் கண்மணியை உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே! எனக்கு என்ன கவலை?"

"வாஸ்தவம். நீங்கள் கவலைப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதானே என் ஆசை. என் சீமைப் பிரயாணம் நம் அனைவரின் நலத்துக்காகவும் தானே?"

சனிக்கிழமை மாலை நான் ரங்கதுரையைப் பாதிரித் தோட்டத்தில் சந்தித்தேன். என் அன்னைக்கு உடல் நிலை மிகவும் அபிவிருத்தி அடைந்திருந்தது. அதனால் நான் எப்போதையும்விடக் குதூகலமாக இருந்தேன். ரங்கதுரை அதே மரத்தடியில் நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் அவர் வேகமாக முன்னால் வந்து என் கைகளைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் அதே மரத்தடியில் உட்காரச் சொன்னர்.

"இன்று நீ பேசாமடந்தையாகி விட்டாய் போலிருக்கிறது" என்ருர்.

"நீங்கள்தான் சீமைக்குப் போவதாகச் சொன்னீர்களே! உங்களுடன் பேச்சு என்ன வந்தது?"

அவர் குறுநகையுடன், "இந்து! இப்படி அர்த்தமில்லாமல் பேசிப் பயனில்லை. நான் நிறையப் படித்துப் பெரிய வேலையில் இருந்தால்தானே சந்தோஷமாக இருக்க முடியும்? அதற்காகத் தான் போகப் போகிறேன். நான் படிக்கும் காலேஜிலுள்ள அத்தனை பாதிரிமார்களும் என்னிடம் பிரியம் உள்ளவர்கள். நான் நன்ருகப் படிக்கிறேனென்று அலாதியான சலுகைகள் எனக்குக் காட்டுகிருர்கள். இதை நான் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டாமா, அம்மா! இதற்கு நீ கோபித்துக் கொண்டால் என்ன அர்த்தம்?" என்று என் கையைப் பிடித்துக் கொண்டே கேட்டார். என் மெய் சிலிர்த்தது. அவருடைய கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசவே யில்லை.

ஞாயிறன்று ரங்கதுரை வந்தபோது என் தந்தை, "என்னப்பா? குமரன் கோவிலுக்கும், ஊமைத்துரைக் கோட்டைக்கும் போவது பற்றி அடியோடு மறந்து விட்டாய் போலிருக்கிறதே!" என்று பரிகாசமாய்ச் சொன்னர்.

"அம்மாவுக்கு உடம்பு குணமாக வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தேன். இப்போதுதான் நன்ருகக் குணமாகி விட்டதே. இனிமேல் போக வேண்டியதுதான்" என்ருர். என் அன்னையும் அதை ஆமோதித்தாள். நானும் உற்சாகமாக "நாளையே போவோம். எல்லாம் தயார் செய்து விடுகிறேன்" என்றேன்.


"உன்னால் மலையில் ஏற முடியுமா? யாராவது தூக்கிக் கொண்டு போக வேண்டுமா?" என்று ரங்கதுரை முதல்

அன்பார்ந்த சதாசிவம்,

'ரா. கி. இனி இல்லை' என்ற விஷயத்தை என்னால் கொஞ்சங்கூட நம்ப முடியவில்லை. அவர் இன்னும் உயிருடன் இருப்பது போலவும், இங்கே நடமாடிக்கொண்டிருப்பது போலவுமே எனக்குத் தோன்றுகிறது. அவர் மறைந்து விட்டார் என்பதை என் மனம் நம்ப மறுக்கிறது. தமிழுக்கும், தமிழகத்துக்கும் நம்மெல்லோருக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. 'கல்கி' அவர்கள் நாள் முழுவதும் கடும் வேலை செய்து விட்டு, சாயங்கால நேரத்தில் நிம்மதியோடு பேசுவதற்காக உங்கள் வீட்டுக்கு மெள்ள நடந்து வரும் காட்சி இப்பொழுதுகூட மனத்தில் நிற்கிறது. உங்களுக்கும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கும் அவர் மறைவு பெரிய துக்கம்தான். 'கல்கி' பத்திரிகை தமிழகத்தில் ஆடவர் பெண்டிர் அனைவருடைய வீட்டு நண்பன் ஆகிவிட்டது. அது ஒரு ஸ்தாபனமே ஆகிவிட்டது என்று சொல்வேன்!......

மதுரை
19—12—54

ஏ. வைத்தியநாதய்யர்



பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த இந்தப் புகைப்படத்தில், இடமிருந்து : தலைவர் ராஜாஜி, ரசிகமணி டி. கே. சி., கல்கி ஆசிரியர் ஸ்ரீ ரா. கி., ரசிகமணியின் புதல்வர் ஸ்ரீ தீத்தாரப்பன் ('தீபன்')

தினம் நான் சொன்னதை நினைத்துக் கொண்டு கேட்டார். மந்திரமூர்த்தியின் எதிரில் அவர் அப்படிக் கேட்டதும் எனக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது. உள்ளே ஓடினேன். என் தந்தை "என்ன சந்திரா! இந்துவுக்குக் கூட வெட்கப்படத் தெரிகிறதா என்ன? மழை வந்து நாளை நாம் போவதைக் கெடுத்து விடாமலிருக்க வேண்டும்!" என்றது என் காதில் நன்றாக விழுந்தது.

இந்தத் தடவையும் மிகத் துரிதமாக ஏற்பாடுகள் செய்தேன். காலை ஆறு மணிக்கு வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போனார் ரங்கதுரை. நான்கு மணிக்கே அம்மாவும் நானும் எழுந்து கட்டுச் சாதம் கட்டினோம்.

பலபல வென்று பொழுது விடிந்து கொண்டே வந்தது. வண்டினங்களின் ரீங்கார சப்தமும், மலைமீது காற்றடிக்கும்போது உண்டாகும் ஒரு விநோதமான ஓசையும், மனத்திற்குச் சந்தோஷமளித்தன. பறவைகளின் கலகல வென்ற சப்தம் எனக்கு இன்னிசையாக இருந்தது. துருதுரு வென்று இருந்தது. "இப்போது ரங்கதுரை வந்து விடுவார்", "வந்து விடுவார்" என்று மனம் பாடிக் கொண்டே இருந்தது. ஏதோ அம்மாவிடம் கேட்பதற்காக வாயெடுத்தேன். அப்படியே திகைத்துப் போனேன். அவள் முகம் பயங்கரமாக இருந்தது. தாள முடியாத வேதனையின் அறிகுறியை அம் முகத்தில் கண்டேன்!

"அப்பா அப்பா" என்று பெரிதாக நான் கத்தி யிருக்க வேண்டும். ரங்கதுரையும் அந்த சமயத்தில் உள்ளே வந்தார். அப்பாவும் ஓடிவந்தார். அம்மாவை நான் போய் மடியில் எடுத்துப் போட்டுக் கொண்டேன். ஒரு நெடிய பெருமூச்சு வந்தது. அவ்வளவுதான். என் அருமை அன்னை என்னை விட்டுப் பறந்து போய் விட்டாள். ரங்கதுரை போய் டாக்டரை அழைத்து வந்தார். ஆனால் ஆவி பிரிந்து அரை மணிக்கு மேல் ஆகி விட்டதென்று கூறினார் டாக்டர்.


மந்திரமூர்த்தி கோவென்று கதறினார். நான் உணர்ச்சி யில்லாமல் உட்கார்ந்திருந்தேன். ரங்கதுரை என் அருகில் வந்து நின்றார். அவ்வளவுதான்; எங்கிருந்துதான் அவ்வளவு கண்ணீர் வந்ததோ எனக்குத் தெரியாது. பொங்கிப் பொங்கி வந்தது விம்மல். கண்ணீர் பெருகிப் பெருகி வந்தது. ரங்கதுரை என் அருகில் உட்கார்ந்து கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்தார். சற்று நேரத்துக்குப் பின் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "இந்து! தைரியமாக இரு, அம்மா!" என்றார். பிறகு மந்திரமூர்த்தியைத் தேற்றினார்.

"எவ்வளவோ விவேகியான நீங்களே இப்படி அழுதால் குழந்தை அவள் என்ன செய்வாள்?

'எல்லாம் உன் அடிமையே
எல்லாம் உன் உடைமையே
எல்லாம் உன் செயலே!'

என்று பாடுவீர்களே! இதுவும் அவன் செயல்தான். இந்துவுக்குத் தைரியம் சொல்லுங்கள்" என்று தேற்றினார் ரங்கதுரை.

(தொடரும்)



இருமல்
ஜலதோஷம்
ப்ரான்கைடிஸ்
ஆஸ்த்மா
கக்குவான் இருமல்
தொண்டை ரணம்
Apothecary E.Taeschner
Trade Mark
Pertussin
Registered
100 c.c.
for coughs, asthma, whooping-cough
and bronchial catarrh

வெற்றியின் ரகசியம்

ரா. நா.

“கல்கி” ஒரு புதுமை மனிதர். இல்லாவிட்டால் தம் புனை பெயரையே தம் பத்திரிகைக்குச் சூட்டுவாரா! தம் சிறப்புகள் யாவும் பத்திரிகை ரூபமாகத் திகழ வேண்டுமென்றுதான் அவ்வாறு தம் பத்திரிகைக்குப் பெயரிட்டார். பத்திரிகைக்காரர்களே லட்சிய ஆர்வம் கொண்டவர்கள். இந்த ஜாதிக்கு, தான் வேறு, தான் தொண்டு புரியும் பத்திரிகை வேறு என்கிற எண்ணமே கிடையாது. பத்திரிகையாளரில் தலை சிறந்த சிலரில் ஒருவரல்லவா ‘கல்கி’!

‘விகடனை’ விட்டு விலகிப் புதுப் பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறார் ‘கல்கி’ என்று கேள்விப்பட்டவுடன் அவருடைய நண்பர்கள் கவலைப் பட்டார்கள். சகலவித வசதிகளும் நிறைந்த ‘விகடனை’த் தம் திறமையால் பிராபல்யப்படுத்தினது அவ்வளவு கஷ்டமில்லை ‘கல்கி’க்கு. கையில் ஒன்றுமில்லாமல் பத்திரிகையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்த முடியுமா! முடியும் என்று காட்டினார் ‘கல்கி’. அது எப்படி சாத்தியமாயிற்று!

பல மேதாவிகள் பத்திரிகை நடத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய பத்திரிகையில் எல்லாம் முதல்தரமான காரியங்கள்தான் வெளிவரும். ஆனால் பத்திரிகை எடுபடாது. அபரிமிதமான ஆதரவு கிட்டுவதில்லை. அப்படியிருக்க ‘கல்கி’யின் வெற்றி விதிவிலக்கா! இல்லை. அதன் வெற்றியின் காரணத்தை அதன் மூல கர்த்தாக்களை அறிந்தவர்களே ஆராய்ந்து சொல்லக்கூடும்.

அநேக பிரபல பத்திரிகைகளில் ஆசிரியர்கள் மகா விற்பன்னர்களாயிருப்பார்கள். அதன் நிர்வாகப் பொறுப்பை வகிப்பவர்கள் தங்கள் பத்திரிகைகளின் லட்சியம் என்ன, அவைகளில் என்ன விஷயம் வருகிறது என்று அறியாதவர்களாயிருப்பார்கள். ஆசிரியர் லட்சிய வாதியாயிருப்பார், நிர்வாகி காரியவாதியாயிருப்பார்; ஆசிரியர் தேசபக்தராயிருப்பார்; நிர்வாகி இனப் பித்துப் பிடித்தவராயிருப்பார். ஆகையால் பத்திரிகை கிணற்றில் ஏற்றிய விளக்காயிருக்கும்.

‘கல்கி’ பத்திரிகை அப்படியல்ல; ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியும், பிரதம நிர்வாகி ஸ்ரீ சதாசிவமும் சிறந்த தேச பக்தர்கள். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி முதலில் நா வன்மையால் மக்களைத் தட்டி எழுப்பினார். ஸ்ரீ சதாசிவம் பாரதி பாட்டுகளை ஆவேசமாகப் பாடி மக்களை உற்சாகப் படுத்தினார். ‘கல்கி’ கதர் ஸ்தாபனத்தின் பிரசாரகராயிருக்கையில் கதர் விற்பனையைப் பெருக்கினார். உப்பு சத்யாக்கிரகத்தின் போது ‘கல்கி’யும் சதாசிவமும் இணை பிரியாமல் நின்று தமிழகம் முழுவதும் சென்று வாலிபர் படை திரட்டி இருவரும் சிறை சென்றனர். ‘ஆனந்த விகடன்’ ஆசிரியராக ‘கல்கி’ இருக்கையில் சில காலம் ஸ்ரீ சதாசிவம் அதன் விளம்பர இலாகாவில் இருந்து விளம்பரக் கலையின் நுட்பங்களை அறிந்து கொண்டார். ராஜாஜியிடம் காட்டிய தன்னலமற்ற பக்தியிலும் இருவரும் ஈடு இணையின்றி விளங்கினர். ராஜாஜி தலைமை பற்றிய விவாதம் மும்முரமாக நடக்கையில், ‘கல்கி’ பத்திரிகை மூலமும் சதாசிவம் தமது சுற்றுப் பிரயாண மூலமும் ராஜ்ய மக்களின் ஆர்வத்தை உருவகப் படுத்தினர். பத்திரிகையும் நிர்வாகமும் சம நிலையிலிருந்து தொண்டு புரிந்ததனால்தான் ‘கல்கி’ செயற்கை போஷணை ஏதுமில்லாமல் பல்லாயிரக் கணக்கான வாசக நேயர்களின் ஆதரவைப் பெறுவது சாத்தியமாயிற்று.

‘கல்கி’ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ சதாசிவம் இருவரையும் நீண்டகாலமாக நான் அறிந்ததனால் தான் இந்த உண்மை எனக்குப் புலனாயிற்று.

* * *

ஆசிரியர் என்கிற முறையில் ‘கல்கி’யின் வெற்றிக்குக் காரணம் என்ன! எத்தனையோ புலவர்கள் இருந்திருக்கின்றனர். பழம் பெரும் நூல்களைக் கரைத்துக் குடித்தவர்கள் இருந்திருக்கின்றனர். அவர்களுடைய பாண்டித்தியம் ஏன் பிரகாசிக்கவில்லை! அவர்கள் எழுத்து ஏன் சிரஞ்சீவித்வம் பெறவில்லை! காரணம் அவர்கள் மக்களுடன் ஒன்றி வாழாதது, மக்களின் சுக துக்கங்களை அறியாதது, பாமரர்களின் ரஸனை சக்தி என்ன என்று தெரிந்து கொள்ளாததுதான். ‘கல்கி’ எளிமையில் பிறந்தவர், எளிமையில் வாழ்ந்தவர், நாட்டின் விடுதலைக்குப் போராடி, தியாகத் தொண்டர்களின் கஷ்டங்களை அறிந்தவர், மேலும் பழந் தமிழ், பிற நாட்டு நவீன இலக்கியம் இரண்டையும் அறிந்து கொண்டவர். அதனால்தான் அவர் நடை இலக்கணப் பிழையின்றி இனிமையாகவும் இருந்தது. சுவையுள்ள தமிழுக்கு மேலும் சுவை யூட்டினார்.

* * *

நான் திருச்சியில் வக்கீலாய் அமர்ந்திருந்த புதிதில் ஒத்துழையாமை இயக்கம் தோன்றியது. அதன் பயனாகக் கிருஷ்ணமூர்த்தி திருச்சி தேசியக் கல்லூரி, உயர்நிலைப் பள்ளியைப் பகிஷ்கரித்துத் தேசத் தொண்டில் ஈடுபட்டார். ‘மிகத் திறமை வாய்ந்த மாணவரை இழந்தோமே’ என அவருடைய ஆசிரியர்கள் வருந்தினர். ஆனால் ‘கல்கி’ உடனே குஜராத் வித்யாபீட மெட்ரிக் பரீட்சையில் சிறப்பாகத் தேறினார். அச்சமயம் நான் திருச்சி ஜில்லா காங்கிரஸ் நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்திருந்தேன். கிருஷ்ணமூர்த்தி உடனே பிரசாரம் செய்ய மேடை யேறி விட்டார். சற்றும் சபைக் கூச்சமின்றி ஆயிரக் கணக்கான மக்கள் பரவசமடையத்தக்க ஹாஸ்யமும் உற்சாகமும் நிறைந்த முறையில் பேசுவார். பிரசாரம் செய்யாத வேளைகளில் காங்கிரஸ் காரியாலயத்தில் நாங்கள் இருவரும் அளவளாவுவோம். பாரதியாரின் ‘கண்ணன் பாட்டுகள்’ அவர் இனிமையாகப் பாடக் கேட்டு நான் இன்புறுவேன். அச்சமயம் அவருடைய சாரீரம்

அன்பார்ந்த சதாசிவம் அவர்களுக்கு.

நான் இந்தக் கடிதத்தை என் நோய்ப் படுக்கையிலிருந்து கொண்டு சொல்லி எழுதச் செய்கிறேன்.

கிருஷ்ணமூர்த்தியின் பிரிவைப் பற்றிய செய்தியைக் கேட்டு நான் திடுக்கிட்டேன். அவரும் நீங்களும் சேர்ந்து. கல்கி பத்திரிகையைப் புகழின் இந்த உன்னத நிலைக்குக் கொண்டு வர எவ்வளவு பாடுபட்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். ‘கல்கி’ நீடூழி வாழ்க!

சென்னை-14
7—12—54

ஏ. வி. ராமன்

மிக மிக இனிமையாயிருக்கும். முதல் ஒத்துழையாமை இயக்கத்தில் சிறை சென்றார். அதே சமயம் ஸ்ரீ சதாசிவமும் அதே சிறையில் இருந்தார். அவர் சிறை வாசத்தை இனிது கழிப்பதற்காக நான் பல ஆங்கில இலக்கியப் புத்தகங்கள் அனுப்பியுள்ளேன். அந்தப் புத்தகங்களில் ஆங்கிலப் பேராசிரியர் டிக்கன்ஸ் எழுதிய 'பிக்விக் பேப்பர்ஸ்' ஒன்று என்பது மட்டும் எனக்கு இப்போது ஞாபகம் இருக்கிறது.

* * *

சிறையிலிருந்து வந்ததும் ஈரோட்டில் கதர் ஸ்தாபனத்திலும், அடுத்தபடியாகத் திரு. வி. க. வின் 'நவசக்தி'யிலும், பின்னர் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் 'விமோசன'த்திலும், ஸ்ரீ வாஸனின் 'ஆனந்த விகட'னிலும் தொண்டு புரிந்தது யாவரும் அறிந்ததே. அவர் சென்னை வரும் பொழுது நான் திருச்சியிலிருந்து சென்னை வரும் பொழுதெல்லாம் அவர் என்னை வரவேற்று உபசரித்ததை நான் என்றும் மறக்க முடியாது.

எவ்வளவு காரசாரமான விவாதத்தின் விளைவாகவும் அவர் நண்பர்களிடம் கொண்டிருந்த அன்பு மாறவில்லை என்பதற்கு என் சொந்த அநுபவத்திலிருந்து ஒரு சம்பவத்தை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

சினிமாப் படங்கள் 11,000 அடிக்கு மேல் இருத்தல் கூடாது எனச் சர்க்கார் தடை விதித்திருந்தனர் அல்லவா? இதைக் கல்கி ஆதரித்தார். நான் எனது 'ஹிந்துஸ்தானி'ல் இந்தத் தடையை எதிர்த்தேன். என் தடையைக் கேலி செய்து 'கல்கி' எழுதியிருந்தார். அதற்கு நான் கடுமையான மறுப்பு எழுதியிருந்தேன். இதற்கப்புறம் தான் 'கல்கி' சிறுகதைப் போட்டி முடிவுகூறும் குழுவில் ஒருவராயிருக்கும்படி என்னை அழைத்தார். இந்தச் சம்பவமும் அவருடைய அன்பின் ஆழத்தை அறிவதற்கு உதவியது.

விவாதத்தில் 'கல்கி' இடித்து எழுதுவது தேசத்திடமுள்ள பக்தியே ஒழியத் தனிப்பட்டவர்கள் மீதுள்ள துவேஷத்தால் அல்ல என்பதை நான் ராஜாஜி தலைமைப் பதவி விவாதத்தின் போது அறிந்து கொண்டேன். ஏனெனில் வாரந் தவறாமல் அவர் 'கல்கி'யிலும் நான் 'ஹிந்துஸ்தானி'லும் ராஜாஜியை ஆதரித்து எழுதிவந்தோம். ராஜாஜியைத் தூரத்திலிருந்து வணங்கியவன் நான்; கர்ப்பக் கிருஹத்திலிருந்து பூஜித்தவர் 'கல்கி'. ஆனால் பக்தி தூய்மையில், தன்னலமற்ற தன்மையில், அவருக்கு நான் இளைத்தவனல்ல, எனக்கு அவர் சளைத்தவரல்ல.

* * *

'கல்கி'யின் உடல் மறைந்து விட்டது. 'கல்கி' உயிர் அவர் தோற்றுவித்த பத்திரிகையிலும், அவர் தயாரித்த சகாக்களிடத்திலும் ஈருடலும் ஓருயிருமாயிருந்து இன்று தனியாக இருந்து துயருறும் சதாசிவத்தினிடத்திலும் இருக்கிறது. ராஜாஜியின் பூரண ஆசியும் ஆதரவும் டி. கே. ஸி., 'கல்கி' இருவரின் ஆன்மீகப் பாதுகாப்பும் இருக்கின்றன. இவ்வளவு சுமுகச் சூழ்நிலையில் 'கல்கி' மேன்மேலும் பலம் பெற்று நிலவும். ஏனெனில் கல்கிப் பத்திரிகையின் வாழ்வே தமிழகத்தின் வாழ்வு.

தமிழ் மணியை இழந்தோம்!

எனது உயிரனைய நண்பர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி மறைந்த செய்தியைக் கேட்டு, என்னை ஈன்றெடுத்த தாயாரை நான் இழந்த போது உற்ற பெருந் துயரத்தையே அடைந்தேன். தமிழன்பர் அனைவருக்கும் இம்மாணிக்கத்தின் மறைவு பேரதிர்ச்சியைத் தருவதாகும்.

அவரோடு மிக நெருங்கிப் பழகிய அன்பர்களில் நானும் ஒருவன். திருச்சிச் சிறையிலே அவருடன் மிக அன்னியோன்னியமாக நெருங்கிப் பழகிய நாட்களை என்றுமே நான் மறக்க முடியாது.

தமிழ் மொழி வளர்ச்சியில் கல்கி அவர்களுக்கு இருந்து வந்த பற்றும் அன்பும் அவர் எழுதியுள்ள சொற்களே பறைசாற்றுமே. தமிழ்த் துறை பலவற்றிலும் அவர் ஆற்றிய தொண்டு அளவிடலரியது. தமிழறிஞர்களை எல்லாம் அவர் பேணிப் போற்றிப் பாராட்டிய முறையே தனியானது. அவருடைய தமிழ்நடை அலாதியான அற்புத சக்தி வாய்ந்தது. அதில், எளிமையும் தெளிவும் இன்புறக் கலந்து, ஜீவ களையும் நகைச் சுவையும் களிநடம் புரிவதைக் கண்டு களிக்கலாம். அவர் எழுதி வந்த கதைகளில் உள்ள பாத்திரங்கள் கற்பனை என்று கருதுவதற்கு மனம் இடம் தராது; உயிரோடு உலாவி வருபவர்களாகவே காட்சி தந்தனர். கல்கியின் எழுத்து அவ்வளவு வன்மையும் உயிர்ப்பும் கொண்டது. நான் படித்த மேனாட்டு ஆசிரியர்களில், 'அலெக்சாந்தர் டூமாஸ்', 'விக்டர் ஹியூகோ' என்ற இரு பெரும் புலவர்களிடையேதான் இவ்வற்புத ஆற்றலைக் கண்டதுண்டு. 'கல்கி', அவர்களைவிடச் சாலச் சிறந்தவராகவே எனக்குக் காட்சி தந்தார்.

பல்லாண்டுகளாகத் தமிழ் நாட்டில் காங்கிரஸின் செல்வாக்குப் பெருகுவதற்குக் காரணமாயிருந்தவர் கல்கி. அவரது சேவையை அறியாதார் யாரே! வாளைவிடப் பேனா வலிமை மிக உடையது என்பதைக் 'கல்கி' தன் திறமையான எழுத்து மூலம் நன்கு நிரூபித்தார்.

எட்டயபுரம் பாரதியின் மணிமண்டபமே கல்கி நினைவை என்றும் நிலைநாட்டி வருவதாகும். இது, எவ்வளவு மகத்தான அரிய காரியம் என்பதை, நினைவு மண்டபங்கள் எழுப்ப முன்வருபவர்களே எளிதே அறியக் கூடும்.

தமிழ்மொழியும், தமிழ்க் கலையும் நல்ல முறையில் உருவாகிக் கொண்டு வரும் இத்தருவாயில், அதற்குப் பேராதரவாய் நின்று பேருதவி புரிந்து வந்த கலைமணி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மறைவு, தமிழன்னை செய்த தவக்குறையே ஆகும். கடவுளைப் போலவே, விதியின் விளையாட்டையும் யாவரே அறிய வல்லார்!

கல்கி அவர்களுடைய முதல் தமிழ்க் குரு திரு. வி. க. அவர்களையும், ரசிகமணி டி. கே. ஸி. அவர்களையும் நெடுநாள் விட்டுப் பிரிய மனமில்லாது, இக்கலை மாணிக்கம் விரைந்து விண்ணுலகம் சென்றனரோ!


மகாத்மா காந்திக்கு மகாதேவ் தேசாய் போன்று, ராஜாஜி அவர்களுக்குக் கல்கி இருந்து வந்தார். ராஜாஜி அவர்களின் அளவிடலரிய துயரத்துக்கு எனது அனுதாபம் உரித்தாகுக!

திருச்சி — எல். கிருஷ்ணசாமி பாரதி
11—12—54 — பி. ஏ., பி. எல்.



கல்கி ஆசிரியர் தமிழ் நாட்டின் உயர்வுக்காகத் தொண்டாற்றிய பொதுநலப் பணிகளில் சிலவற்றை இந்தப் பக்கங்களில் காணலாம் :

1. பூந்தமல்லியில் நடந்த ராஜாஜி அவர்கள் எழுபதாவது ஜயந்தி விழாவில் ராஜாஜியின் உருவப் படத்தைக் கல்கி திறந்து வைக்கிறார்.



2. ஸ்ரீ கா. சி. வேங்கடரமணி அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவில் அவருக்கு ஒரு பாராட்டு விழா நடத்திப் பணமுடிப்பு அளித்தார்.

3. ராஜாஜி அவர்களின் 'வியாசர் விருந்து' நூலின் வெளியீட்டு விழா. டாக்டர் ராஜன், ஸ்ரீ சதாசிவம், மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர், ராஜாஜி முதலியவர்களுடன் கண்காட்சியில் வைத்திருந்த நூல்களைக் கல்கி பார்வையிடுகிறார்.







1. கண்ணற்ற நிவான பீஜியில் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் தலைவராக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றி வரும் சுவாமி ருத்ரானந்தர் தாயகம் வந்தபோது அவரைச் சிறப்பாக வரவேற்று உபசரித்தார். தன்னலமற்ற அவர் சேவையைத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவ வகை செய்தார் கல்கி.

2. சில மாதங்களுக்கு முன் திருக்கழுக்குன்றத்தில் பத்து தினங்கள் விமரிசையாக நடந்த சிவனடியார் திருக்கூட்ட மகாநாட்டில் கலந்துகொண்டு சமயப் பணியாற்றினர்.





32. அவள் திகைத்தாள்!

ஜகதீஷ் துறவியைப் பற்றி மிக விசித்திரமானவன் என்று அபிப்பிராயம் கொண்டதில் என்ன தவறு? அவனோடு பழகிய அந்தச் சிறிது நேரத்துக்குள்தான் அவன் காணாததெல்லாம் கண்டு விட்டானே! குறுக்குப் பாதையில் அவனை அழைத்துப் போய்க் கொண்டிருந்த துறவி இன்னும் என்ன என்னவெல்லாம் வேடிக்கை காட்டுவானோ என்று எண்ணினான். அவன் எண்ணம் வெறும் எண்ணமாக மட்டும் இல்லை; நம்பிக்கையாகவே பரிணமித்து விட்டது. ஏனெனில் கோவிலுக்கு எதிரே உள்ள பாதை வழியாக அவர்கள் இருவரும் நகரத்தை நோக்கி நடக்கலாயினர்.

ஆனால் நகரத்துக்குள் பிரவேசிப்பதற்குப் பதிலாக அவ்விருவரும் ஆற்றங் கரையோரமாகவே நிர்மானுஷ்யமான தனி வழியே அரை மணி நேரம் நடந்து சென்றார்கள். தூரத்தில் ஒரு பங்களா தெரிந்தது. அப்பொழுது இரவு மணி பதினொன்றரை இருக்கலாம். ஆனால் அந்தப் பங்களாவில் அப்பொழுதும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. துறவி அத்தனை நேரமும் வாய் திறவாமலே நடந்து வந்துகொண்டிருந்தான். சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவன் ஜகதீஷின் பக்கம் திரும்பி, "நீ இதுவரை என்ன யோசனை செய்துகொண்டு நடந்து வந்தாய்?" என்று கேட்டான்.

அப்பொழுது துறவியின் பேச்சு மிகத் தெளிவாக இருந்தது. அவன் உச்சரிப்பில் நாகரிகமும் பண்பும் மிளிர்ந்தன. அவனது பயங்கர உருவத்துக்கும் பண்பட்ட பேச்சுக்கும் இடையே உள்ள பேதத்தை ஜகதீஷ் புரிந்துகொண்டான். ஆனால் அவன் முகம் முன்னைக் காட்டிலும் பொலிவுற்று விளங்குவதன் மர்மம்தான் ஜகதீஷுக்குச் சரியாக விளங்கவில்லை. யோசனை செய்வதை விட்டு விட்டு, "யோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

"அதை யெல்லாம் நான் கேட்கவில்லை. மனிதனை எப்படியெல்லாம் கஷ்டப்படுத்தி வேதனைக் குள்ளாக்கிக் கொல்ல வேண்டும் என்பதை நீ கற்றுக்கொள்ள விரும்புகிறாய் அல்லவா?" என்று குரலில் உறுதி தாண்டவமாட ஜகதீஷைப் பார்த்துக் கேட்டான் துறவி. பொலிவுற்று விளங்கிய அவன் முகம் மறுபடியும் பொலிவிழந்து கன கோரமாகக் காட்சி அளித்தது.

அதைக் கண்ணுற்ற ஜகதீஷ் சிறிது பிரமித்தான். ஆனாலும் அவன் உள்ளத்தில் தோன்றிய உறுதி முகத்திலும் பிரதிபலித்தது. அந்த உறுதியில் ஒரு தெளிவும் இருந்தது. சந்தேகம் நிறைந்த நிலையில்தான் முகத்தில் பரஸ்பர விரோதமுள்ள பாவங்கள் இழையோடுகின்றன. ஆனால் அவன்தான் மானிட சாதிக்குப் பரம விரோதியாகி விட்டானே! தான் விரும்பியது கைகூடும் தருணம் வந்து விட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. ஆனால் இத்தனை சீக்கிரம் நேரிடைப் பாடம் கற்க நேரும் என்று அவன் எண்ணவில்லை. மனிதன் சிற்சில காரியங்கள் நடக்க வேண்டும் என்று விரும்புவதுண்டு; சீக்கிரமே நடக்காதா என்று எதிர்பார்ப்பதும் உண்டு. ஆனால் அது நடந்தே தீரப் போகிறது என்ற நிலைமை வந்து விட்டால் எதற்கு இந்தக் காரியம் நடக்க வேண்டும் என்று நிலைக்குத்த விட்டு நின்று விடுவான். ஜகதீஷும் அப்பொழுது அதே நிலையைத்தான் அடைந்தான். நாம் மானிட சமூகத்துக்குப் பரம விரோதியாகப் போகிறோம் என்பதை நினைக்கவே அவனுக்குக் குலை நடுக்கம் எடுத்தது.

"கற்றுக் கொள்ள வேண்டியது தான். ஆனால் இன்றைக்கே கற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கருதவில்லை!" என்று மழுப்பினான் ஜகதீஷ்.

"இன்றைக்கே கற்றுக் கொண்டால் என்ன? ஏன் வேண்டாம் என்கிறாய்? இன்னும் உனக்கு மனிதனிடத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கின்றனவா? அன்பும் ஆதரவும் தோன்றுகின்றனவா? நீ பேசுவதைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமாக அல்லவா இருக்கிறது! இன்று வேண்டாம் என்பது ஒருபுறம் இருக்கட்டும். இந்த நிமிஷத்திலேயே நீ ஏன் கற்கக் கூடாது என்று கேட்கிறேன்?" என்று கேட்ட துறவி பற்களை நறநற வென்று கடித்தான்.

அதைக் கேட்டதும் ஜகதீஷின் கால்களின் வேகம் குன்றி விட்டது; நடக்கமாட்டாமல்

தடுமாறி நின்றான். மனிதனுக்குக் கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் கொடுத்து வேதனைக்கு மேல் வேதனை அளித்துக்கொல்ல வேண்டும் என்று கூறும் துறவி என்னதான் செய்ய மாட்டான்? என்ன விந்தையைத்தான் செய்து காட்ட மாட்டான்? இதைக் கற்பனை செய்து பார்த்த ஜகதீஷுக்கு-இனந் தெரியாத அச்சம் உள்ளத்தை அலை பாயச் செய்தது. துறவியின் கல் நெஞ்சம் ஏற்கெனவே அவன் நன்கு அறிந்ததுதானே?

"ஏன்? நடக்க முடியவில்லையா? அல்லது மனத்தை ஏதாவது சுமை அழுத்துகிறதா? பயமாயிருந்தாலோ அல்லது மனத்தில் ஈவு இரக்கம் கசியும் என்று தோன்றினாலோ என்னுடன் வராதே. இங்கிருந்தபடியே திரும்பிப் போய் விடு!" என்று துறவி நிந்தனை நிறைந்த சொற்களை வீசினான்.

"இல்லை, இல்லை. நானும் கூடவே வருகிறேன்" என்று சொன்ன ஜகதீஷ் மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு துறவியுடன் நடந்தான். தனக்குச் சமூகம் இழைத்த தீங்கு மறுபடியும் அவன் மனத்தில் பசுமையாகியது. எனவே, கட்டாயம் இந்தச் சமூகத்தைப் பழி வாங்கியே தீர வேண்டும் என்ற கொடிய எண்ணம் அவனுள்ளத்தில் மறுபடியும் வேரூன்றியது; அனலாகக் கனிந்தது. அதற்குள் பங்களா சமீபித்து விட்டது.

பங்களாவுக் குள்ளிருந்து பேசிய வண்ணம் நான்கைந்து பேர் வெளியே வருவது தெரிந்தது. அவர்கள் உரத்த குரலில் பேசிக் கொண்டு வந்தனர். ஜகதீஷும் துறவியும் ஒரு புறமாக மறைவில் மறைந்து நின்றனர். வந்தவர்கள் தங்களைத் தாண்டிச் செல்லும் வரை இருவரும் மூச்சுக் கூடப் பிரியவில்லை. போகும் போது அவர்கள் பேசிக் கொண்டு போனது ஜகதீஷின் காதுகளிலும் துறவியின் காதுகளிலும் தெளிவாக விழுந்தது.



"பிராணலாலின் மேஜையில் ரூபாய் இருந்தது என்பது உண்மைதான்!"

"ஆமாம், அந்த முட்டாள் சாவியை மேஜையிலேயே விட்டு விட்டு எதற்காக ஓடினான்?"

"என்ன அப்பா, இது? இப்படிப் பேசுகிறாயே! இம்மாதிரி சிற்சில சமயம் மனிதனுக்கு மறதி ஏற்படுவது சகஜந்தானே? அதற்காகப் பிராணலாலைக் குறை கூறலாமா? அந்தச் சமயம் ஜகதீஷ் அங்கே இருந்தான். அதோடு அவன் பணத்தைக் களவாடியிருக்கலாம் என்பதற்குக் காரணமும் இருக்கிறது. ஏனெனில் அவன் பிராணலால் வெளியே வந்த பின் அவரைப் பார்க்காமல், அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் பின் புறத்து வழியாக வெளியேறியிருக்கிறான். அதுமட்டும் அல்ல; தான் வெளியேறுவதற்காகப் பின்புறத்துக் கதவைத் திறக்க வேண்டிப் பிராணலாலின் மகளின் உதவியையும் கோரியிருக்கிறான்!"

"இருக்கும், இருக்கும். ஏனெனில் வெகு நாட்களாக அவனுக்கு வாழ்க்கை நடத்தச் சரியான வழி வகை தெரியவில்லை. அதனால் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாமல் கை வைத்து விட்டான்!"

"அதோடு அவன் லால்ஜி ஸேட்டின் வீட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கிறானே? அதனால் இவ்விஷயத்தில் வேறு ஏதாவது உட் பொருளும் இருக்கலாமோ என்று நினைக்கிறேன்!"

"ஆமாம், ஆமாம். கட்டாயம் இருக்கும். இருக்கத்தானே வேண்டும்?"

இவ்விதம் பேசியவாறே அவர்கள் வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். எனவே, ஜகதீஷினால் அதற்குமேல் அவர்கள் பேச்சைக் கேட்க முடியவில்லை. அவன் இரத்தத்தைச் சூடேற்றிக் கொதிக்க வைக்க இத்தனை வார்த்தைகள் போதாதா?

"ஜகதீஷ் என்பது உன் பெயர் தானே?" அவர்கள் பேச்சைக் காது கொடுத்துக் கேட்ட துறவி ஜகதீஷைப் பார்த்து மேற்படி கேள்வியைக் கேட்டான்.

"ஆம்!" என்று பதில் அளித்தான் ஜகதீஷ்.

தோட்டத்தின் தலைவாசல் அந்நேரமும் மூடப்படாமல் திறந்தே இருந்தது. துறவியும் ஜகதீஷும் அந்தத் தோட்டத்தின் வழியே பங்களாவுக்குள் நுழைந்தனர். அரைத் தூக்கத்தில் தூங்கி வழிந்து கொண்டிருந்த காவற்காரன் கண்களைக் கசக்கிய வண்ணம் அவர்களைப் பார்த்தான். "ஏன், அப்பா! அம்மா விழித்துக் கொண்டிருக்கிறார்களா?" என்று கேட்டான் துறவி.

"விழித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதாவது சொல்லணுங்களா!" என்று கேட்டான் காவற்காரன்.

"ஓங்காரியாவைச் சேர்ந்த காத் பாபா வந்திருக்கிறார் என்று அம்மாவிடம் போய்ச் சொல்லு!" என்றான் துறவி.

"சாமி, பெரிய மனசு பண்ணி வந்தீர்களா? வணக்கம். காத் பாபா வந்தார்களா, வந்தார்களா என்று அம்மா விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்! இதோ போய்ச் செய்தி அறிவிக்கிறேன்" என்று சொன்ன காவற்காரன் எசமானிக்குச் செய்தி தெரிவிப்பதற்காக உடனே உள்ளே சென்றான்.

ஓங்காரியாவைச் சேர்ந்த காத் பாபாவின் புகழ் அந்தப் பக்கத்தில் வெகுவாகப் பரவியிருந்தது. அவர் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பாழடைந்த ஓங்காரியா கிராமத்தில் தங்கிக் கடுந் தவம் புரிந்தார். அந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் ஓங்காரியாவை விட்டு அவர் எங்கும் வெளியே வந்ததில்லை. ஜனங்கள் அவரைப் பற்றிப் பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். பல சித்திகளைக் கைக்குள் அடக்கியாண்டுவரும் யோகி என்றும் வருணனையோ, பைரவனையோ, யக்ஷனையோ வழிபட்டுத் தம் வசப்படுத்தி வைத்திருக்கிறார் என்றும் அவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டார்கள்.

நகரத்திலிருந்து நாற்பது ஐம்பது மைல்கள் தள்ளி அவர் வசித்து வந்தார். இருந்தாலும் மக்கள் அவரைத் தரிசித்து வரப் பக்தி சிரத்தையுடன் போய் வந்தனர். வண்டிகள் வாகனங்கள் போவதற்கு வசதியில்லாமல் இருந்த பொழுதிலும், கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மக்கள் போய் வந்ததிலிருந்து அத்துறவியின் பெருமையை ஒருவாறு உணரலாம்.

ஆங்கிலம் கற்றறிந்தவர்களைப் பற்றி ஈடுபாடு அற்றவர்கள், பக்தி சிரத்தையில்லாதவர்கள் என்ற அவச்சொல் வழங்கி வருகிறது. ஆனால் காத் பாபாவைப் போன்ற துறவிகளைத் தேடிச் சென்று தரிசனம் செய்துவரும் கற்றறிந்தவர்களைக் கண்டபின் அப்படிச் சொல்பவர் யாருமே அது பொய்யென்பதை உணர்வார்கள்.

துறவியாக இருப்பவன் ஆங்கில அறிவு பெற்றவனாயிருந்துவிட்டால் அவனது காரியங்கள் வெகு சுலபமாக நடைபெறுகின்றன. ஐரோப்பிய வேதாந்திகளில் சிலருடைய பெயரைத் தெரிந்து வைத்துக் கொள்ளுதல், அவர்களது கொள்கைகளைப் பற்றிக் கொஞ்சமாவது அறிந்து வைத்துக்கொள்ளுதல், அவற்றின் பெருமையையோ சிறுமையையோ எடுத்துக் கூறி அக்கொள்கைகளெல்லாம் நம் வேதாந்தத்திலிருந்து கையாளப்பட்டவையே என்று நிரூபித்தல், அவையெல்லாம் வேத காலம் தொட்டு நம் நாட்டில் வழங்கி வந்தவையே என்று எடுத்துரைத்தல், அவற்றை ஆதரித்துப் பற்பல வடமொழி நூல்களை ஆதாரம் காட்டுதல், கூடு விட்டுக் கூடு பாய்தல், பேய் ஓட்டுதல், மனோ தத்துவம் சம்பந்தமான பற்பல ஆராய்ச்சிகளை அறிந்துவைத்துத் தன் மேதையை வெளியிடுதல், தான் யோகத்தினால் அடைந்த சித்திகளை வர்ணித்தல், வேதாந்தத்தைப் பற்றி மனத்துக்கும் அறிவுக்கும் எட்டாத பல விஷயங்களைப் பற்றிப் பிரமாதமாய்ப் பாண்டித்யம் பொதுளும் முறையில் பேசுதல்—இதுபோன்ற விஷயங்களைப் பற்றித் துறவியானவன் சாதுர்யமாகப் பேசினால், ஆங்கிலம் கற்றறிந்தவர்களின் மனத்தில் தர்ம சம்பந்தமான பற்றை ஏற்படுத்த முடியும். அப்புறம் அவன் அவர்கள் வணங்கி வழிபடும் தெய்வமாகவே கூட மாறி விடுவான்.

அநேகர் காத் பாபா ஆங்கிலம் நன்கு கற்றறிந்தவர் என்றும், ஆங்கிலம் அறிந்தவர்கள் அவரிடம் அபார சிரத்தை வைத்திருக்கிறார்கள் என்றும், வழிபடக் கூடச் செய்கிறார்கள் என்றும் சொல்லி வந்தனர்.

அவருடைய சுபாவமே வெகு விசித்திரமாக இருந்தது. அவருடைய பைத்தியக்காரச் செயல்களும் விசித்திர சுபாவங்களும் மாசு கற்பிப்பதற்கோ மன்னிப்பதற்கோ உகந்தவையாகக் கருதப்படவில்லை; வழிபாட்டுக்கும் வணக்கத்துக்கும் ஏற்றவையாகவே கருதப்பட்டு வந்தன. அவர் ஏகாந்த வாழ்வு வாழ்ந்து வந்தார். மிகக் குறைவாகப் பேசி வந்தார். மாதத்துக்கு ஒரு முறை இரு முறையைக் காட்டிலும் அதிகமாக அவர் யாருக்கும் தரிசனம் தந்ததில்லை.

அநேகர் அவரைப் பற்றி எதிர்ப் பிரசாரங்களும் செய்து வந்தார்கள். க்ஷுர்த் தேவதைகளை வழிபடுபவர் என்றும் புலால் உண்பவர் என்றும் போதைப் பொருள் உபயோகிப்பவர் என்றும் சொல்லி வந்தனர். நரபலி கொடுக்கக் கூட அவர் தயங்கியதில்லை என்ற பேச்சும் உலவி வந்தது. இம் மாதிரி



பரவிய செய்திகள் அவர் பெருமையைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகப்படுத்தியே வந்தன. அவருடைய வாழ்வையும் மாகாத்மியத்தையும் மேம்படுத்தியே காட்டி வந்தன.

சாந்தா கௌரிக்குச் சந்நியாசிகள், தபஸ்விகள், துறவிகள் என்றால் பக்தி சிரத்தை அதிகம். பண்டிதர்களிடமும் புலவர்களிடமும் அவள் பெரும் மதிப்பு வைத்திருந்தாள். நாத் பாபாவின் பெருமையும் அவளுடைய செவிகளுக்கு எட்டியிருந்தன. ஆனால் நாற்பது ஐம்பது மைல் தூரம் நீர் மார்க்கமாகவோ நில மார்க்கமாகவோ சென்று அவரைப் பார்த்துத் தரிசனம் செய்து விட்டுத்தான் வரவேண்டும் என்ற அளவுக்குப் பக்தி சிரத்தை அவளுக்கு முற்றி விடவில்லை. தெய்வங்களைக் காண்பதற்காகவோ சந்நியாசிகளைத் தரிசிப்பதற்காகவோ வெளியே போய் வருவது அவளுக்கு எடுத்த விஷயமாகத் தோன்றவில்லை. ஆனால் துறவிகளும் பண்டிதர்களும் தன்னைத் தேடி வந்தால் அவர்கள் மேதைக்கும் துறவி மனப்பான்மைக்கும் உண்மைப் பரீட்சை நடந்து அதில் அவர்கள் தேறி விட்டார்கள் என்றே எண்ணுவாள். அரைகுறைப் படிப்புள்ள பண்டிதர்களும், ஆசை அகலாத துறவிகளும் அவள் அருகில் வராமல் விலகியே இருந்தார்கள். பெரிய பெரிய வித்வான்களும் அநுபவம் வாய்ந்த துறவிகளும் தான் அவள் முன்னிலையில் நிமிர்ந்து நிற்க முடியும்; பதில் சொல்ல முடியும். யோக வாஸிஷ்டத்தில் பயிற்சி பெற்ற சாந்தா கௌரி அறிவாளிகளுக்கும் துறவிகளுக்கும் மேதை தோய்ந்த ஒரு ஸ்தாபனமாகவே தோன்றினாள் என்றால் மிகையாகாது.

ஓங்காரியாவிலிருந்து நாத் பாபா இங்கேயுள்ள பைரவ மடத்தைக் கவனித்துக் கொள்வதற்காக வந்திருக்கிறார் என்று அவளுக்கு யாரோ தெரிவித்தார்கள். நாத் பாபாவைத் தன் வீட்டுக்கு விஜயம் செய்யுமாறு வேண்டிச் சாந்தாகௌரி அழைப்பு அனுப்பினாள். அழைப்பு அனுப்பியவர்களுக்கு இத்தனை 'முரட்டுத்தனமா' என்று நாத் பாபா சொல்லொணாத சொற்களால் கடிந்து கொள்ளத் தொடங்கி விட்டார். இருந்தாலும் பலர் ஒரு முகமாகக் கூறவே, அழைப்பை ஏற்று அவள் வீட்டுக்கு வருவதாகச் சம்மதித்தார். ஒரு நாள் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு வருவதாகவும் நேரம் குறிப்பிட்டார். 'சாந்தா கௌரியின் பங்களாவிலிருந்து குறித்த நேரத்துக்கு வண்டி அழைக்க வந்தது. வந்த வண்டியை மறுநாள் இரவு எட்டு மணிக்கு வருவதாகக் கூறித் திருப்பி யனுப்பிவிட்டார். அன்றும் அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு வண்டி அழைக்கப் போயிற்று. மூன்றாம் நாள் காலை ஆறு மணிக்கு வருவதாகத் தம் வருகையை ஒத்திப் போட்டு விட்டார். இப்படி அவர் குறிப்பிட்ட நேரங்களில் எல்லாம் வண்டி அழைக்கப் போயிற்று. இம்மாதிரி வண்டி யனுப்புபவர்கள் எவ்வளவு மண்டைக் கர்வம் பிடித்தவர்களாயிருக்க வேண்டும் என்று கூறி இனி வண்டி அனுப்பக்கூடாது. அனுப்பினால் வரமாட்டேன் என்று கடும் நிபந்தனை விதித்து மறு நாள் இரவு எந்த நேரத்திலாவது தாமே வருவதாகக் கூறியனுப்பினார்.

இத்தகைய விசித்திரம் வாய்ந்த மனிதரைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் சாந்தா கௌரியின் மனத்தில் எழுவது இயல்புதானே? ஆதலால் அவர் வரவை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தாள். அன்றிரவு நாத் பாபா தாமாகவே வருவதாக வாக்களித்திருந்தார். அதனால் இரவு பத்து மணி வரை சாந்தா கௌரி அவரை எதிர் பார்த்தாள். சொன்ன பிரகாரம் அவர் வராமற் போகவே, தினம்போல் நம்பிக்கை இழந்து விட்டாள்.

பக்கத்திலே உள்ள அறையில் அவள் பிள்ளையின் நண்பர்கள் வந்து கூடியிருந்தார்கள். கிட்டத் தட்ட மணி பதினொன்று ஆகும்வரை உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். சில முக்கியமான நண்பர்கள் இன்னும் அரைமணி நேரம் அதிகமாக உட்கார்ந்திருந்தார்கள். பிறகு ஒவ்வொருவராக இரண்டு இரண்டு பேராக எல்லோருமே போய் விட்டார்கள்.

அப்பொழுது வேலையாளைக் கூப்பிட்டு, "யாராவது துறவி வந்தார்களா, என்ன?" என்று சாந்தா கௌரி கேட்டாள். இல்லையென்று தெரிய வந்தது. வந்திருந்தால் அவளைப் பார்க்காமலா போவார்கள்? அப்படியிருக்கும்பொழுது அவள் அந்தக் கேள்வியை எதற்காகக் கேட்டாள்? நாத் பாபாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்து ஓடிக் கொண்டிருந்தது தான் அதற்குக் காரணம். நம்பிக்கை இழந்து விட்ட அவள் மணி பன்னிரண்டு அடித்ததும் படுத்துத் தூங்கலாம் என்று எண்ணி எழுந்தாள். அதற்குள் வேலைக்காரன் வந்து நாத் பாபா வந்திருக்கும் செய்தியை அறிவித்தான்.

நாத் பாபாவின் விசித்திர சுபாவத்தை முன்பே கேட்டிருந்ததாலும், அவர் தம் வருகையைத் தள்ளித் தள்ளிப் போட்டதை அநுபவத்தால் உணர்ந்திருந்ததாலும், அவர் அந்நேரத்துக்கு வந்தது சாந்தா கௌரிக்கு வியப்பை அளிக்கவில்லை. அவர் வந்துவிட்ட பிறகு அவரை வரவேற்கத்தானே வேண்டும்? எனவே, வேலைக்காரனைப் பார்த்து நாத் பாபாவை மரியாதையுடன் அழைத்து வருமாறு கட்டளையிட்டாள்.

சாந்தா கௌரி ஒரு பலகையில் அமர்ந்து கொண்டாள். அதில் சாய்ந்து கொள்வதற்கு ஒரு பட்டுத் தலையணை பின்புறமாக வைக்கப்பட்டிருந்தது. பலகையில் மான் தோல் விரித்திருந்தது. சாந்தா கௌரிக்குப் பக்கத்தில் பல புஸ்தகங்கள் கிடந்தன. அருகிலேயே புஸ்தகங்களை வைத்துக் கொண்டு



குழந்தை அவைகளை விரும்புகிறது

ஜே. பி. மங்காராமின்

NOURISHING

நரிஷிங் பிஸ்கட்ஸ்



நரிஷிங் பிஸ்கட்டுகளை குழந்தை ருசி பார்க்கட்டும். அவைகளில் அதிக மான மணங்கவர் மணமும் இனிய ருசியும் ஆரோக் கிய மளிக்கும் வைடமின் களும் அடங்கி யிருப்ப தால் அவைகளை அவன் மிகவும் விரும்புகிறான்.

வைடமின்கள் மிகுதியானது
தரமேன்மை பெற்றது

ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்

சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

NATIONAL M. 1

படிப்பதற்கான ஒரு சிக்குப் பலகையும் விரித்தபடி வைக்கப்பட்டிருந்தது.

நாத் பாபாவும் ஜகதீஷும் உள்ளே பிரவேசித்தார்கள். ஜகதீஷ் முன்னும் நாத்பாபா பின்னுமாக வந்தார்கள். சாந்தா கௌரி உட்கார்ந்த வண்ணமே நாத் பாபாவுக்கு நமஸ்காரம் செய்தாள். ஆனால் நமஸ்காரம் செய்து விட்டுத் தலை நிமிர்வதற்குள்ளாகவே கொலையாளியைக் கண்டு விட்டது போன்ற பயமும் பீதியும் அவளுடைய முகத்திலும் கண்களிலும் பரவிப் பனிச்சிட்டன. அந்தப் பயத்தில் அவளால் கூச்சல் கூடப்போட முடியவில்லை. அவள் தன் முகத்தைச் சட்டென்று திருப்பிக் கொண்டு இரு கைகளாலும் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

"சாந்தா, இன்னும் உன்னிடம் அதே பழைய உடல் அழகு பாக்கி யிருக்கிறாற் போலிருக்கிறதே!"

தன் கத்திக்குச் சரியான இரை கிடைத்தால் கசாப்புக் கடைக்காரனுக்கு எத்தகைய மகிழ்ச்சி ஏற்படுமோ, அத்தகைய மகிழ்ச்சி நாத் பாபாவுக்கு ஏற்பட்டது. ஜகதீஷ் பிரமித்து விக்கித்துப் போய் நின்றான்.

"நல்லது, சாந்தா! நான் விரும்பியது நடந்து விட்டது. நீ என்னைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டாய்!" என்றார்.

சாந்தாகௌரி மெதுவாகத் தன் கண்களைப் பொத்தியிருந்த கைகளை அகற்றி முகத்தைத் திருப்பினாள். அவள் கண்களில் தோன்றிய பயம் பயமாகவே இருந்தது.

"நீங்கள் இன்னும் உயிரோடு தான் இருக்கிறீர்களா?" என்று கேட்ட அவள் குரலில் பயத்தோடு வியப்பும் தாண்டவமாடியது.

"இதனால் உனக்கு என்ன ஆகப்போகிறது? நான் பிசாசாக உருவெடுத்து வந்திருப்பதாக எண்ணிக் கொள்! ஆமாம், உன் கண்களுக்கு நான் இப்பொழுது பேயாகத் தானே காட்சி அளிக்கிறேன்?" என்று கேட்ட நாத் பாபா பேய் போலச் சிரித்தார். பிறகு சாந்தா கௌரிக்குப் பக்கத்தில் போட்டிருந்த புலித் தோலில் அவளைக் கேட்காமலே போய் உட்கார்ந்தார்.

"என்னை அமைதியாக இறக்க விடக் கூடாதா? இப்பொழுது எதற்காக நீங்கள் இங்கே வந்தீர்கள்? என்னிடம் வந்து உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டும்?" என்று கேட்டாள் சாந்தா கௌரி.

"எனக்கும் உன்னைப்போலவே அமைதியோடு இறக்க வேண்டும் என்ற ஆசை இருக்கக் கூடாதா? கடந்த இருபது ஆண்டுகளாக நானும் அமைதியைத் தான் தேடித் திரிகிறேன். என்ன தேடியும் அது கிடைக்கவில்லை. அதனால் நான் இப்பொழுது மனிதர்களைக் கொல்லும் அரக்கனாக உருமாறி விட்டேன், தெரிந்ததா?" என்றார் நாத் பாபா.

"நீங்கள் எப்பொழுதுதான் அரக்கராக இருந்ததில்லை?" என்றாள் சாந்தா கௌரி.

"நீ என் வாழ்க்கையில் புகாமல் இருந்த வரை நான் அரக்கனாக இருந்ததில்லை.

"உங்கள் தலையெழுத்து அப்படி யிருந்தது. அதற்கு நான் என்ன செய்வது? இல்லாவிட்டால் என்னை உங்கள் வாழ்க்கையோடு எதற்காகப் பிணைத்துக் கொண்டீர்களாம்?" என்று கேட்டாள் சாந்தா கௌரி.

"உண்மையான வார்த்தை. ஏனென்றால் என் தலைவிதி மட்டுந்தானே அப்படி யிருந்தது! என் வாழ்க்கையில் பிரவேசித்ததனால் உனக்கு ஒன்றும் இடையூறு ஏற்படவில்லை. நல்லதுதான் ஏற்பட்டது. நான் உன் வாழ்க்கையில் பிரவேசித்ததனால் உனக்கு உன்னைக் காத்துக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. நான் உன் இன்பக் கேளிக்கைகளைப் பிறருக்குப் புலனாகாமல் மூடி மறைக்கும் ஒரு சாதனமாகத் திகழ்ந்தேன். அப்படித்தானே?" என்றார் நாத் பாபா உள்ளக் குமுறலுடன்.

"இன்னும் உங்களுக்கு இந்தப் பிரமை தீரவில்லையா?"

"பிரமையா? இன்னும் எதற்காகப் பொய் பேசி என்னிடம் பசப்புகிறாய்? உனக்குப் பிஹாரியிடம்தான் அன்பு இருக்கிறதென்றும் என்னிடம் இல்லையென்றும் நீயே என்னிடம் சொல்லவில்லையா?"

"சொன்னேன். உண்மையைச் சொன்னேன். அதற்கு இப்பொழுது என்ன?"

"இப்பொழுது என்னவா? அது நடந்து இருபத்தைந்து வருஷங்களாகி யிருந்தாலும்

இன்றைக்கும் நான் அதைப் பற்றியேதான் பேசப் போகிறேன்! தெரிந்ததா?''

"அந்தப் பேச்சுப் பேசுவதா யிருந்தால் இந்தப் பையனை வெளியே உட்காரச் சொல்லுங்கள். இவன் இங்கே இருப்பானேன்?''

"இவன் இங்கேதான் இருப்பான். இவன் என் சிஷ்யன். எனக்கு அடுத்தபடி இவனை நான் என் வாரிசாகத் தயார் செய்தாக வேண்டும்!''

"அப்படியா? ரொம்பசரி! என்ன செய்வதென்ற உத்தேசத்துடன் இன்று நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள்?''

"சாந்தா! நம் திருமணம் நடந்து இன்று எத்தனை வருஷங்களாயின?''

"எத்தனை வருஷங்களானால் என்ன? உங்களை மணந்து கொண்டு நான் என் பல வருஷங்களைப் போக்கிக் கொண்டேன்!''

"உன்னைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே! என்னைக் காட்டிலும் ஏழெட்டு வயது சிறியவளாகவே தோன்றுகிறாயே!''

வரன் முறையற்ற அந்தக் கேள்வியைக் கேட்ட சாந்தா கௌரி எரித்து விடுபவள் போல் ஏளனமாக ஒரு முறை நாத் பாபாவைப் பார்த்தாள். அவர் பேச்சுக்கு அவள் மறுமொழி யொன்றும் கூறவில்லை.

"இன்னும் உயிர் வாழ வேண்டும் என்று உனக்கு ஆசையாக இருக்கிறதா?''

காலதேவன், தான் கவர்ந்து செல்ல வந்திருக்கும் உயிருடன் வேடிக்கை செய்வது போலிருந்தது, நாத் பாபா கேட்ட அந்தக் கேள்வி. எலியைக் கொல்வதற்கு முன் பூனை அதை ஓட ஓட விட்டு விளையாடுமே, அது போலிருந்தது அப்பொழுது அவர் சாந்தா கௌரியைப் பார்த்த பார்வை. (தொடரும்)

இலங்கையர் திடுக்கிட்டனர்!

கே. வி. எஸ். வாஸ்

'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி மறைந்து விட்டார் என்ற செய்தியை இந்திய ரேடியோ ஒலிபரப்பியதைக் கேட்டதும் இலங்கையிலுள்ள இருபத்திரண்டு லட்சம் தமிழ் மக்களும் திடுக்கிட்டுப் போய் விட்டார்கள். அதிர்ச்சியளிக்கும் இந்தப் பயங்கரமான செய்தியை அவர்களால் நம்பவே முடிய வில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கும் நிலைத்திருக்கும் அமர இலக்கியங்களைச் சிருஷ்டித்த மகா மேதையை மிருத்யு தேவன் இவ்வளவு சுலபமாக ஆட்கொண்டுவிட முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்க வில்லை. அதிலும் 'கல்கி' சுகவீனமா யிருக்கும் தகவலே இலங்கை மக்களுக்குச் சென்ற வாரத்திய கல்கியிலிருந்து தான் முதன் முதலாகத் தெரிய வந்தது. அவர் குணமடைந்து வருவதாக நினைத்த நேரத்தில் திடீரென்று அமரராகி விட்டார் என்ற செய்தி கிடைத்து அனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்து விட்டது.

அன்று முழுவதும் 'வீரகேசரி' காரியாலயத்தில் டெலிபோன் மணி அடித்தவண்ணமாக இருந்தது. தமிழன்பர்கள் துக்கம் தோய்ந்த தொனியில் கவலையோடு 'ரேடியோச் செய்தி உண்மைதானா! உண்மையா யிருக்க முடியுமா!' என்று விசாரித்த வண்ணமா யிருந்தனர். மறுநாள் காலை 'வீரகேசரி'யில் செய்தியைப் பார்த்த பிறகுதான் நடக்க முடியாததும், நடக்கக் கூடாததுமான சம்பவம் நடந்து விட்டது என்பதை மக்கள் அறிந்து அங்கலாய்த்தார்கள்.

இந்தியாவைப் போலவே இலங்கையிலும் 'கல்கி'க்குப் பல நெருங்கிய நண்பர்கள் இருப்பதை "இலங்கையில் ஒரு வாரம்' என்ற தலைப்புடன் அவர் எழுதிய பிரயாண அநுபவ நூலிலிருந்து தமிழ் நாட்டவர்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். தமிழ் அபிமானம் நிறைந்த இந்நாட்டிலே தமிழ் விழாக்களைக் கொண்டாடும் வழக்கத்தை 1950-ம் வருட ஆகஸ்டு மாதம் முதன் முதலாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திதான். கொழும்பு தமிழ்ச் சங்க விழாவை அவர் ஆரம்பித்து வைத்த சுபநேரம் அடுத்தடுத்துப் பல தமிழ் விழாக்கள் இலங்கையில் நடப்பதற்கு வழிகாட்டியா யிருந்தது. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழக ஆதரவில் இந்தியாவுக்கு வெளியே முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடப்பதற்கு மூல புருஷராய் இருந்தவரும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திதான். இலங்கையில் தமிழ் வளர்க்க இவ்வளவு தூரம் உதவி புரிந்த ஒரு அன்பரின் பிரிவை இலங்கைத் தமிழ் அன்பர்கள் எவ்விதம் தாங்க முடியும்! கொழும்பு தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு விஜயம் செய்திருந்த காலத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமின்றிச் சகலருடனும் சிரித்துச் சிரித்துச் சரசமாகப் பேசிப் பழகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான நண்பர்கள் ஏற்பட்டார்கள். அவ்வளவு நண்பர்களும் இன்று 'கல்கி'யின் பிரிவைக் கேட்டுத் துக்கக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இலங்கையில் பல இடங்களிலே இவ்வார அநுதாபக் கூட்டங்கள் நடக்கின்றன. மறைந்த மேதைக்கு அஞ்சலி தெரிவித்துப் பல சங்கங்கள் தீர்மானங்களை நிறைவேற்றி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் மனைவிக்கும் அவரது ஆப்த நண்பர் ராஜாஜி அவர்களுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கல்கியின் பிரிவைக் கேட்டுத் துக்கப்படாத தமிழ்க் குடும்பமே இலங்கையில் இல்லை. இலங்கை இந்தியர்களோ தங்களைத் தாங்கிக் கொண்டிருந்த ஒரு கல் தூண் திடீரென்று சரிந்து விழுந்து விட்டதை எண்ணி யெண்ணிக் கண்ணீர் விட்டிருக்கிறார்கள். இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தொண்டமான் 'கல்கி'யின் பிரிவை இன்னமும் நம்பத் தயாரில்லை. 'எல்லாருக்கும் வரும் மறைவு கல்கிக்கு எப்படி வர முடியும்!' என்கிறார்.

உதவி நீதி மந்திரி ஸ்ரீ வி. குமாரஸ்வாமி சொல்லியதைப் போல ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் பிரிவு இந்தியாவுக்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் ஒரு பெரும் நஷ்டம். தலைவனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்துக்கு இலங்கைத் தமிழ்ச் சமூகம் தனது இதயபூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் அவரது ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றது.

Gevaert

1894 60 1954

போட்டோ தொழிலில் 60 வருஷ சிறந்த சேவை



கேவாபான் 33

பகல் வெளிச்சத்திற்கும் செயற்கை வெளிச்சத்திற்கும் மிகச் சிறந்தது இந்த மின்னல்வேக பாங்ரோமாடிக் பிலிம்.


இலவச விபரத்திற்கும் கேவார்ட் எக்ஸ் போஷர் கால்குலேட்டருக்கும் எழுதுங்கள் :

Allied Photographics Limited

அல்லீட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

(மெயிலிங் டிபார்ட்மெண்ட்) கஸ்தூர் பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜீ டாடா ரோடு, பம்பாய்-1

கிளை ஆபீஸ்கள் : பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - புது டில்லி



களங்கமற்று புத்தம்புதியது!
தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதி வேகமாக அனுப்பப்படும் ஒப்பற்ற முறையாலேயே ப்ரூக் பாண்ட் தேயிலை நித்தமும் புத்தம்புதியதாக இருக்கிறது.
கலவையற்று சுத்தமானது!
Brooke Bond Tea
Brooke Bond
Tea
யோசித்து வாங்குங்கள்!
செலவைக் குறையுங்கள்!
மற்றெந்த
தேயிலையையும் விட
ப்ரூக் பாண்ட்
தேயிலையையே
அதிகப்படியான ஜனங்கள்
வாங்குகிறார்கள்!

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

44. ஜடாயு

ராஜகுமாரர்களும் சீதையும் அகஸ்தியர் சொன்ன வழியைப் பின்பற்றிப் பஞ்சவடிக்குச் சென்றார்கள்.

ஏகிஇனிது அவ்வயின்
இருந்துறை மீன்என்றான்
மேகநிற வண்ணனும்
வணங்கி விடைகொண்டான்
பாகனைய சொல்லியொடு
தம்பி பரிவில்பின்
போகமுனி சிந்தைதொட
ரக்கடிது போனான்."

அகஸ்திய முனிவருடைய சிந்தையானது மூவருடன் நான்காவது பிரயாணியாகச் சென்றது என்கிறார் கம்பர். அதிலும் லக்ஷ்மணனுடன் சென்றது என்று சித்திரிக்கிறார். வரப்போகும் விஷயங்கள் அறிந்தவரல்லவா முனிவர்? கவிக்குத் தெரியும் ஞானிகளுடைய சிந்தையின் போக்கைக் கண்டு சொல்ல!

போகும் வழியில் ஒரு பெரிய கழுகைக் கண்டார்கள். கழுகின் அற்புத வடிவத்தைக் கண்டு இது ஒரு ராக்ஷசனாகத்தான் இருக்க வேண்டும் என்று ராமன் எண்ணி, "நீ யார்?" என்றான்.

அந்தக் கழுகு மிகுந்த பிரியத்துடன், "குழந்தாய்! நான் உங்கள் தந்தையின் சிநேகிதன்" என்றது.

பிறகு அந்தப் பெரும் பறவை தன் குலத்தை விவரித்துச் சொல்லிற்று. கருட பகவானுடைய தம்பி அருணனுடைய மகன் சம்பாதியின் தம்பி ஜடாயு என்று தெரிந்து கொண்டார்கள்.

"நீங்கள் இங்கே வனவாசத்தில் இருக்கும் போது சீதையைத் தனியாய் விட்டு விட்டு வேட்டைக்குப் போகும் காலத்தில் நான் அவளுக்குத் துணையாக இருப்பேன்" என்றான்.

இப்படித் தங்கள் பிதா தசரதனுக்கு நெருங்கிய நண்பனான ஜடாயு சொன்னதைக் கேட்டு அவனை ராமலக்ஷ்மணர்கள் மிகப் பிரியமாக ஆலிங்கனம் செய்து, "காட்டில் நாம் ஒரு பெருந் துணையைப் பெற்றோம்" என்று மகிழ்ச்சியடைந்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஜடாயுவை முதன் முதலில் பார்த்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி வால்மீகி சுருக்கமாக இவ்வளவு தான் சொல்லுகிறார். பிறகு ஜடாயு சீதைக்காக ராவணனுடன் சண்டையிட்டு, காயமுற்று ராம லக்ஷ்மணர்கள் வரும் வரையில் எப்படியோ உயிரை வைத்துக் கொண்டிருந்து விஷயத்தை அவர்களிடம் கூறிவிட்டு இறந்து போனது, ராமன் ஜடாயுவின் வீரத்தையும் அன்பையும் பாராட்டிப் பிரலாபித்தது-இவற்றைப் பின்னால் வால்மீகி சொல்லுகிறார். ஜடாயுவை முதலில் ராமன் சந்தித்த இந்த நிகழ்ச்சி வால்மீகி ராமாயணத்தில் இவ்வாறு மிகச் சுருக்கமாகச் சொல்லப் பட்டிருப்பதை ஒரு குறையாகக் கம்பர் நினைத்தார் என்று தெரிகிறது. அந்தக் குறையைத் தம் ராமாயணத்தில் கம்பர் மிக அழகாகப் பூர்த்தி செய்து தமிழருக்குத் தந்திருக்கிறார். வால்மீகியில், அதாவது இக்காலத்தில் கிடைத்த வால்மீகி ஏடுகளில், ராஜ குமாரர்கள் ஜடாயுவைக் கண்ட படலம் நியூனமாக இருக்கிறதே என்று வருத்தப்பட்டு, தம்முடைய ராமகதையில் அதற்கு என்று ஒரு தனிப் படலம் கொடுத்துப் பாடி விட்டார். கம்பர் தம் கவிதா சக்தியைச் செலுத்தி நடந்ததைத்

தெய்வீகக் கண்ணால் கண்டு பாடியிருக்கிறார். அரண்ய காண்டத்தில் இருக்கும் 1200 பாட்டுக்களில் 350 பாடல்களைத் தான் கம்பருடைய கவிதா முத்திரையிருப்பதாக டி. கே. சி. எடுத்தார்கள். இந்த ஜடாயுவைக் கண்ட படலத்திலோ 47 பாடல்களில் 37 தேர்ந்தெடுத்திருக்கிறார். தள்ளி விட்டது மிகக் குறைவு.

ஜடாயுவைப் பார்த்ததும் இவன் ஒரு அரக்கனை இருக்கலாம் என்று சந்தேகித்து அருகில் போய்ப் பார்க்கிறார்கள். அதே சமயம் வில் ஏந்தி மரவுரி தரித்த வீரர்களை ஜடாயுவும் உற்று நோக்கிப் பார்க்கிறான். 'இவர்கள் யார், இரண்டு தேவர்களோ?' என்று அவர்கள் அழகையும் காந்தியையும் பார்த்து வியப்படைகிறான். தேவர்களை நேரில் கண்டு நன்ருகப் பழகிய ஜடாயுவே இப்படிச் சந்தேகப் படுகிறான். முடிவில் 'இவர்கள் தேவர்கள் அல்ல?' என்று தீர்மானித்துக் கொள்ளுகிறான். பிறகு, 'இவன் மன்மதனேயோ!' என்று ராமனைப் பற்றி எண்ணுகிறான். பிறகு இருவர் சாயலையும் நன்ருகக் கவனித்து 'இவர்களைப் பார்த்தால் நண்பன் தசரதன் சாயலாகத் தோன்றுகிறது' என்று சந்தேகப்பட்டு, "நீங்கள் யார்?" என்று ராஜ குமாரர்களைக் கேட்கிறான். அவர்கள், "நாங்கள் தசரத மகாராஜாவின் குமாரர்கள்" என்று சொல்லுகிறார்கள். சொன்னவுடன் ஜடாயு கீழே இறங்கி அவர்களைத் தன் சிறகுகளைக் கொண்டு தழுவிக் கொண்டு, "அரசன் சுகமா?" என்று கேட்கிறான்.

"என்றென்றும் உலகம் மறக்காத முறையில் வாய்மையைக் காத்த தந்தை சுவர்க்கம் சென்று விட்டார்" என்று சொல்லுகிறான்.

ஜடாயு இந்தச் செய்தியைக் கேட்டதும் துயரப் பட்டு மூர்ச்சையடைந்து பிறகு ராம லக்ஷ்மணர்களுடைய கண்களினின்று பெருகிய நீர் அவன்மேல் பட்டு நினைவடைந்து பேசுகிறான்.

"தசரதன் உடலாகவும் நான் உயிராகவும் இருந்தோம். யமன் ஏன் உயிரை விட்டு விட்டு உடலைக் கொண்டு ஏகினான்? அவன் என்னையல்லவோ கொண்டு போயிருக்க வேண்டும்" என்றெல்லாம் சொல்லி ராஜகுமாரர்கள் ஒருவாறு மறந்திருந்த துயரத்தை மறுபடி எழுப்புகிறான். இறந்த தந்தையை மறுபடி அடைந்து விட்டதாகவே ராம லக்ஷ்மணர்கள் ஜடாயுவைத் தழுவி ஆறுதலும் சந்தோஷமும் அடைந்தார்கள். "எங்கள் தந்தை சத்திய நெறியை விட்டுத் தவறக்கூடாது என்கிற உறுதியில் நின்று, அதனால் சகிக்க முடியாத துன்பத்தை யடைந்து உயிர் நீத்தார். எங்களைப் பெற்ற அன்னைமாரையும் ஊரையும் விட்டு நீங்கி நாங்கள் வனத்திலிருக்கிறோம். உன்னைப் பார்த்து ஆறுதல் பெற்றோம்" என்றார்கள்.

"நீங்கள் வனவாசம் பூர்த்தி செய்யுங்கள். அது வரையில் உங்களுக்குத் துணையாக நான் இருக்கிறேன். பிறகு நானும் தசரதன் இருக்கும் உலகத்துக்குப் போவேன்" என்றான் ஜடாயு.

பிறகு "தந்தை இறந்த பின் நீங்கள் அயோத்தியில் இருந்து கொண்டு நாட்டை ஆள்வதற்குப் பதில் ஏன் வனத்தில் இந்தத் தவ வேஷத்துடன் இருக்கிறீர்கள்? எந்தப் பகைவன் உங்களைக் காட்டுக்குத் துரத்தினான்? இக்ஷ்வாகு குலத்துக்கு, துரோகம் செய்த அந்தப் பகைவனை எனக்குச் சொல்லுங்கள். அவனை ஒழித்துத் தீருவேன்" என்று கோபமாகக் கேட்கிறான்.

நடந்ததையெல்லாம் லக்ஷ்மணன் சொன்னான். "என்னப்பனே! உனக்குச் சமானம் உலகத்தில் யார்?" என்று ஜடாயு ராமனைத் தழுவிக் கொண்டான்.

பிறகு சீதையைப் பார்த்து, "இந்தத் தேவி யார்?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டு மகிழ்ச்சி யடைகிறான். மேலே கிளம்பிப் பறந்து அகஸ்தியர் குறித்த இடத்தை ராஜகுமாரர்களுடன் கூடவே சென்று காட்டுகிறான்.

இது கம்பருடைய சித்திரம். வால்மீகி ராமாயணத்தில் நாம் காணும் விஷயத்திலிருந்தே இப்படித்தான், கம்பர் பாடியிருக்கிறபடி, நிகழ்ந்திருக்கும் என்று எண்ண வேண்டியதாகும். விட்டுப் போனதைக் கம்பர் சொல்லி விட்டார் என்றே நாம் வைத்துக் கொள்ளலாம். கம்பர் வால்மீகியை எவ்வளவு கூர்ந்து பின்பற்றிச் செல்லுகிறார் என்பதையும் கம்பர் எவ்வளவு அழகாக உணர்ச்சி பாவத்துடன் அங்கங்கே குறைகளைப் பக்தியுடன் பூர்த்தி செய்கிறார் என்பதையும் இம்மாதிரியே பல இடங்களில் நாம் காண்கிறோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆய்விட்டது, வால்மீகி பாடிய ராமாயணத்துக்கு. ஏடுகளுக்கு எத்தனையோ விபத்து. விட்டுப் போனதைப் பக்தர்களும் கவிஞர்களும் தான் காண்பார்கள். குறையாக இருப்பதோடு இரண்டாம்தரம் கவிகளும் சும்மா விடுவதற்கு இஷ்டப் படாமல் சேர்த்தும் இருப்பார்கள். இதற்கெல்லாம் வருந்திப் பயனில்லை. இருப்பதையாவது எல்லாரும் படிக்க வேண்டும்.

45. சூர்ப்பனகை

பஞ்சவடியை அடைந்ததும், "பார்த்தாயா, லக்ஷ்மணா! எவ்வளவு மனோகரமான இடத்தை அகஸ்தியர் நமக்கு அமைத்துக் கொடுத்தார்!" என்று அங்கு கண்ட அழகை மெய்மறந்து அனுபவித்து ராமன் பேசுகிறான்.

"நானும் நீயும் சீதையும் இந்த இடத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு எவ்வளவு காலமேனும் சந்தோஷமாக இருக்கலாம். மலைகளைப் பார்! அதிக தூரத்திலுமில்லை, அதிக அண்மையிலுமில்லை. மான் கூட்டங்களைப் பார். மரங்களும் மரங்களில் விளையாடும் பறவைகளின் இனிய நாதங்களும் புஷ்பங்களும் தண்ணீரும் நீர்ப் பறவைகளும் மணலும் எல்லாம் எவ்வளவு ரமணீயமாக இருக்கிறது. இங்கே நீ ஒரு சரியான இடத்தைப் பார்த்து ஆசிரமம் அமைப்பாய்" என்று லக்ஷ்மணனுக்குச் சொன்னான்.

ஒரு இடத்தைக் கண்டு லக்ஷ்மணன் மிக சாமர்த்தியமாக ஆசிரமம் கட்டி முடித்து விட்டான். இங்கே வால்மீகி முனிவர் நின்று லக்ஷ்மணனுடைய சாமர்த்தியத்தையும் சுறு சுறுப்பையும் விளக்குகிறார். ஆசிரமம் கட்டினதை யெல்லாம் நன்றாக விவரிக்கிறார். மண் சுவர் எழுப்பியது, மேலே கூரை பரப்பியது எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லுகிறார். கட்டி முடிந்ததும் ராமன் தம்பியை அணைத்துப் பரவசமாகி, "லக்ஷ்மணா! நீயே எனக்குத் தகப்பன் ஆனாய்!" என்று சொல்லி உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

அரண்மனையில் வசித்த இராஜகுமாரன் இதை யெல்லாம் எப்படி, எங்கே கற்றான் என்று நாமும் ஆராய வேண்டும். காட்டில் சாமான்களைத் தேடி யடைந்து, குடிசையைக் கச்சிதமாகக் கட்டுவதற்கு வேண்டிய அறிவும் பயிற்சியும் அந்தக்காலத்தில் அரச குமாரர்கள் பெறும் கல்வியில் அடங்கி யிருந்தது என்று கண்டு கொள்ளலாம்.

* * *

பஞ்சவடி ஆசிரமத்தில் ராமனும் சீதையும் லக்ஷ்மணனுடைய அன்புப் பணியைப் பெற்றுச் சுகமாகக் காலம் கழித்தார்கள்.

ஒரு நாள், முன் பனிப் பருவ ஆரம்பத்தில் மூவரும் அதிகாலையில் கோதாவரி நதிக்கரை நோக்கி வழக்கப்படி சென்றார்கள். குளித்து, காலை வந்தனம் முடித்துப் பாத்திரங்களைச் சுத்தி செய்து தங்களுக்கு வேண்டிய ஜலம் எடுத்துப் போவதற்காகச் சென்றார்கள். அந்தப் பருவத்தின் விசேஷங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே போனார்கள்.

மாதங்களில் மார்கழி மாதமே சிறந்தது என்பது நம் முன்னோரும் பெரியோரும் கண்ட உண்மை. லக்ஷ்மணன் பரதனை நினைத்துக் கொண்டான்.

"இந்தச் சமயத்தில் அன்புக்குரிய பரதன் விரதங்களை அனுசரித்து



வருவான். எவ்வளவு சுகமாயிருக்க வேண்டியவன். நாம் வனம் சென்று விட்டோம் என்று தானும் கஷ்டமான விரதங்களை மேற்கொண்டிருக்கிறான். அவனை நினைக்க நினைக்க என் உள்ளம் வருத்தம் அடைகிறது. ஐயோ பாவம், சாப்பாட்டைக் குறைத்துக் கொண்டு இந்தக் குளிர் காலத்திலும் தரையில் படுப்பான். குளிரில் சரயூ நதியில் குளிக்கப் போவான். அண்ணா! நாம் எவ்வளவு நல்ல சகோதரனைப் பெற்றோம். அவன் பேச்சு, அவன் நடை, அவன் உள்ளம் எல்லாம் எவ்வளவு சுத்தம். அனுபவிக்க வேண்டிய சுகங்களை யெல்லாம் விட்டு விட்டு நமக்காக விரத வாழ்க்கை நடத்துகிறான். அவனை நினைத்தால் மிகவும் துக்கமாக இருக்கிறது. நம் தந்தையை அவன் எல்லா விதத்திலும் ஒத்திருக்கிறான். ஜனங்கள், தாயைப்போல் மகன் இருப்பான் என்று சொல்லுவார்கள். அது பரதன் விஷயத்தில் தவறாக இருக்கிறது. இவன் தந்தையின் சுபாவமே கொண்டிருக்கிறான். இந்தக் கைகேயி ஏன் இப்படிக் குரூர சுபாவம் பெற்றாள்? அவளுக்கு எப்படி இவ்வளவு நல்ல குமாரன் பிறந்தான்" என்று லக்ஷ்மணன் பொங்கி வந்த நினைவுகளைப் பேசிக் கொண்டே போனான்.

"தம்பி, கைகேயியைத் தூஷிக்க வேண்டாம். பரதனைப் பற்றிச் சொல். நம் தந்தையைப் பற்றிச் சொல். ஆனால் நம் சிறிய தாயாரைப் பற்றிக் குறை சொல்ல வேண்டாம். பரதனைப் பற்றி நீ சொன்னதெல்லாம் உண்மை. நான் எவ்வளவு நிச்சய புத்தியுடன் ஊரை மறந்து வனவாசம் செய்தாலும், பரதன் ஞாபகமாகவே இருக்கிறது. அவனை இப்போதே பார்க்க வேண்டுமென்று ஆசையுண்டாகிறது, லக்ஷ்மணா! நாம் எப்போது அவனைப் பார்த்து மகிழ்வோம்? நாம் நால்வரும் மறுபடி எப்போது ஓரிடத்தி லிருப்போம்? பரதனுடைய அமிருதம் போன்ற பேச்சு என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது."

இவ்வாறு மார்கழி மாதத்தில் ஊரையும் பரதனையும் நினைத்துக் கொண்டு அதிகாலையில் கோதாவரியில் ஸ்நானம் செய்தார்கள். இந்தக் கட்டம் படிக்கும்போது நம்முடைய உள்ளம் கரைகிறது.

பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் பண்ணி விட்டுச் சூரிய நமஸ்காரம் செய்து விட்டு, மகாதேவனைப் போல் ஜடை தரித்த ராமன் தெய்விக ஒளி வீச சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் ஆசிரமம் திரும்பிப் போனான்.

காலை செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்து விட்டு விச்ராந்தியாக ஆசிரமத்தில் உட்கார்ந்து கொண்டு, புராண இதிகாசக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அச் சமயம் ராமனுடைய முகம் சித்திரை மாதத்துப் பூரண சந்திரனைப் போல் பொலிவு பெற்றுப் பிரகாசித்தது. பேசிக் கொண்டிருந்த கதையில் மனம் லயித்திருந்த அந்தச் சமயம் திடீர் என்று ஒரு ராக்ஷஸ ஸ்திரீ அங்கே வந்து சேர்ந்தாள். இவள்தான் சூர்ப்பனகை, ராவணனுடைய சகோதரி.


தேவலோக வாசி ஒருவனைப் போல் அழகில் வடிவம் கொண்ட ராஜகுமாரனை அவள் பார்த்தாள். அவலக்ஷணமே உருக்கொண்ட அந்த அரக்கி மன்மதனுடைய அழகு பெற்ற ராமசந்திரனைப் பார்த்ததும் காம பரவசமாகிப் போனாள். மகா விகாரமான அவள் காமத்தால் பீடிக்கப்பட்டுப் பேச ஆரம்பித்தாள்.

"தவம் செய்பவர்களைப் போல் ஜடை தரித்துக் கொண்டு, மனைவியையும் அழைத்துக் கொண்டு, வில்லும் அம்புமாக ராக்ஷசர்களுடைய காட்டுக்கு வந்திருக்கும் நீ யார்? எதற்கு வந்திருக்கிறாய்? உண்மையைச் சொல்வாய்!" என்றாள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் தன் பெயர், ஊர், சரித்திரம் முழுதும் சரியாகச் சொல்லி விட்டு, கேட்டவருடைய குலம், காரியம் ஆகியவற்றைக் கேட்பது அக்காலத்துப் பண்பாடு. அந்தப் பண்பாட்டில் பழகின ராமன்,

"தேவர்களுக்குச் சமானமான சௌரியம் பொருந்திய தசரத மகாராஜனுடைய மூத்த குமாரன் நான். என்னை ராமன் என்று அழைப்பார்கள். இவன் என் தம்பி லக்ஷ்மணன். இவள் என் மனைவி யாவாள். இவள் பெயர் சீதை. என் தாயும் அரசனான தந்தையும் சொல்லி யனுப்பியபடி தருமத்தை விரும்பி இந்தக் காட்டில் வனவாசம் செய்ய இங்கே வந்திருக்கிறேன். தயவு செய்து சொல்வாய், நீ யார்? எந்தக் குலம்? உன் சொரூபத்தைப் பார்த்தால் ராக்ஷஸப் பெண் என்று தோன்றுகிறது. இவ்விடம் என்ன காரியம் பற்றி வந்தாய்? சரியாகச் சொல்வாய்" என்றான்.

"ராவணனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? விச்ரவஸுனுடைய வீர



புத்திரனும் ராக்ஷஸர்களுடைய அரசனுமான அந்த ராவணனுடைய சகோதரியாவேன் நான். என் பெயர் சூர்ப்பனகை. ராவணனுடைய சகோதரர்களான கும்பகர்ணனும் விபீஷணனும் மகா பலவான்கள். தவிர இக்காட்டில் அரசுபுரியும் கரனும் தூஷணனும் என் சகோதரர்கள். இவர்களுடைய தேக பலமும், அதிகாரமும் பெரிது. ஆனால் நான் அவர்களுக்கு உட்பட்டவள் அல்ல. என்னிஷ்டப்படி நான் எதையும் செய்வேன். இந்த வனத்தில் என்னைக் கண்டு யாரும் பயப்படுவார்கள். உன்னைக் கண்டது முதல் உன்மேல் அடங்காத காதல் கொண்டு விட்டேன். நீ தான் என் கணவன். ஏன் இந்தச் சிறு பூச்சியைப் போன்ற ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு அலைகிறாய்? காட்டில் உனக்குத் தகுந்த மனைவி நான்தான். என் கூடச் சேர்ந்து எங்கும் சஞ்சரித்து சந்தோஷமாக இருப்பாய். நான் எந்த வடிவத்தையும் எடுப்பேன். பயப்படாதே! இந்தப் பெண்ணையும் உன் தம்பியையும் உடனே தின்று முடித்து விடுவேன். வா, என் கூட! தயங்க வேண்டாம்" என்று காமத்தால் பீடிக்கப்பட்டு ராக்ஷஸ ஜாதியின் பண்பாட்டின்படி பிதற்றினாள்.

ராமனுக்கு இந்த அரக்கியின் காம விகாரமும் நடவடிக்கையும் பேச்சும் ஒரு விநோதமாக இருந்தது. சிரித்துவிட்டு மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"அழகியே, என்னைக் குறித்து நீ ஆசைப்படுவது உனக்குத் துன்பமாகும். இந்தப் பெண் என் மனைவியானவள் கூட இருக்கிறாள். இரண்டு மனைவிகள் வியாபாரம் தொந்தரவுக்கு இடமாகும். இது உனக்குத் தெரியுமல்லவா? இதோ இருக்கிறான் என்னுடைய தம்பி. தனியாக இருக்கிறான். அழகிலும் பலத்திலும் எனக்குச் சமம். இவன் உனக்குத் தகுந்த புருஷன். இவனைக் கேட்டுப் பார். என்னை விட்டு விடு" என்றான்.

மேல் நடக்க வேண்டியதை லக்ஷ்மணன் பார்த்துக் கொள்ளுவான் என்று இவ்வாறு ராமன் சொன்னான்.

அரக்கியும் ராமன் சொன்னபடி அவனை விட்டுவிட்டு ராமனுடைய அழகுக்குக் குறையாத லக்ஷ்மணனை வரித்துப் பேச ஆரம்பித்தாள். "வீரனே, வா என்னுடன். இருவரும் இந்த தண்டகாரண்யத்தில் சந்தோஷமாகக் கூடிக் குலாவித் திரியலாம்" என்றாள்.

டிஸம்பர் 7உ காலைப் பத்திரிகைகளில் ஸ்ரீ கல்கியின் அகாலமான, திடீர் மறைவு குறித்துச் செய்தியைப் படித்துப் பெருந் துக்கமுற்றேன். நமது நாட்டுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் சாஹித்ய அகாடமிக்கும் அவருடைய பிரிவு ஒரு மாபெரும் நஷ்டமாகும்.

புதுடில்லி — கே. ஆர். கிருபளானி
7—12—54 — சாஹித்ய அகாடமி காரியதரிசி

லக்ஷ்மணனும் அண்ணன் ராமனுடைய பரிகாசத்தில் சேர்ந்து கொண்டு, "பைத்தியக்காரி ஏமாந்து போகாதே! நீ யார்? நான் யார்? நான் அண்ணனுக்கு அடிமையாக இங்கே இருக்கிறேன். நீயோ அரசகுமாரத்தி. ஓர் அடிமையைக் கட்டிக் கொண்டு அடிமைக்கு அடிமையாக நீ வாழலாமா? ஏமாந்து போகாதே! என் அண்ணன் ராமனுக்கு இரண்டாம் தாரமாக அமைவதே மேலானது. இந்தச் சீதைக்காக நீ பயப்பட வேண்டியதில்லை. ராமனுடைய காதல் உன் பேரில்தான் வேகம் கொள்ளும். சீதையை அலட்சியம் செய்து விடுவான். நீ சுகமாக இருக்கலாம்" என்றான்.

ஒரு பெண்ணை, அதிலும் காதல் கொண்ட பெண்ணை, இப்படியெல்லாம் வேதனை செய்யலாமா என்று சில மேதாவிகள் கேட்கலாம். எதிரில் ஒரு விகார மிருக சொரூபத்தை வைத்துக் கற்பனைச் சக்தியைப் பயன்படுத்தினால் அவ்வாறு கேட்க மாட்டார்கள்.

பிராகிருத கிராமிய வேகத்தால் பீடிக்கப்பட்ட அரக்கி லக்ஷ்மணனுடைய பேச்சை அப்படியே எடுத்துக் கொண்டு மறுபடியும் ராமனிடம் சென்று பக்கத்திலிருந்த சீதையைப் பார்த்தாள்.

"இந்தப் பூச்சியல்லவா எனக்கும் உனக்கும் மிடையில் தடையாக இருக்கிறாள். வயிறு ஒட்டிப் போய்க் கிடக்கும் இவள் மேல் உனக்கு ஒரு மோகமா? இதோ, இவளை இந்தக் கணம் முடித்துவிடுகிறேன். உன்னை அடையாமல் நான் உயிருடன் இருக்க முடியாது. இவளை இப்போதே ஒழித்து விடுகிறேன். பிறகு நீ என்னுடன் சந்தோஷமாகச் சேருவாய்" என்று சொல்லி அந்த அரக்கி சீதையின் மேல் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள்.

அந்தச் சமயம் ராமன் இடையில் புகுந்ததால் சீதை தப்பினாள். வேடிக்கை

வலுத்துப் போயிற்று என்று எண்ணி ராமன்,

"லக்ஷ்மணா! இவளைப் பார்த்துக் கொள்! சீதை எப்படியோ தப்பிப் பிழைத்தாள். இந்த அரக்கிக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்" என்றான்.

சீதையைத் தாக்கிக் கொல்லப் போன அரக்கியை உடனே லக்ஷ்மணன் கத்தியை எடுத்து, அவளை அங்கவீனம் செய்து விட்டு, "சீ! போ!" என்றான்.

அவமானப்பட்டு ரத்த காயமடைந்த அரக்கி பெருங் குரலில் வீறிட்டு அழுது கொண்டு வனத்துக்குள் மறைந்தாள்.

* * *

ரத்தம் பெருக நேராக ஓடிப் போய் சூர்ப்பனகையானவள் கரன் இருந்த இடம் சென்று அவன் முன்னிலையில் ஆகாயத்திலிருந்து இடி விழுவது போல் "ஐயோ!" என்று அலறி விழுந்தாள்.

அரக்கர்கள் சூழ அமர்ந்திருந்த ராக்ஷஸத் தலைவனான கரன், 'என்ன செய்தி?' என்று விசாரித்தான்.

"என்னைப் பார்! இந்த அநியாயத்தைச் செய்த ராமனும் லக்ஷ்மணனும் இந்தக் காட்டில் வசிக்கிறார்கள். நீயும் இருக்கிறாய்!" என்றாள்.

கரன் எழுந்து, "தங்காய்! என்ன இது? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. புத்தி சுவாதீனம் செய்து கொண்டு விவரமாகச் சொல். யார் உனக்கு இந்த அங்கவீனம் செய்யத் துணிந்தது? இந்த வனத்தில் என் கோபத்துக்கு ஆளானது யார்? எவன் காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக விரும்பி உன்னை இப்படி அவமதித்தான்? சும்மா இருந்த கிருஷ்ண சர்ப்பத்தை யார் கால் விரலால் குத்தினது? அந்த மடையன் யார்? எங்கே? எல்லாம் விவரமாகச் சொல். இதோ அவன் மடியப் போகிறான்! அவன் ரத்தத்தை மண் உறிஞ்சிக் குடிக்கப் போகிறது. எழுந்து, நின்று நடந்ததைச் சரியாகச் சொல்!" என்றான்.

சூர்ப்பனகை சொன்னாள்:

"இரண்டு அழகிய மனிதர்கள் தசரதன் குமாரர்களாம், தவ வேஷம் பூண்டு ஒரு பெண்ணுடன் இந்தக் காட்டுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு அந்தப் பெண்ணைக் காரணமாக வைத்துக் கொண்டு என்னைத் தாக்கி இந்த அக்கிரமம் செய்து விட்டார்கள். இந்தத் துஷ்டர்களின் ரத்தத்தைக் குடிக்க ஆசைப்படுகிறேன். இவர்களை நீ வதம் செய்வாய். இதை நீ முதலில் செய்ய வேண்டும் தம்பி. பிறகு வேறு வேலை" என்றாள்.


கரன் உடனே தன் சேனாபதிகளுக்கு உத்தர விட்டான். "இந்தக் கணம் சென்று அந்த இரு துஷ்டர்களையும் கொன்று, அவர்கள் பிரேதங்களை இவ்விடம் கொண்டு வாருங்கள்; இவள் சொல்லும் பெண்ணையும் இழுத்து வாருங்கள். தாமதிக்க வேண்டாம்!" என்றான்.


பதினான்கு சேனாபதிகளும் உடனே புறப்பட்டார்கள்.

* * *

கம்பருடைய ராமாயணத்தில் காதல் கொண்ட சூர்ப்பனகை ஒரு அழகிய மானிடப் பெண்ணின் வடிவம் பூண்டு ராமனை வரித்ததாகவும் அதன் பேரில் நிகழ்ச்சிகள் தனிப் போக்கில் சித்தரிக்கப் பட்டிருக்கின்றன. சூர்ப்பனகை நிகழ்ச்சியைக் கம்பர் வால்மீகியை விட்டுத் தனிப் போக்கில் கொண்டு போயிருக்கிறார். கம்ப ராமாயணத்தில் இது ஒரு மிக அழகான கட்டம்.

ராமச்சந்திரனைப்பற்றி 'இவன் பெண்ணைக் கொன்ற வீரன், காமம் மேலிட்டு அணுகிய ஒரு ஸ்திரீயை இவன் அவமதித்து ஹிம்சை செய்தான், மறைந்து நின்று வாலியைக் கொன்றான், எதிர்த்து நின்று அவனிடம் தோல்வி பெறத் துணியவில்லை. சீதையை அக்கிரமமாகக் காட்டுக்கு அனுப்பினான். அக்கிரமம் அல்ல என்றால் சீதையை அவன் சந்தேகப்பட்டான் அல்லவா? அவளுடைய சீலம் எமக்கும் ஐயமே, — இவ்வாறும் இன்னும் பலவிதத்திலும் அசூயையில் பிறந்த விமரிசனங்களில் இறங்கிச் சிலர் களிப்படைவதைக் காண்கிறோம். அறிவுக்கும் விமரிசன சாமர்த்தியத்துக்கும் நாட்டில் குறைவில்லை. அன்பும் ஆர்வமும் கலந்த சுத்த அறிவு காணவில்லை. ராமனுடைய குணத்தில் குற்றம் தேடுவோர்கள் தேடுக. ராமனை விட நல்ல முறையில் தருமத்தைக் கைப்பிடித்துத் தாங்கள் காட்டும் குறைவுகளின்றித் தங்கள் வாழ்க்கையை நடத்த முயல்வார்களானால் பிழைத்த ராமனுடைய ஆன்மாவும் ராம பக்தர்களுடைய உள்ளமும் பெரு மகிழ்ச்சி அடையும். ராமனுடைய நற்குணங்களை விட்டு விடாமல் ராமனிடம் கண்ட குறைகளைத் தாம் அகற்றினால் யார் வேண்டாம் என்று கூறுவார்கள்?


ஹாஸ்யக் களஞ்சியம்
"அவசியம் எங்கள் வீட்டுக்கு நீங்கள் வரவேண்டும் இந்த ஏகாதசிக்கு வந்து ஒரு வேளையாவது பட்டினி இருந்து விட்டுப் போகணும்!"
"என்ன சார், இது! நான் உங்களோடு தமாஷாகப் பேசிக்கொண்டிருக்கலா மென்று வந்தால் நீங்கள் பாட்டுக்குப் பாடிக் கொண் டிருக்கிறீர்களே!"
"நீங்கள்தான் கூப்பிட்டீர்களா? யாரோ கார் இடித்துக் கீழே விழுந்து கத்துகிறார்களாக் கும் என்று எண்ணி வேகமாக ஓட்டிக்கொண்டு வந்து விட்டேன்!"
பூட்ஸ் கடை
"பயப்படாதீர்கள்! நாய் கடிக்காது கடைக்காரரின் பூட்ஸ்தான் கடிக்கும்!"



சாமா
"சாப்பிடும்போது கூப்பிட்டதற்கு மன்னிக்கவும். ஆனால் ஒரு முக்கியமான சமாசாரம். எனக்குப் பசிக்கிறது!"
"இப்பொழுது உமக்கு அப்படித்தான் இருக்கும். ஆனால் பெண்ணுக்குப் பாண்டு வாசிக்கத் தெரியுமா என்று வரப்போகிற மாப்பிள்ளை கேட்டால் விழிக்கப்படாது, பாருங்கள்!"
"என்னடா, நிதானமாக நடந்து வருகிறாய்?"
"திரும்பிப் பார்த்தேன். என் பின்னால் யாருமே ஓடிவரவில்லை. அதனால்தான் நிதானமாக நடந்து வருகிறேன்!"
பள்ளிக்கூட ஓட்டப் பந்தயம்
சங்கீதப் பிறவி
சுருதி சேரவில்லை
??
1
௨
?
3
4
சங்கீத சபா
"பாகவதருக்கு மேல்-பஞ்சமம் எட்டவில்லையாம்!"

குளுமையான ஆடையழகிற்கு .....

பின்னி சேலைகள்

பின்னியின் சுத்தப் பட்டுச் சேலைகளின் இழை நேர்த்தி காரணமாக அவை உடுத்திக்கொள்வதற்கு குளுமையாகவும் பார்க்க அழகாகவுமிருக்கின்றன. மிருதுவாக இருப்பினும் கசங்காது; மடிப்புகள் சோபிதமாக மிளிரும்.

பின்னி சேலைகள் அழகிலும் அணியும் சுகத்திலும் மட்டும் சிறந்தவை என்று நினைத்துவிட வேண்டாம்; நீண்ட காலம் உழைக்கவும் செய்கின்றன.

இக்காரணங்களால்தான் சொகுஸாக ஆடையணியும் மெல்லியரும், எச்சமயத்திலும் கவர்ச்சியாகத் தோன்ற விரும்பும் நங்கையரும் பின்னியின் சுத்தப் பட்டுச் சேலைகளை ஆசையுடன் வாங்குகின்றனர்.

பின்னி சேலைகள் ரம்மியமான வெளிர் நிறங்களில் மட்டுமின்றி கண்ணைப் பறிக்கும் பகட்டான வர்ணங்களிலும் கிடைக்கும். பிரத்யேக ஜரிகைக் கரைகளுடனும் முகப்பு பார்டர்களுடனும் கூட வாங்கலாம்.



அசல் பின்னி சேலைகளில் இச் சாம்பிந்த மார்க் பொன்னிறத்தில் அச்சிடப் பட்டிருக்கும்.

பின்னி பட்டுகள்

பெங்களூர் வுல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட், பெங்களூர்-2


ஏஜண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதார்கள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்.

13. கல்லறைத் தீவின் மர்மம்.

துறவி கைத்தடியைத் திண்ணையில் தட்டிப் பிரபாகரனை எழுப்பியதும், பிரபாகரன் மிரண்டு போய் "யார் அது?" என்று திடுக்கிட்டபடி கேட்டுக் கொண்டே எழுந்தான். உடனே உமாவும் எழுந்து உட்கார்ந்தாள். அருகில் மீசையும், தாடியுமாக நிற்கும் அந்தப் பெரியவரைப் பார்த்துப் பயந்து பிரபாகரனிடம் நெருங்கி உட்கார்ந்தாள் உமா.

"நான் ஒரு துறவி. இந்தக் கோவிலில் தான் நான் அடிக்கடி இரவில் தங்குவது வழக்கம். உங்களைப் பார்த்ததும், நீங்கள் அணிந்திருந்த ஆடைகளிலிருந்து நீங்கள் இருவரும் ஒரு பெரிய தனவந்தர் வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று எனக்குத் தோன்றியது. கோவிலுக்குச் சுவாமி தரிசனத்துக்கு வந்தவர்கள் வீட்டுக்குப் போக மறந்து கோவிலில் தூங்கி விட்டீர்களோ என்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. ஆகையினால்தான் உங்களை எழுப்பினேன்" என்றார் அந்தத் துறவி.





"இல்லை ஐயா, நாங்கள் இன்றிரவு கோவிலில் தங்குவதற்காகவே வந்தவர்கள்" என்றான் பிரபாகரன்.

"உங்கள் வீடு எங்கே இருக்கிறது?"

"எங்களுக்கென்று வீடு ஒன்றும் கிடையாது, ஐயா!"

"உற்றார் உறவினர் யாரும் இல்லையா?"

"இல்லை."

"தாய் தந்தையர்கள்?"

"இல்லை."

"வேடிக்கையாக இருக்கிறதே! உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"என் பெயர் பிரபாகரன். இவள் என் தங்கை உமா. நாங்கள் அநாதைகள்!" என்றார்கள்.

"அப்படியா? உங்களுக்குச் சாப்பாடு ஆகிவிட்டதா......?"

"இரவுச் சாப்பாடோ அல்லது காலை ஆகாரமோ எங்களுக்கு ஒன்றும் கிடையாது. எப்பொழுது என்ன அகப்படுகிறதோ அவைகளை நாங்கள் சாப்பிடுவோம். தினம் கிடைத்துக் கொண்டிருந்த ஆகாரம்கூட இன்று எங்களுக்குக் கிடைக்கவில்லை."

"அட பாவமே, காலையிலிருந்து நீங்கள் ஒன்றும் சாப்பிடவில்லையா? எல்லாம் ஈசன் செயல். குழந்தைகளே கவலைப்படாதீர்கள்" என்றார் துறவி.

சற்று பயம் தெளிந்த உமா, "உங்கள் குரலை எங்கேயோ கேட்டிருக்கிறேன் போல் தோன்றுகிறதே" என்றாள்.

"என் குரலையா? நான் உங்களை இது வரையிலும் பார்த்த இல்லை. ஒருகால் நீங்கள் என் குரலைப் போலுள்ள வேறு

யாருடைய குரலையாவது கேட்டிருப்பீர்கள்'' என்றார் துறவி.

"இல்லை. உங்கள் குரலையேதான் கேட்டிருக்கிறேன். எல்லாம் ஈசன் செயல் என்று சொன்னீர்களே. அதைப் போலத் தான் அப்பொழுதும் சொன்னீர்கள். நீங்கள் குன்றி மணித் தோட்டத்தில் நாங்கள் இரும்புக் கூண்டில் அடைபட்டிருக்கும் பொழுது எங்களைப் பார்க்க வில்லையா? நீங்கள் நன்றாக ஞாபகப் படுத்திச் சொல்லுங்கள்.''

"குன்றி மணித் தோட்டமா! இரும்புக் கூண்டில் அடைபட்டு இருந்தீர்களா? நீங்கள் சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே! நான் அங்கு எல்லாம் வந்தது கிடையாது. இருக்கட்டும், நீங்கள் இருவரும் பசியோடு இருக்கிறீர்கள். என்னிடம் நல்ல பழங்கள் இருக்கின்றன. சாப்பிடுங்கள்'' என்று கூறித் துறவி தமது தோளில் மாட்டிக் கொண்டிருந்த ஓர் துணிப் பையிலிருந்து மாம்பழம், வாழைப் பழம், திராக்ஷை முதலிய பலவிதப் பழங்களை அவர்கள் எதிரில் வைத்தார். இந்த மாம்பழம் மிகவும் நன்றாக இருக்கும். இந்த மாயா மகேந்திரபுரப் பட்டணம், மாம்பழத்துக்கு மிகவும் பெயர் பெற்றது. நாளைய தினம் பட்டணத்தில் பெரிய சந்தை. நாளைய சந்தையில் மாம் பழங்கள், பெரிய சமுத்திரத்தைப் போல் தோற்றமளிக்கும். நீங்கள் பிரியப்பட்டால் அங்கு சென்று வேடிக்கை பார்க்கலாம்!'' என்றார் துறவி.

பழங்களை எல்லாம் துறவி கீழே வைத்தவுடனே சற்றுத் தயங்கினார்கள். ஒருகால் மந்திரத்தினால் வரவழைக்கப்பட்ட பழங்களாக இருக்குமோ என்ற சந்தேகம் அவர்கள் மனத்தில் எழும்பியது.

"குழந்தைகளே, அந்தப் பழங்களைத் தின்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்று எனக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது. நீங்கள் மந்திர வஸ்துக்களினால் துன்பத்துக்கு ஆளாகி இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அதனால்தான் உங்களுக்கு நான் கொடுத்த பழங்கள் மீது சந்தேகம் உண்டாகிறது. குழந்தைகளே, நீங்கள் பயப்படாதீர்கள். எனக்கு மந்திரமும் தெரியாது, தந்திரமும் தெரியாது. தயக்கம் இல்லாமல் பழத்தைச் சாப்பிடுங்கள். எனக்காக வைத்திருந்த பழத்தைத்தான் நீங்கள் பசியாக இருக்கிறீர்களே என்று உங்களுக்குக் கொடுத்தேன். பிறர் பசியோடு இருக்க நான் பொறுக்க மாட்டேன்'' என்றார் துறவி.

உமாவும் பிரபாகரனும் நம்பிக்கை மிகுந்த அவரது வார்த்தைகளைக் கேட்டுத் தைரியம் கொண்டு அவர் கொடுத்த பழங்களைச் சாப்பிட்டார்கள்.

பிறகு பிரபாகரன் அவரைப் பார்த்து, "ஐயா, எங்கள் பசி தணிந்தது. நீங்கள் செய்த உபகாரத்தை என்றும் மறக்க மாட்டோம். இன்னும் எங்களுக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். கல்லறைத் தீவுக்குப் போவதற்கு எப்படி வழி என்று சொல்லுவீர்களா?'' என்று கேட்டான்.

"கல்லறைத் தீவா, வேண்டாம் அப்பா! அங்கே நீங்கள் போக வேண்டாம். உங்கள் உயிருக்கு அல்லவா ஆபத்து?''

"ஐயா, அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் எப்படியாவது அங்கு போகத்தான் வேண்டும். நீங்கள் அதற்குத் தயவு செய்து வழி சொல்லுங்கள்!'' என்றான் பிரபாகரன்.

"தம்பி, எனக்கு முதலில் நீ இங்கு வந்து சேர்ந்த வரலாற்றை விவரமாகச் சொல்லு. பிறகு நான் கல்லறைத் தீவுக்குப் போகும் வழியையும் அதுபற்றிய விவரங்களையும் தெரிவிக்கிறேன்'' என்றார் துறவி.


பிரபாகரன், தானும் உமாவும் இரும்புக் கூண்டிலிருந்து தப்பினதிலிருந்து ஆரம்பித்து, மாந்தோப்பில் அவர்களுக்கு நடந்த வரவேற்பு மரியாதைகள், பரிசலில் ஏறி ஆற்றைக் கடந்தது, வழியில் குதிரைச் சேவகர்கள் துரத்திக் கொண்டு வந்து பிடித்துக் கட்டிப் போட்டது, பிறகு அவர்கள் தப்பியது முதலிய விவரங்களை ஒன்று விடாமல் சொன்னான்.

எல்லாவற்றையும் கேட்ட துறவி, "பிரபாகரா, நீ இதுவரையில் சொன்ன நிகழ்ச்சிகளைக் கேட்க மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் ஒரு சந்தேகம். நீ எதற்காகக் கல்லறைத் தீவுக்குப் போக வேண்டும் என்று துடிக்கிறாய்? உன் வரலாற்றுக்கும் கல்லறைத் தீவுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டார்.

"கல்லறைத் தீவுக்கும் நான் சொன்ன வரலாற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆனால் என்னிடம் இருக்கும் தங்க மாம்பழத்துக்கும் கல்லறைத் தீவுக்கும் நிச்சயம் சம்பந்தம் இருக்கிறது!''

"அப்படியா? அதை எனக்கு விளங்கும் படியாகத் தெளிவாகச் சொன்னால், அதற்குப் பிறகு என்னால் ஆன உதவியை உங்களுக்குச் செய்ய முடியும்.''

"தங்க மாம்பழம் எங்களிடம் ஒரு எதிர்பாராத அதிர்ஷ்டத்தினால் கிடைத்தது. எங்களை அறையில் தள்ளி அடைத்து வைத்திருந்த வயற்காட்டுக் கிழவி இதை மிகவும் ஜாக்கிரதையாக வைத்திருந்தாள். இதைப் பற்றி அந்தக் கிழவி அடிக்கடி யாரிடமோ சொன்ன வார்த்தைகளால் தங்க மாம்பழத்தின் மதிப்பு எனக்குத் தெரிய வந்தது. அந்தக் கிழவி அடிக்கடி கல்லறைத் தீவு என்று சொல்லிக் கொண்டிருப்பாள். அதிலிருந்து எனக்கும் கல்லறைத் தீவுக்குப் போக வேண்டும் என்று ஆர்வம் உண்டாயிற்று. அவளிட




FRUIT
SALT
ENO



சங்கடமான இருமலிலிருந்து விரைவான குணம்


சக்தி, விரைவாக வேலை செய்யும் திறன், சாப்பிடுவதற்கு ருசி ஆகிய எல்லாம் சேர்ந்து "ஜெப்ராலு"க்கு நாடு முழுவதிலும் நல்ல பிரசித்தியை அளித்திருக்கிறது.

'ZEPHROL' COUGH SYRUP

manufactured by
MAY & BAKER LTD
distributed by
MAY & BAKER (INDIA) LTD., BOMBAY-CALCUTTA-MADRAS-NEW DELHI-GAUHATI

கூந்தல் பெருகினால்
விதவிதக் கொண்டைகளை
ஜோடிப்பது வெகு எளிதே!

கேசவர்த்தினி





கேசவர்த்தினி கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள். இனி பொடுகைத் தலையில் சுமப்பானேன்? தலை அரிப்பை நிறுத்துங்கள். இள நரையைத் தடுங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.

மறைந்துள்ள கூந்தலழகை
கேசவர்த்தினி
கொண்டு எடுத்துக் காட்டுங்கள்

ஷாம்புவினும் கூந்தலை சுத்தமாகவும் சுகந்தமாகவும் ஆக்குங்கள்

கேசவர்த்தினி அணா 14. ஷாம்பு அணா 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர் No. 5

மிருந்து தப்பிய தினத்தில் இந்தத் தங்க மாம்பழமும் என் கையில் சிக்கியது.''

"சரி, வயற்காட்டுக் கிழவி சொன்ன வாசகங்களை மறக்காமல் அவள் சொன்ன படியே இப்பொழுது உன்னால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார் துறவி.

"ஐயா, என்னைவிட உமாதான் அந்த வார்த்தைகளைச் சரியாகச் சொல்லுவாள். உமா, எங்கே அதை மெதுவாகச் சொல், பார்க்கலாம்!'' என்றான் பிரபாகரன்.

உடனே உமா, "இதோ சொல்லுகிறேன், அண்ணா! 'கல்லறைத் தீவில் வசிக்கும் நாயின் கழுத்தில் இருக்கும் சாவியைக் கொண்டுதான் அந்தத் தங்க மாம்பழத்தைத் திறக்க முடியும். தங்க மாம்பழத்தைத் திறந்து அதனுள் இருக்கும் கண்ணாடிக் கூடுகளின் உதவியினால்தானே அவர்களைப் பிழைக்க வைக்க முடியும்? என்னைத் தவிர அந்தக் காரியத்தை யாராலும் சாதிக்க முடியாது' என்று வயற்காட்டுக் கிழவி சொல்லுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன்'' என்றாள் உமா.

"பிரபாகரா, உன் தங்கை உமா மிகவும் கெட்டிக்காரி; முக்கியமான விஷயத்தை மறக்காமல் அப்படியே ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாளே! சரி, எங்கே அந்தத் தங்க மாம்பழம்?'' என்றார் துறவி.

பிரபாகரன் சுற்றிலும் கவனமாகப் பார்த்து விட்டுப் பைஜாமாப் பையிலிருந்து தங்க மாம்பழத்தை மெதுவாக வெளியில் எடுத்தான். அது மின்சார விளக்கின் ஒளியில் பளபளவென்று பிரகாசித்தது. அதைப் பார்த்ததும் பிரபாகரனுக்கு மிகவும் வியப்பாயிருந்தது. பிரபாகரன் தங்க மாம்பழத்தைச் சரியாய்ப் பார்க்கவேயில்லை. அதை அபகரித்துக் கொண்டு போக ஒரு கும்பல் விடா முயற்சியுடன் ஈடுபட்டிருந்தபடியினால் அவனுக்கு அதை வெளியில் எடுப்பதற்கே பயம்.

துறவி அவன் கையிலிருந்து தங்க மாம்பழத்தை வாங்கிக் கொண்டு விளக்குக்குச் சமீபம் சென்றார். பிரபாகரனும் உமாவும் அவருடன் போனார்கள்.

"உமா, நீ சொல்லியது உண்மை. இதோ பார் சாவியை வைத்துத் திறக்கும் இடம். இதில் இருக்கும் துவாரம் மற்றைய பூட்டுகளில் இருப்பதைப் போலக் காணவில்லை. இதனுடைய சாவியே விசித்திரமான வடிவத்தில் இருக்கும்போல் இருக்கிறது'' என்று வியப்புடன் கூறினார் துறவி.

பிரபாகரன், "இதைப் பார்த்தால், மேலே மூடப்பட்டிருக்கும் தகட்டுக்கும் உள்ளே இருக்கும் பொருளுக்கும் சம்பந்தம் இல்லை போலிருக்கிறது'' என்றான்.

"ஆமாம். நீ சொல்லுவது சரிதான். எனக்கு ஒரு விஷயம் புலனாகிறது. கல்லறைத் தீவில் யாரோ அடைபட்டிருக்க வேண்டும். அவர்களைப் பற்றிய சில முக்கியமான விஷயங்கள் இந்தத் தங்க மாம்பழத்துக்குள் இருக்கும் கண்ணாடிக் கூடுகளில் இருக்க வேண்டும். கண்ணாடிக் கூடுகள் ஜாக்கிரதையாக உடையாமல் இருப்பதற்கும், அதனுள் இருக்கும் விஷயங்கள் யாருக்கும் சுலபமாகத் தெரியக் கூடாது என்பதற்கும் தங்கத்தினால் மாம்பழம் செய்து அதற்குள் மேற்படி கூடுகளை வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. கல்லறையில் சிறை வைக்கப்பட்டிருப்பவர்கள் யார்? என்னத்துக்காகச் சிறை வைக்கப் பட்டிருக்கிறார்கள்? எல்லாம் ஒரே மர்மமாக இருக்கிறது'' என்றார் துறவி.

பிரபாகரன் அவர் சொன்னதைக் கேட்டு அதிசயம் அடைந்தான். "ஐயா, உங்கள் ஊகம் சரியானதென்றே தோன்றுகிறது. கல்லறைத் தீவில் இருக்கும் நாயையும் அதன் கழுத்தில் கட்டியிருக்கும் சாவியையும் பற்றிக் கிழவி அடிக்கடி சொன்னதிலிருந்து அந்த நாய் மிகவும் பயங்கரமானது என்று தெரிகிறது!'' என்றான்.

இதைக் கேட்ட துறவி சிரித்தார். "அந்த நாயைத் தெருவில் போகும் சாதாரண நாயைப் போலவா எண்ணுகிறாய்? இல்லை, இல்லை! எனக்குத் தெரிந்த வரையில் அந்த நாய் மிகவும் விஷம் கொண்ட நாய். அந்த நாயினிடம் ஒருவரும் அருகில் செல்ல முடியாது. யார் அந்த நாயின்

எதிர்பாராதது!

● ● ● நான் விந்தியப் பிரதேசத்தில், ரீவா நகரத்திற்கு வெகு தொலைவில் இயற்கைக் காட்சிகள் ஒவ்வொன்றாகக் கண்டு சுற்றிக் கொண்டிருந்தேன். அப்போது, சென்ற ஐந்தாம் தேதி, நமது அருமைக் 'கல்கி' மறைந்த செய்தி எனக்கு வந்தது. அங்கே சிதைந்த கோயில்களின் மகத்தான சிற்ப அழகையும், அருவிகளையும், வைரச் சுரங்கங்களையும், அபூர்வமான வெண்புலி யிருக்கும் இடம் முதலியவற்றையும் பார்த்தபோது என் மனம் 'கல்கி'யை நாடியே சென்றது. இவைகளை யெல்லாம் அவர் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், எத்தகையதோர் அற்புதமான கதை புனைவார் என்றெல்லாம் நினைத்துக் கொண்டேன். ஆனால், சற்றும் எதிர்பாராதபடி, அதே நிமிஷம் அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்து கொண்டிருந்தது...... மிக ஈடுபாடுடைய நண்பரை இழந்து விட்டோம்! ● ● ●

புதுடில்லி
7—12—54

பி. ஆர். நரசிம்மன் (எம். பி.)

கண்விழிகளைப் பார்க்கிறார்களோ அவர்கள் உடனே பார்த்த இடத்திலேயே கற்சிலையாக மாறி விடுவார்கள். அங்கு போனவர்கள் என் காதுக்கு எட்டிய வரையில் உயிருடன் திரும்பியதே கிடையாது. அந்த நாய்க்கு என்ன ஆகாரம் தெரியுமா? காற்றுதான். வேறு ஒன்றையுமே அது தொடாது, தண்ணீரும் குடிக்காது. அதன் மூக்கிலிருந்து வரும் காற்றும் விஷக் காற்றுதானாம். ஆதலால் பேசாமல் உன் முயற்சியை விட்டுவிடு'' என்றார் துறவி.

''ஐயா, அந்த நாயைப் பற்றி நான் பயப்படவில்லை. ஏதோ முயற்சி செய்து பார்க்கிறேன். முடிந்தால் வெற்றி பெறுவேன், இல்லையேல் அங்கேயே ஒரு கற்சிலையாக இருக்கிறேன்'' என்றான்.

பிரபாகரன் சொல்லியதைக் கேட்ட துறவி பிரபாகரனின் தைரியத்தை மெச்சி, ''உனக்குத் தைரியமிருந்தால் செய். ஆனால் ஒன்று கேட்க விரும்புகிறேன். கல்லறையில் அடைபட்டிருப்பவர்கள் யார்? உனக்குத் தெரிந்தவர்களா? அல்லது உன் உறவினர்களா?'' என்று கேட்டார்.

''எனக்குத் தெரியாது. எனக்கு அவர்கள் தெரிந்தவர்களும் அல்ல; உறவினர்களும் அல்ல. எனக்கு அவர்கள் தெரிந்தவர்களாக இருந்தாலும், இல்லா விட்டாலும் அவர்களைக் காப்பாற்றுவது என் கடமை. கிழவியோ ஒரு மந்திரவாதி. எப்பொழுது அவள் கல்லறைத் தீவில் அடைக்கப்பட்டிருப்பவர்களை எளிதில் விடுவிக்க முடியாதபடி ஏற்பாடுகள் செய்திருக்கிறாளோ, அவர்கள் நல்லவர்களாகத்தான் இருக்க வேண்டும். இதில் ஏதோ பலமான சூழ்ச்சி இருக்க வேண்டும். எதற்கும் அதை அம்பலப்படுத்தக் கட்டாயம் முயற்சி செய்வேன். கல்லறைத் தீவுக்குப் போகும் வழியை மாத்திரம் தயவுசெய்து சொல்லுங்கள். நான் அந்த உதவிக்கு எப்பொழுதும் உங்களை மறக்க மாட்டேன்.''

''சரி, சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் மாயா மகேந்திரபுரத்தின் எல்லையைத் தாண்டி நேராகக் கிழக்கே செல்லுங்கள். கொஞ்ச தூரம் சென்றால் வழி காட்டி மரம் ஒன்று ஓர் இடிந்த ஆற்றின் பாலத்தினருகில் வைக்கப்பட்டிருக்கிறது. நான்கு புறமும் ரஸ்தாக்கள் இருந்தாலும் மூன்று ரஸ்தாக்களுக்குத்தான் ஊரின் பெயர்கள் குறிப்பிட்டு அந்த வழிகாட்டி மரப் பலகையில் எழுதி இருக்கும். ஆனால் வடக்குப் பக்கம் செல்லும் பாதைக்கு மாத்திரம் ஒரு பெயரும் குறிப்பிட்டிருக்காது. அதுதான் கல்லறைத் தீவுக்குப் போவதற்கு ஓர் ரகசியப் பாதை. அந்த வடக்கு நோக்கிச் செல்லும் பாதை வழியே சென்றால் அடர்ந்த காடு ஒன்று குறுக்கிடும். அந்தக் காடு பல மைல் அகலமும் நீளமும் உள்ளது. அதில் இருக்கும் துஷ்ட மிருகங்கள் வேறு எந்தக் காட்டிலும் கிடையாது. அவைகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவது மிகவும் சிரமம். உனக்கு வில் வித்தையில் நன்றாகப் பயிற்சி உண்டா? இல்லா விட்டால் இப்பொழுது நீ கற்றுக் கொள்ளுவது நல்லது. உனக்கு எளிதில் கற்றுக் கொள்வதற்குத் தைரியம் இருந்தால் நல்ல வில் கிடைப்பதற்கு நான் உதவி புரிகிறேன். நீ மாயா மகேந்திரபுரத்தின் கிழக்கு எல்லையைத் தாண்டியவுடன் பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. அந்த ஏரியில் இப்பொழுது தண்ணீர் இல்லை. அந்த ஏரியின் மத்தியிலேயே சிறிய குடிசை ஒன்று இருக்கிறது. எனக்குத் தெரிந்த கிழவர் ஒருவர் அங்கு இருப்பார். அவரிடம் உங்கள் அடையாளங்களைச் சொல்லி ஓர் வில்லையும் அதற்கு வேண்டிய அம்பறாத்துணியும் அம்புகளும் கொடுத்து வைக்கிறேன். அந்த வில்லும், அம்பும் மிகவும் சக்தி வாய்ந்தவை. அதை நீ வேறு ஒருவரிடமும் கொடுக்காதே. நீ கல்லறைத் தீவுக்குச் சென்று வெற்றிகரமாகத் திரும்பினால் அதை அந்தக் குடிசையிலிருக்கும் கிழவரிடமே திருப்பிக் கொடுத்துவிடு. அந்தக் காட்டைத் தாண்டுவது அவ்வளவு எளிதல்ல. பீமபுரம் என்ற பட்டணத்தைச் சேர்ந்தது அந்தக் காடு. அந்தப் பட்டணத்தின் அரசன் பீமவர்மன் ஒருவன் தான் அக்காட்டில் வேட்டை ஆடச் செல்வான். அவன் போவதற்கு மாத்திரம் அந்தக் காட்டில் ஒரு பாதை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேறு ஒருவரும் அந்த வழியாகப் போக முடியாது'' என்றார்.

உடனே பிரபாகரன் ''ஐயா, உங்கள் பேச்சில் குறுக்கிட்டுப் பேசுவதற்காக என்னை மன்னியுங்கள். எப்படியாவது கல்லறைத் தீவுக்குப் போய் அங்கு சிறை வைக்கப்பட்டிருப்பவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு ஆசை எனக்கு இருக்கிறது. ஆகவே, நீங்கள் கல்லறைத் தீவுக்குப் போகும் வழியில் உள்ள கஷ்டங்களை விவரமாகச் சொல்லுங்கள். எனக்கு மிகவும் உதவியாயிருக்கும். நான் எத்தனை சிரமங்கள் நேர்ந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கல்லறைத் தீவுக்குப் போவது என்று தீர்மானித்து விட்டேன். உமா, நீயும் கவனமாகக் கேட்டுக் கொள்!'' என்றான்.

துறவி அவனது தைரியத்தைக் கண்டு வியந்தார். ''பிரபாகரா, உன் துணிவு எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. நான் அங்கே போவதில் உள்ள சிரமங்களையெல்லாம் விவரமாகச் சொன்ன பிறகும் அந்தத் துணிவு உன்னிடம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்பொழுது தான் எனக்கு உன்னிடம் நம்பிக்கை உண்டாகும். சரி, சொல்கிறேன். உமாவும் நீயும் கவனமாகக் கேளுங்கள்!'' என்றார்.

உமாவும் பிரபாகரனும் கவனமாக அவர் சொல்வதைக் கேட்கலானார்கள். (தொடரும்)



மிக்க எழிலுடன் இருப்பதற்கு ஏற்ற சமயம்!

புதுமையுடன் நறுமணம் கமழும்

அப்கான் ஸ்னோ

நாரீமணிகளின் அழகை பாதுகாத்து. மேலும் மேலும் சிறப்பிக்கச் செய்கிறது. நாள் முழுதும் சருமத்தை மிருதுவாகப் பட்டுப் போன்று சோபிக்கச் செய்கிறது.



அப்கான் ஸ்னோ

பிரிட்டன்வாலா

EXP-A-2/5

அந்த இருமலை நிறுத்துக-

தொண்டை ரணத்தை சமனமூட்டி குணப்படுத்துக. மார்பு மற்றும் சுவாசப்பை அடைப்பை நீக்குக. எல்லாம் க்ஷணத்தில் முடிக்க.



EPY-22-TAM.

PEPS

பெப்ஸ் சாப்பிடுங்கள்.



உலக பிரசித்தி பெற்ற
தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெப்ஸ் தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி, குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போது இந்த ரசங்கள் ஆவியாக மாறி ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக்குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும் நோயின் ஆரம்ப ஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. இதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும் உலக பிரசித்தி பெற்றும் விளங்குகின்றது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்



திருடர்கள் ஜாக்கிரதை!

தெலுங்குக் கதை: பி. சூர்யராவ்

மொழிபெயர்ப்பு: ஜெயமணி

அகில உலகச் சிறுகதைப் போட்டியை நடத்தும் பிரபல அமெரிக்கப் பத்திரிகையான "நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன்"க்கு அனுப்பப்பட்ட நாலு கதைகளில் இது இரண்டாவது பரிசுக் கதை ஆகும். ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற இந்தக் கதையின் ஆசிரியர் ஸ்ரீ பி. சூர்ய ராவ், ஆந்திர மாகாணத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் என்பதை வாசக நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ★ ★ ★

அப்போது நடுநிசி இருக்கும். ரயில் வண்டி அடர்ந்த காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்தது. அந்தச் சிறிய இண்டர் வகுப்பில் சேஷய்யாகாரு மாத்திரமே தனியாக உட்கார்ந்திருந்தார். மேலே இருந்த இரண்டு மின்சார விளக்குகளில் ஒன்று பழுதாகி எரியவில்லை; மற்றொன்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

சேஷய்யா எல்லா ஜன்னல்களையும் மூடிவிட்டு, படுக்கையில் படுத்துக் கொண்டார். அவருக்கு எதிர்ப் புறத்தில் தெலுங்கில் எச்சரிக்கை போர்டு இருந்தது. அதில் "ஜாக்கிரதை, திருடர்கள் இருக்கிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைப் படித்ததும் சேஷய்யாவின் ஹிருதயம் படபட வென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது. அவர் வண்டிக்குள் சுற்று முற்றும் கண்ணோட்டத்தைச் செலுத்தினார். வண்டியில் யாருமில்லை என்பது உறுதியான பின்னர்தான் அவருக்குப் பயம் சிறிது தணிந்தது.

ரயில்வே அதிகாரிகளுக்குத் தெலுங்கு பாஷை நன்றாகத் தெரியாது. தெரிந்திருந்தால், "ஜாக்கிரதை, திருடர்கள் இருக்கிறார்கள்" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பார்களா! "திருடர்கள் இருப்பார்கள்" அல்லது "திருடர்கள் இருக்கலாம்" என்றல்லவா குறிப்பிட்டிருக்க வேண்டும்!

ரயில்வே அதிகாரிகளின் அறியாமையைக் கண்டு சேஷய்யாவுக்குச் சிரிப்பு வந்தது.

இந்தத் தடவை சேஷய்யா தாம் போன வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். மரம் வாங்கிய இனத்தில் சாமர்த்தியமாகப் பேரம் செய்ததில் அவருக்கு இரண்டாயிரம் ரூபாய் மிச்சப்படுத்த முடிந்தது. இந்த நல்ல செய்தியை அவருடைய மனைவி கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைவாள் என்பது நிச்சயம்.

இவ்விதம் அவர் தமக்குள்ளே எண்ணிக் கொண்டிருந்தபோது, காற்றினால் வண்டியின் கண்ணாடிக் கதவு அசைந்து திடீரென்று விழுந்தது. எங்கேயோ சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருந்த சேஷய்யாவுக்கு அந்தச் சத்தத்தைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. அவர் திடுக்கிட்டு எழுந்து, வெளியே இருளை ஊடுருவிப் பார்த்தார். அந்தச் சூழ்நிலை சேஷய்யாகாருவுக்கு மிகுந்த நடுக்கத்தை உண்டு பண்ணியது.

அவர் தம்மிடமிருந்த இரண்டாயிரம் ரூபாயையும் இடுப்பில் கட்டிக் கொண்டிருந்தார். அச்சமயம் யாராவது வண்டிக்குள் வந்து யாதொரு துணையுமின்றித் தனியாக உட்கார்ந்திருந்த அவரைக் கொன்று விட்டால், அவரது மனைவியின் கதியும் குழந்தைகளின் கதியும் என்ன ஆகும்! இதை நினைத்தபோது அவரது ஹிருதயம் ரயில் வண்டியின் வேகத்தில் அடித்துக் கொண்டது.

அவரிடம் இரண்டாயிரம் ரூபாய் இருப்பது திருடனுக்கு எப்படித் தெரியக் கூடும்! ஏன், இரண்டாயிரம் ரூபாய் என்ன, இன்னும் அதிகத் தொகை அவரிடம் இருப்பதாகவே திருடன் எண்ணுவதற்குக் காரணம் இருந்தது. அவரது ஜரிகை அங்கவஸ்திரம், தங்கக் கெடியாரம், வைர மோதிரங்கள் இவை யெல்லாம், அவரிடம் இன்னும் அதிகத் தொகை இருப்பதாகவே காட்டின. அவற்றிற்காகவும் அவரிடம் உள்ள பணத்துக்காகவும் திருடன் அவரைக் கொன்று_விடலாம்.

ஜரிகை அங்கவஸ்திரம், தங்கக் கெடியாரம் முதலியவற்றை எப்போதும் ஆடம்பரமாகக் காட்டிக் கொள்ளும் சேஷய்யா, அவை தமது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்பதை அப்போதுதான் தமது வாழ்க்கையில் முதன் முதலாக உணர்ந்தார்.

அவ்வளவுதான்! உடனே அவர் தமது அங்கவஸ்திரத்தை ஜாக்கிரதையாக மடித்துத் தலையணைக்குக் கீழே எவருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தார். மோதிரங்களையும் கெடியாரத்தையும் கைக் குட்டையில் வைத்துக் கட்டிப் பத்திரமாகத் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார்.

அவரிடம் பணம் இருக்கும் வரையில் அவர் மனத்தை விட்டுப் பயம் தணிவதற்கு இடமேது! அவர் எவ்வளவோ முயற்சி செய்தும் கூட, "ஜாக்கிரதை, திருடர்கள் இருக்கிறார்கள்" என்ற எச்சரிக்கையை அவரால் அடிக்கடி பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பீதி அவர் மனத்தை விட்டு அகலவில்லை. "இந்தக் கஷ்டமான நிலைமையிலிருந்து தப்புவதற்கு வழி என்ன! வண்டி அடுத்த ஸ்டேஷனுக்குச் சென்றதும் போலீசாரிடம் சொல்லலாமா! கூடாது, கூடாது. அவர்கள் என்னைப் பரிகாசம் செய்வார்கள். 'நீங்கள் அனாவசியமாகப் பயப்படுகிறீர்கள். பணத்துடனும் விலையுயர்ந்த சாமான்களுடனும் செல்லும் ஒவ்வொரு பிரயாணிக்கும் போலீஸார் பாதுகாப்பு அளிப்பது முடியக் கூடிய காரியமா!' என்று போலீசார் கூறிவிடுவார்கள்."

இவ்விதம் சேஷய்யாகாரு தமக்குத் தாமே சமாதானம் மனத்திற்குள் சொல்லிக் கொண்டார்.

போலீஸ் படையை அதிகப் படுத்த வேண்டி





யது அவசியம். இல்லா விட்டால் நிச்சயமாக ஜனங்களுக்குப் பாது காப்பே இராமற் போய்விடும் என்று அவருக்குத் தோன்றியது.

அத்தகைய எண்ணங்கள் அவரை நிம்மதியாகத் தூங்க முடியாமல் செய்து விட்டன. எனவே, அவர் எழுந்து உட்கார்ந்தார். ஒரு சிக ரெட்டைப் பற்ற வைத்தார்.

ரயில் வண்டி ஸ்டேஷனில் நின் றது. அது மிகவும் சிறிய ஸ்டேஷன். வெளியே சூழ்ந்திருந்த ஆழ்ந்த இருள் சேஷய்யாவை என்னவோ செய்தது.

அந்த ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்படுவதும், அந்த வண்டியின் கதவைத் தள்ளிக் கொண்டு யாரோ ஒருவன் அவசரம் அவசரமாக ஏறு வதும் சரியாக இருந்தது.

"யார் அப்பா! கீழே இறங்கு, இறங்கு கீழே. இது உயர்ந்த வகுப் புப் பெட்டி. இது மெத்தை போட்ட பெட்டி. கீழே இறங்கிவிடு" என்று உரக்கக் கத்தினார் சேஷய்யா.

"என்ன சார்! வண்டி நகர ஆரம்பித்து விட்டது. என்னைச் சாகச் சொல்லுகிறீர்களா! நல்ல புண்ணியவான்தான் நீங்கள்."

இவ்வாறு சொல்லிக்கொண்டே உள்ளே ஏறியவன் வண்டியில் கீழே உட்கார்ந்து கொண்டான்.

"நீ யார்!" என்று கேட்டார் சேஷய்யா.

"நான்தான் வெங்கடு, சார்!"

"பேஷ்! வெங்கடுவாம்! ஜார்ஜ் மன்னரின் பெயரைப் போல் தன்னுடைய பெயரும் உலகப் பிரசித்தி பெற்றது போல் அல்லவா பேசுகிறான்!" என்று முணுமுணுத்தார் சேஷய்யா.

அவருக்கு அவன்மீது வெறுப்பும் கோபமும் பொங்கிக் கொண்டு வந்தன.

"இவன் டிக்கெட் வாங்காமல் வண்டியில் ஏறிக் கொள்ளும் கோஷ்டியைச் சேர்ந்தவன் போல் தோன்றுகிறது" என்று எண்ணினார்.

வெங்கடுவின் அங்க அடையாளங்களையும் அழுக்கடைந்த உடைகளையும் கண்ணோட்ட மிட்ட சேஷய்யா அவன் ஊர் சுற்றும் ஒரு பெரிய காலி என்று முடிவு செய்தார்.

வெங்கடு ஒரு பீடியைப் பற்ற வைத்து நிதான மாகப் புகை பிடிக்க ஆரம்பித்தான்.

அவன் திருடனாக இருக்கலாம் என்று எண்ணி னார் சேஷய்யாகாரு. 'அடுத்த ஸ்டேஷனுக்குச் செல்லும் வரையில் அவனிடம் தந்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய முரடர்கள் எதற்கும் அஞ்ச மாட்டார்கள்' என்று அவர் மனம் எண்ணமிட்டது.

பீடியைப் பிடித்த வண்ணம் வெங்கடு சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு தன் சட்டைப் பையில் இருந்த சில்லறைகளை எடுத்து எண்ணிப் பார்த்துவிட்டு, மறுபடியும் பைக்குள் போட்டுக் கொண்டான். பெஞ்சியில் சாய்ந்த வண்ணம் கால்களை நீட்டிக் கொண்டான்.

"இப்போது மணி என்ன இருக்கும், சார்!" என்றுகேட்டான் சேஷய்யாகாருவை.

"மணி பத்து ஆகிறது" என்றார் சேஷய்யா.

அப்போது உண்மையில் மணி பன்னிரண்டு ஆகியிருந்தது. ஆனால் பன்னிரண்டு மணி என்று சொல்லச் சேஷய்யாவுக்குப் பயமாக இருந்தது.

வெங்கடு பெஞ்சியில் சாய்ந்த வண்ணம் கால் களை நீட்டிக் கொண்டான். ஏதோ ஒரு சினிமாப் பாட்டை 'விசில்' அடிக்க ஆரம்பித்தான்.

இவன் பெரிய அயோக்கியன் என்பதில் சந் தேகமில்லை என்று எண்ணிய சேஷய்யா மனத் துக்குள் அவனை வெறுத்தார்.

"உனக்கு எந்த ஊர்!" என்று கேட்டு வைத் தார் சேஷய்யா.

"ஜாம்நகர்."

"இப்போது எது வரையில் போகிறாய்!"

"ராய்ப்பூருக்கு."

சேஷய்யாகாருவின் ஊரும் ராய்ப்பூர்தான்.

"ராய்ப்பூருக்கு எதற்காகச் செல்லுகிறாய்!"

"அங்கு எனக்கு ஏதாவது வேலை கிடைக்கலாம் என்று சொன்னார்கள்."

"உன்னிடம் டிக்கெட் இருக்கிறதா!"

"இல்லை. தினந்தோறும் ரயில் வண்டியில் பிரயாணம் செய்பவனுக்கு டிக்கெட் எதற்காக!"

"தினந்தோறும் ரயில் வண்டியில் எதற்காகச் செல்லுகிறாய்! உன் வேலை என்ன!"

"எனக்கு வேலை கிடைக்கவில்லை. பிச்சை எடுத்துப் பிழைக்கிறேன்."

"நீ நல்ல பலசாலியாக இருக்கிறாய். நீ ஏன் பிச்சை எடுக்க வேண்டும்! ஏதாவது வேலை செய்யக் கூடாதா!" என்று கேட்டார் சேஷய்யா.

சேஷய்யாகாருவுக்குப் பிச்சைக்காரர்கள் என் றாலே பிடிக்காது. அதற்காக, அவரை இரக்க சித்தமற்றவர் என்று சொல்லிவிட முடியாது. சிற்சில சமயங்களில் அவர் ஏழைகளுக்குச் சாப் பாடு போடுவது உண்டு. அவர் ஊரில் உள்ள ஏழை பங்காளர் சங்கத்தின் போஷகர்களில் சேஷய்யாவும் ஒருவர். இருந்தாலும், திடகாத்திர மும் தேக பலமும் உள்ளவர்கள் ஏதாவது வேலை செய்து ஜீவனம் நடத்த வேண்டுமென் பதுதான் அவரது சித்தாந்தம்.

"ஏதாவது வேலை கிடைத்தால் நான் செய்யத் தயாராக இருக்கிறேன், சார். வேலை கிடைக்காத

நாளில்தான் நான் பிச்சை யெடுப்பது வழக்கம்'' என்று பதில் அளித்தான் வெங்கடு.

"மாட்டைப் போல் உழைக்க உன் தேகத்தில் சக்தி இருக்கிறது. அப்படியிருக்க உனக்கு யார் பிச்சை போடுவார்கள்!'' என்றார் சேஷய்யா.

"அதுதான் எனக்கும் கஷ்டமாக இருக்கிறது. நொண்டிகளும் கண்ணில்லாக் கபோதிகளும் பிச்சை யெடுத்தால் ஏதாவது பணம் கிடைக்கிறது. என்னைப்போன்றவனுக்கு யார் பிச்சை போடுவார்கள்! இருந்தாலும் எனக்குச் சாமர்த்தியம் உண்டு. என் நாக்கை வாய்க்குள் வளைத்துக் கொண்டு ஊமையைப் போல் பாசாங்கு செய்து ஏமாற்றி விடுவேன்.''

இவ்வாறு கூறிய வெங்கடு, தன் திறமையைத் தானே மெச்சிக் கொள்பவன் போல் சிரித்தான்.

"உழைத்து ஜீவனம் செய்பவனைக் காட்டிலும் பிச்சை யெடுப்பவன் பாடு கொண்டாட்டம்தான், அப்பா. பிச்சை யெடுத்தால் கஷ்டமில்லாமல் தினசரி இரண்டு, மூன்று ரூபாய் கிடைக்கும் அல்லவா!'' என்றார் சேஷய்யா.

"தினந்தோறும் அவ்வளவு கிடைத்தால் நான் இப்படியா இருப்பேன்! ராஜாமாதிரி ஒரு கோட்டையே கட்டிவிட மாட்டேனா! பாருங்கள், எங்கு பார்த்தாலும் பிச்சைக் காரர்களாக இருக்கிறார்கள். இந்த வண்டியிலேயே நீங்கள் எண்ணினால் இருபத்தைந்து பிச்சைக்காரர்களுக்கு மேல் இருப்பார்கள். முட்டாள்கள்! இத்தனை பேர் இருந்தால் ஒவ்வொருவருடைய பங்குக்கும் காலணா, எட்டணாவுக்கு மேல் கிடைக்குமா! சில சமயங்களில் எனக்கு அதுகூடக் கிடைப்பதில்லை'' என்று சலித்துக் கொண்டான் வெங்கடு.

"அவ்விதம் ஒன்றும் கிடைக்காதபோது, நீ என்ன செய்வாய்!''

"உங்கள் கேள்வி விசித்திரமாக இருக்கிறது. ஒன்றும் கிடைக்கா விட்டால் என்ன செய்வது! யாரிடமாவது ஜேப்படி செய்வேன். யார் சட்டைப் பையிலிருந்தாவது தந்திரமாகப் பணத்தை எடுத்து விடுவேன். அதன் பின் நான் நாலைந்து நாட்கள் வரையில் மிகவும் குஷியாகக் காலம் தள்ளுவேன். ஆனால், சரியான புள்ளியாகப் பார்த்து அந்த வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் நல்ல பலன் கிடைக்கும்.''

இவ்விதம் சிரித்துக் கொண்டே கூறிய வெங்கடு மற்றொரு பீடியைப் பற்ற வைத்தான். இஞ்சினைப் போல் 'குப்' 'குப்' என்று உல்லாசமாகப் புகைவிடத் தொடங்கினான்.

இப்போது சேஷய்யாகாருவின் சந்தேகம் உறுதியாகிவிட்டது. மறுபடியும் அவரது ஹிருதயம் 'படபட'வென்று அடித்துக் கொண்டது.

"இந்த துஷ்டன் இப்போது என்னைக் கொன்று பணத்தை எடுத்துக் கொண்டால் இவனை யாரும் தடுக்க முடியாது. இன்று இந்த வண்டியில் வேறு யாரும் துணைக்கு இராதது என்னுடைய துரதிர்ஷ்டம்தான். நான் இப்போது என்ன செய்வேன்! என்னை இவன் கொல்ல வந்தால், என்னிடம் உள்ள இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு, என்னை விட்டுவிடு என்று கை கூப்பிக் கேட்கலாம். நான் இந்தத் தடவை வீட்டிலிருந்து புறப்பட்டபோது, பூனை குறுக்காக வந்ததைப் பார்த்தேன். அதுதான் இவ்வளவு கஷ்டங்களுக்குக் காரணம்.''

இவ்வாறாக, சேஷய்யா மனத்துக்குள் புலம்பலானார். இருந்தாலும் அவர் தமக்கு உண்டான பீதியை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. அடுத்த ஸ்டேஷன் வரும் வரையில் வெங்கடுவினிடம் இனிமையாகப் பேசி, அடுத்த ஸ்டேஷனில் அவனைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று அவர் மனம் திட்டமிட்டது.

"உண்மைதான், வெங்கய்யா, உண்மைதான். பாவம், வயிறு வளர்க்க நீ ஏதாவது செய்துதானே தீர வேண்டும்......ஆமாம், ஜேப்படி செய்யும் போது, நீ எப்போதாவது போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டது உண்டா!''

இவ்வாறு சேஷய்யா தேனொழுகப் பேசினார். அவர் தன் விஷயத்தில் அவ்வளவு 'அனுதாபத்துடன்' பேசியதைக் கேட்ட வெங்கடுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. இதுவரை அவனிடம் அவனது தாயாரையும் மனைவியையும் தவிர வேறு யாரும் அவ்வளவு அக்கறையும் அனுதாபமும் காட்டியதில்லை. அப்படிப்பட்ட மனைவியைக் கூட அவன் விட்டுவிட்டு ஓடி வந்து விட்டான். அவனது தோழர்களில் ஒருவனைத் தவிர வேறு எவரும் அவன் செய்யும் வேலையைப் பாராட்டியதில்லை. நல்ல உடை, நல்ல படிப்பு, நல்ல உத்தியோகம் உள்ள சகலரும் அவனைப் பார்த்து எள்ளி நகையாடுவது வழக்கம். அப்படியிருக்க, சேஷய்யாகாரு அவனது திருட்டுத் தொழிலுக்கு ஆதரவளித்ததைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் உண்டாயின.

"ஏன் பிடிபட வில்லை! நான் இரண்டு மூன்று தடவை சிறைத் தண்டனைகூட அடைந்திருக்கிறேன்'' என்று உண்மையைக் கூறினான் வெங்கடு.

"உனக்கு வெட்கமாக இல்லையா! இரண்டு மூன்று தடவை சிறைக்குச் சென்றும்கூட நீ திருட்டுத் தொழிலை விடவில்லையா!''

"இல்லை. வெட்கப்பட்டால் வயிறு நிறைந்து விடுமா!'' என்றான் வெங்கடு.

'சரி, நான் சொல்லுவதைக் கேள். இந்தத் திருட்டுத் தொழில் மிகவும் ஆபத்தானது. உதாரணமாக, என்னிடம் திருடுவதற்காக யாராவது என்னைத் தாக்குவதாக வைத்துக் கொள். எப்போதும் நான் கைத் துப்பாக்கி வைத்துக் கொள்வதால், என்னைத் தாக்குவோனை நான் சுட்டுக் கொன்று விடுவேன். ஆகையால், ஆபத்தான இந்தத் தொழிலை விட்டு விட்டு, வேறு ஏதாவது செய்ய முற்படு. நீ என்னுடன் வந்தால் ராய்பூரில் நான் உனக்குச் சாப்பாடு, துணிமணி எல்லாம் கொடுப்பேன். நீ தங்குவதற்கு இடமும் தருவேன். இவற்றைத் தவிர நான் ஒன்றுக்கு ஒரு ரூபாய் சம்பளம் தருகிறேன். என்ன சொல்லுகிறாய்!'' என்று கேட்டார் சேஷய்யாகாரு.

"பேஷாக வருகிறேன். என் மனைவியைக் கூட அழைத்து வந்து விடுகிறேன். பாவம், அவளைப் பல நாட்களுக்கு முன் விட்டு விட்டு ஓடி வந்து விட்டேன்'' என்றான் வெங்கடு.

சேஷய்யாகாரு கூறிய யோசனையைக் கேட்ட வெங்கடுவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அவன் அப்போது அவனது அருமை மனைவி சிரசியை நினைத்துக் கொண்டான். அவள் உண்மையில் சாதுவான பெண். அவளை அவன் அடிப்பான், வாயில் வந்தபடி திட்டுவான், இன்னும் என்னவெல்லாமோ கஷ்டப் படுத்துவான். அவற்றை யெல்லாம் அவள் பொறுத்துக் கொண்டிருந்ததற்கு, அவன் மீது அவளுக்கிருந்த ஆசையே காரணம். அப்படி யிருந்தும் வெங்கடு அநியாயமாக அவளை விட்டு வந்து விட்டான். எனவே, இப்போது அவனுக்கு அவள் மீது பச்சாத்தாபம் ஏற்பட்டது. அவளை மறுபடியும் அழைத்துக் கொண்டு வந்து ஒழுங்காகக்



அது சதா சந்தோஷமற்ற குழந்தையாகவே இருந்தது. வயதிற்கேற்ற திடமான வளர்ச்சியுமில்லை. எப்பொதும், சிணுக்கம்; அதிருப்தி. அதனால் அதன் தாயார் மனக்கவலையுற்றது இயற்கைதானே?



பின்னர் ஒரு நாள் .... சந்தோஷத்துடன் துள்ளிவிளையாடும் ஒரு அழகிய 'க்ளாக்ஸோ' குழந்தையின் தாயான அவளது அண்டை வீட்டுக்காரி, கவலைப்படும் இவ்வன்னையிடம் இரங்கி 'க்ளாக்ஸோ'வைச் சிபாரிசு செய்தாள்



திடமான எலும்புகளும் பற்களும் வளர்வதற்கெனவே வீடமின் டி யும், ரத்த புஷ்டிக்கென இரும்புச்சத்தும் சேர்த்துத்தயாரிக்கப்பட்ட 'க்ளாக்ஸோ' ஒரு சுத்தமான போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.



குழந்தையின் முகத்தில் குதூகலம் பொங்குகிறது இப்பொழுது—கிரமமாக தேகதிடம் பெற்று, நன்கு உண்டு, உறங்கி வருகிறது. ஆம், உண்மையாகவே - அது வேறொரு குழந்தைதான் - அதாவது, ஆரோக்யமும் ஆனந்தமும் பெற்ற 'க்ளாக்ஸோ' பேபி.

Glaxo

"க்ளாக்ஸோ" ஒரு சிறந்த சுத்தமான போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.

'க்ளாக்ஸோ' லேபரடரீஸ் (இந்தியா) லிமிடெட்

பம்பாய் – கல்கத்தா – மதருஸ்

குடித்தனம் செய்ய வேண்டுமென்ற ஆசை அவன் மனத்தில் பொங்கியது.

வெங்கடுவின் முகத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த சேஷய்யாகாரு, உடனடியாக அவனிடமிருந்து தமக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படுவதற்கில்லை என்பதை அறிந்து கொண்டார். வெங்கடுவைக் காட்டிலும் பெரிய முரட்டுப் பேர்வழிகளையெல்லாம் அவர் தமது வாழ்க்கையில் சமாளித்திருக்கும் போது, அவன் எம்மாத்திரம்! அவ்வளவு கெட்டிக்காரராக இராவிடில், அவர் இவ்வளவு காலம் ஒண்டியாகத் தமது வியாபாரத்தை நடத்தி வந்திருக்க முடியுமா!

அதே சமயம் மற்றோர் எண்ணமும் அவர் மனத்தில் எழுந்தது.

அடுத்த ஸ்டேஷனில் அவனைப் போலீஸாரிடம் ஒப்புவிப்பதைக் காட்டிலும் ராய்ப்பூருக்கே அழைத்துச் சென்று விடுவதுதான் சிறந்தது. ராய்ப்பூரில் அவரது பெட்டி, படுக்கையை வீட்டுக்குக் கொண்டு வந்து வைத்த பிறகு, அவனைப் போலீஸாரிடம் ஒப்புவித்து விடலாம். ராய்ப்பூர் ஸ்டேஷனில் உள்ள போர்ட்டர்கள் சாமான்களைத் தூக்கி வர மிகவும் அதிகப் பணம் கேட்கிறார்கள். தவிர, வெங்கடு பெட்டி, படுக்கையைத் தூக்கி வந்து விட்டால் ஸ்டேஷனிலிருந்து குதிரை வண்டி வைத்துக் கொள்ளாமலேயே அவர் வீட்டுக்குச் சென்று விடலாம். ஒன்று அல்லது இரண்டு ரூபாய் மிச்சமுமாகும்!

இவ்விதம் தமது மனத்தில் திட்டமாக முடிவு செய்து கொண்ட சேஷய்யாகாரு வெங்கடுவைப் பார்த்துச் சொன்னார்:

"வெங்கய்யா, ராய்ப்பூர் ஸ்டேஷனில் நீ என்னுடன் இறங்கி விடு. என் சாமான்களை எடுத்துக் கொண்டு என் பின்னாலேயே தொடர்ந்து வா. நீ என்னுடைய வேலைக்காரன் என்று சொல்லி விடுகிறேன். யாரும் உன்னிடம் டிக்கெட் கேட்க மாட்டார்கள்."

"அப்படியே செய்கிறேன், சார். அதிக சாமான்கள் கூட இல்லை. இரண்டு பெட்டிகள், ஒரு படுக்கை, ஒரு குடை இவ்வளவு தானே!" என்றான் வெங்கடு.

"இரண்டு பெட்டிகளா! என்னிடம் ஒரு பெட்டிதானே இருக்கிறது" என்று கூறினார் சேஷய்யா ஆச்சரியத்துடன்.

"இல்லையே, இரண்டு பெட்டிகள் அல்லவா இருக்கின்றன. மேல் பலகையின் மீது ஒரு பெட்டி இருக்கிறது. அதோ பெஞ்சிக்குக் கீழே ஒரு பெட்டி இருக்கிறது."

சேஷய்யாகாரு சட்டென்று கீழே குனிந்து பார்த்தார். வெங்கடு கூறியபடி பெஞ்சுக்குக் கீழே ஒரு அழகான தோல் பெட்டி இருந்தது. பளபள வென்று மின்னிக் கொண்டிருந்த அந்தப் புத்தம் புதிய பெட்டியை யாரோ பணக்காரர்கள் வைத்து விட்டு மறந்திருக்க வேண்டும். சேஷய்யா அந்த வண்டியில் ஏறுவதற்கு முன்பே அதன் சொந்தக்காரர் அதை மறந்து போய் வைத்துவிட்டு இறங்கியிருக்க வேண்டும்.

சேஷய்யாவின் மூளை வேலை செய்யத் தொடங்கியது. அவர் அந்தப் பெட்டியைத் தூக்கிப் பார்த்தார். அது மிகவும் கனமாக இருந்தது. அதில் நகைகள், வெள்ளிச் சாமான்கள் முதலியவை இருக்க வேண்டும் என்று அவர் தமக்குள் நிச்சயம் செய்து கொண்டார்.

"நீங்கள் ஏன் அந்தப் பெட்டியை அப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்! அது உங்களுடையது இல்லையா!" என்று வெங்கடு கேட்டான்.

"அது என்னுடையதுதான். அதைப் பற்றி மறந்தே போய் விட்டேன். சென்ற சனிக்கிழமை தான் அந்தப் பெட்டியை விசாகப் பட்டணத்தில் வாங்கினேன். விலை நாற்பத்தெட்டு ரூபாய்."

"வேடிக்கையாக இருக்கிறதே. நீங்கள் படித்த மனிதராக இருந்தும் உங்கள் சொந்தச் சாமான் களையே நீங்கள் மறந்து விடுகிறீர்களே" என்று சொல்லிவிட்டு வெங்கடு இடிஇடியென்று பலமாகச் சிரித்தான்.

அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கும் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று சேஷய்யா துடித்தார். பூட்டை உடைத்துத் திறந்து பார்க்கலாம் என்றால், வெங்கடு சனியன் போல் அவருக்கு எதிரில் உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சேஷய்யா மறுபடியும் அந்தப் பெட்டியைப் பார்த்தார். அது கண்ணைக் கவரும் புதுப் பெட்டியாக இருந்தது. அதன் விலையே ஐம்பது ரூபாய் இருக்கும். அத்தகைய அருமையான பெட்டியின் சொந்தக்காரர் அதற்கு உள்ளே விலையுயர்ந்த சாதனங்களை வைத்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் மிகவும் பணக்காரராக இருக்க வேண்டும். இல்லாவிடில் அந்தப் பெட்டியை ரயிலில் அலட்சியமாக வைத்து விட்டு மறந்து போயிருப்பாரா!

வெங்கடு சேஷய்யாகாருவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெட்டி அவருடையதாக இருந்தால், அவர் ஏன் அதை அவ்விதம் உற்றுப் பார்க்க வேண்டும்! யாரோ அதை வைத்துவிட்டு மறந்து போய் விட்டார்கள் என்பதை வெங்கடு அறிந்து கொண்டான்.

"சேஷய்யா தடபுடலாக உடை உடுத்திக் கொண்டிருப்பதால், என்னை ஏய்த்து விடலாம் என்று எண்ணுகிறார் போலும். அவரது ஐம்பம் என்னிடம் சாயாது."

இவ்வாறாக, வெங்கடுவின் மனம் வெகு தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது.

வெங்கடு தன்னை உற்றுப்பார்ப்பதைச் சேஷய்யா காரு கவனிக்கத் தயங்கவில்லை. தன்மீது யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லாமல் இருப்பதற்காக அவர் தலையணைக்கு அடியில் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து, மும்முரமாக வாசிப்பதுபோல் பாசாங்கு செய்ய முற்பட்டார்.

ஒரு சிறிய ஸ்டேஷனில் ரயில் வண்டி நின்றது. அந்த ஸ்டேஷனில் வெங்கடுவை எப்படியாவது இறங்கச் செய்து விட வேண்டும் என்று சேஷய்யா எண்ணினார். அதற்குத் தகுந்தாற்போல் டிக்கெட் பரிசோதகர் அவர்கள் இருந்த இண்டர் வண்டியில் ஏறினார்.

"நீ யார்!" என்று வெங்கடுவைக் கோபத்துடன் கேட்டார்.

"நான்தான் கனமை வெங்கடு, எஜமான்."

"கீழே இறங்குடா, அயோக்கியப் பயலே. உன் அப்பன் வீட்டு வண்டி என்று எண்ணிக் கொண்டாயோ! நீ கெட்ட கேட்டுக்கு இண்டர் வகுப்பு வண்டி கேட்கிறதா! சீக்கிரம் இறங்கு" என்று கட்டளை யிட்டார் டிக்கெட் பரிசோதகர்.

வெங்கடு மறு பேச்சுப் பேசாமல் கீழே இறங்கிப் பிளாட்பாரத்தில் பரம சாதுவைப் போல் மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சேஷய்யாகாரு பெருமூச்சு விட்டார். "ஒழிந்தது சனி. கடவுள்தான் நமக்குத் துணை செய்தார்" என்று வாய்க்குள் முணுமுணுத்தார்.

டிக்கெட் பரிசோதகர் சேஷய்யாவின் டிக்கெட்டைப் பரிசோதனை செய்தார். அந்த டிக்கெட்

டுக்கு எத்தனை வைத்துக்கொள்ளலாமோ அதைக் காட்டிலும் அதிக சாமான்கள் இருப்பதாகக் கூறி ஒரு ரூபாய் ஆறு அணு அதிகக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறினர்.

வேறு சமயமாக இருந்தால் சேஷய்யா அதை ஆட்சேபித்திருப்பார். அந்தச் சிறு தொகையைக் கூட இலகுவில் கொடுத்திருக்க மாட்டார். ஆனால், அருமையான தோல் பெட்டியில் விலையுயர்ந்த சாமான்கள் இருக்கின்றன அல்லவா! எனவே, அன்று டிக்கெட் பரிசோதகர் இன்னும் அதிகத் தொகை கேட்டிருந்தால்கூட சேஷய்யா யாதொரு ஆட்சேபணையுமின்றிக் கொடுத்திருப்பார்.

அவர் வேறொரு பக்கமாகத் திரும்பிச் சென்றதும், வெங்கடு மறுபடியும் அதே வண்டியில் பாய்ந்து ஏறிக் கொண்டான்.

இதைக் கண்டதும் சேஷய்யாகாருவுக்குப் பகீரென்றது. "இவன் சனியனைப்போல் நம்மைத் தொடர்ந்து வருகிறானே" என்று எண்ணினர்.

வெங்கடு வண்டியில் ஏறியதும் சாவதானமாகப் பிடியைப் பற்ற வைத்தான்.

"இந்தப் பெட்டியில், அவ்வளவு கனமான சாமான் என்னதான் வைத்திருக்கிறீர்கள்! மிகவும் கனமாக இருக்கிறது என்று டிக்கெட் பரிசோதகன் கட்டணம் வசூலித்து விட்டானே!" என்றான்.

"பிரமாதமாக ஒன்றும் இல்லை. சில துணி மணிகளும் புத்தகங்களும்தான் வைத்திருக்கிறேன். வேறு உயர்ந்த சாமான் வைப்பதற்கு நான் பணக்காரனா, என்ன!" என்று ஒரு போடு போட்டார் சேஷய்யாகாரு.

வெங்கடு அத்துடன் அவரை விட்டு விடுகிற பேர்வழியாக இல்லை.

"இந்தப் பெட்டியில் நீங்கள் வைத்துள்ள சாமான்கள் விலையுயர்ந்தவையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெட்டி அவ்வளவு கனமாக இருக்குமா!" என்று கேட்டான்.

சேஷய்யாவும் சளைக்கவில்லை.

"இந்தப் பெட்டி ஏன் இவ்வளவு கனமாக இருக்கிறது தெரியுமா! ஊரில் எனக்கு மைத்துனர் ஒருவர் இருக்கிறார்......"

இச்சந்தர்ப்பத்தில் சட்டென்று வெங்கடு இடைமறித்து, "அடாடா! அவரையா இந்தப் பெட்டியில் அடைத்து வைத்திருக்கிறீர்கள்!" என்று குத்தலாகக் கேட்டான்.

உடனே சேஷய்யாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"நான் சொல்லி முடிப்பதற்குள் மடத்தனமாகக் குறுக்கிடுகிறாயே! என் மைத்துனர் கிராமத்தில் டாக்டராக இருக்கிறார். அவர் மருந்து இடிப்பதற்காக ஓர் இரும்பு உரலும் உலக்கையும் வாங்கிவரச் சொல்லியிருந்தார். அவற்றை நான் விசாகபட்டணத்தில் வாங்கி இதில் வைத்திருக்கிறேன். அதனால்தான் இந்தப் பெட்டி மிகவும் கனமாக இருக்கிறது."

இவ்விதம் தாம் சமயோசிதமாகக் கூறியதைக் குறித்துச் சேஷய்யா உள்ளூற மகிழ்ச்சியடைந்தார்.

சேஷய்யா கூறியதைக் கேட்டதும் வெங்கடு உரக்கச் சிரித்துக் கொண்டே, மற்றொரு பீடியைப் பற்ற வைத்தான்.

சேஷய்யா பல்லைக் கடித்துக் கொண்டார். முந்திய ஸ்டேஷனிலேயே வெங்கடுவைப் போலீசாரிடம் ஒப்புவிக்கும்படி டிக்கெட் பரிசோதகரிடம் சொல்லாமற் போனேமே என்று வருந்தினர். இப்போது அவருக்கு வெங்கடுவினிடம் பயம் ஏற்பட்டு விட்டது. அவன் அவருடைய தந்திரத்தைத் தெரிந்து கொண்டு விட்டதாக அவருக்குத் தோன்றியது.

சேஷய்யாவின் நடிப்பை யெல்லாம் வெங்கடு தெரிந்து கொண்டு விட்டான்.

"இந்த மனிதன் என் கண்ணில் மண்ணைத் தூவலாமென்று நினைக்கிறான். இவன் என்னைக் காட்டிலும் பெரிய அயோக்கியன் என்றல்லவா தோன்றுகிறது! இருந்தாலும் அயோக்கியத்தனத்தில் எனக்குள்ள அனுபவம் இவனுக்கு உண்டா என்பதைப் பார்த்து விடுகிறேன். என்னை இவ்வளவு நேரம் ஒரு மடையனாக நினைத்தல்லவா பேசி விட்டான்! இவன் தந்திரம் இந்த 'ஊமை' வெங்கடுவுக்கா தெரியாது! இந்தப் பெட்டியில் எவ்வளவு பெரிய தொகை இருக்கிறதோ! இதை ஏற்கனவே பணக்காரனை இவன் அடித்துக் கொண்டு போக விட்டு விடக் கூடாது."

இவ்விதம் உறுதி செய்து கொண்ட வெங்கடு, திடீரென்று தன் இடுப்பிலிருந்த கத்தியை உருவிக் கொண்டு எழுந்து நின்றான். சேஷய்யாகாருவின் மார்பில் கத்தியின் முனை பதியும்படி வைத்துக் கொண்டான்.

வெங்கடுவின் இந்தச் செய்கையைக் கண்ட சேஷய்யா நடு நடுங்கிப் பதறிப் போய், 'திருடன்', 'திருடன்' என்று அலறினர்.

"பேசாமல் நான் சொல்லுவதைக் கேள். நீ இந்த இடத்திலிருந்து எழுந்தாலும் சரி, சப்தம் போட்டாலும் சரி, இந்தக் கத்தியால் உன்னைக் குத்திக் கொன்று விடுவேன். உன் தந்திரமெல்லாம் என்னிடம் பலிக்காது. இப்படியெல்லாம் நீ ஊமை வெங்கடுவை ஏய்த்துவிட முடியாது."

"என்னைக் கொன்று விடாதே, என்னிடமிருந்து நீ வேண்டியதை எடுத்துக் கொள். என்னை உயிருடன் விட்டு விடு!" என்று பரிதாபமாகக் கெஞ்சினர் சேஷய்யா.

"உன்னைக் கொல்லாவிடில், நான் இங்கிருந்து உயிருடன் போக முடியாது. என்னை நீ உன் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடுவாய்."

"என்னிடம் துப்பாக்கியே இல்லை. உன்னை மிரட்டுவதற்காக நான் அவ்விதம் கூறினேன், என்னைக் கொன்று விடாதே!" என்று மறுபடியும் கெஞ்சினர் சேஷய்யா.

வெங்கடு அவர் கூறியதை நம்பவில்லை. சேஷய்யாவின் படுக்கையில் இருந்த தோல் வாரை எடுத்து, அவரது கைகளை இறுகக் கட்டினான். தலையணைக்கு அடியிலும் மற்ற இடங்களிலும் தேடினான். துப்பாக்கி எதுவும் இல்லை.

"இதை யாரிடமாவது சொன்னால் உன்னை நான் கொன்று விடுவேன்" என்று சொல்லிய வண்ணம் வெங்கடு தோல் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான். கதவுக்கு வெளியே தலையை நீட்டி இருபுறமும் பார்த்தான். ஸ்டேஷன் அங்கிருந்து அதிக தூரம் இல்லாததால், வண்டி மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. வெங்கடு பெட்டியுடன் இறங்கி ஓடி விடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சேஷய்யா அச்சந்தர்ப்பத்தைக் கைவிட விரும்பவில்லை. சட்டென்று எழுந்து நின்று சங்கிலியைப் பிடித்து இழுத்தார். மறுபடியும் சந்தடி செய்யாமல் உட்கார்ந்து விட்டார்.

வெளியே எப்படிக் குதிப்பது என்பதிலேயே வெங்கடு கண்ணும் கருத்துமாக இருந்ததால், சேஷய்யாவின் தந்திரத்தை அவன் கவனிக்கவில்லை.

ரயில் வண்டியின் வேகம் மிகவும் குறைந்தது. அதுதான் சமயம் என்று வெங்கடு பெட்டியுடன் கீழே குதித்து ஓடத் தொடங்கினான்.

ரயில் வண்டி நின்றது.

சேஷய்யா, கட்டப்பட்ட தமது கைகளை வெங்கடு ஓடிய திசையை நோக்கிக் காட்டி கொண்டே,

கல்கியின் சக்தி

தமிழ் மொழியைச் சாதாரண மக்களும் அனுபவித்துப் பயனடையுமாறு கல்கி புத்தம் புதிய வழிகளை வகுத்ததுமன்றிச் சிக்கலான விஷயங்களைப் பள்ளிக்கூட மாணவர்கள் தாமும் படித்து விளங்கும் வகையில் அவற்றை மிகவும் இலாகவமாக எடுத்தாண்டார்.

சிதைந்த சிற்பங்களையும் வறண்ட வரலாற்றுச் செய்திகளையும் வைத்துக் கொண்டு தமிழகத்தின் பழங்கால உன்னதத்தை நம் கண்முன்னே காட்டிய கற்பனையாளர் 'கல்கி' ஆசிரியர் என்பதை யார்தாம் மறுப்பார்கள்? 'தமிழ்க் கவி நடைக்குப் பாரதியார் புதிய சக்தியைக் கொடுத்தார். தமிழ் உரை நடைக்குக் கல்கி புதிய சக்தியை ஊட்டினார்' எனத் தமிழ்ப் பேரறிஞரும் அமைச்சருமான திரு. நடேச பிள்ளை அவர்கள் கல்கியின் பிரிவைக் கேட்டு ஈழ கேசரிக்குத் தெரிவித்துள்ள செய்தி முற்றிலும் உண்மையாகும்.

ஈழகேசரியுடன் கல்கி ஆசிரியர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொண்டிருந்த தொடர்பு பெற்ற தாய்க்கும் பிள்ளைக்குமுள்ள பரிவு போன்றது.

இத்தகைய ஒரு சிறந்த நண்பரையும் தமிழ்வாணனையும் நாமும் தமிழகமும் இழந்த விடத்தும் கல்கியின் சக்தி—ஏன், கல்கித் தமிழின் சக்தி—எங்கணும் நின்று நிலவுகின்றது. அவரது அருமைக் குழந்தையான கல்கியை அவரது ஆருயிர் நண்பர் திரு டி. சதாசிவம் அவர்கள் கண்மணி போல் காப்பாற்றிக் கல்கித் தமிழின் புகழை நிலைபெறச் செய்வதையே தமிழகம் விரும்புகின்றது.

—ஈழகேசரி, யாழ்ப்பாணம்

'திருடன்' 'திருடன்' என்று கூக்குரலிட்டார். வண்டியிலிருந்து இறங்கிய பிரயாணிகள் வெங்கடுவை விரட்டிச் சென்று பிடித்து விட்டார்கள். உடனே எல்லாப் பிரயாணிகளும் கார்டும் கீழே இறங்கி வந்தார்கள்.

"அது புத்தம் புதிய பெட்டி. அறுபது ரூபாய் கொடுத்து வாங்கினேன். அவன் என்னைக் கொன்றுவிட முயற்சித்தான். அவனை விட்டு விடாதீர்கள். போலீஸாரிடம் ஒப்புவித்து விடுங்கள்" என்று புலம்பினார் சேஷய்யா.

பிரயாணிகளில் ஒவ்வொருவரும் வெங்கடுவைக் கண்டபடி பேசவும் அடிக்கவும் தொடங்கினர்.

"அவன் எத்தனை தடவை சிறைக்குச் சென்றிருக்கிறானோ! எனவே, மறுபடியும் அவன் சிறைக்குச் செல்லப் பயப்பட மாட்டான். ஆகையால் அவனைக் கட்டி வைத்து மனம் கொண்ட மட்டும் அடித்துத் துரத்தி விடுங்கள்" என்று சிலர் யோசனை கூறினர்.

வண்டி ராய்பூரில் நின்றதும் சேஷய்யா தமது சாமான்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வெகு வேகமாகப் புறப்பட்டார்.

வீட்டுக்குள் அவர் சென்ற போது வெற்றி பெற்ற ஒரு வீரனைப் போல் அவர் காட்சி யளித்தார். தாம் வாங்கி வந்திருந்த பட்சணங்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்தார்.

பெட்டியைப் பற்றிச் சேஷய்யா தமது மனைவியிடம் கூடக் கூற விரும்பவில்லை. அவரது மனைவியின் சுபாவம் அவருக்குத் தெரியும். பெட்டியைப் பற்றிய உண்மையைச் சொன்னால், "செய்யத் தகாத காரியத்தைச் செய்து விட்டீர்களே" என்று அவள் புலம்பத் தொடங்கி விடலாம்.

அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. பெட்டியை இரகசியமாகத் திறந்து பார்த்த பின், அதில் உள்ள நகைகளை யெல்லாம் காட்டி அவளை ஆச்சரியத்தில் மூழ்கடிக்க வேண்டும் என்பது அவரது உத்தேசம்.

எனவே, அவர் கொஞ்சம் காப்பி சாப்பிட்டு விட்டு, தமது அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார். பெட்டியின் பூட்டு மிகவும் கெட்டியாக இருந்தது.

கடைசியில் பூட்டை உடைப்பதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று.

* * *

பெட்டியை அவர் எல்லையற்ற ஆர்வத்துடன் திறக்கப் போகும் சமயம் அவரது இருதயம் அடித்துக் கொண்டது; கைகள் நடுங்கின.

அவர் மூடியைத் திறந்தார். உள்ளே இருந்த சாதனங்கள் மேலே தெரியாமல் ஒரு துணியால் மறைக்கப்பட்டிருந்தது.

அப்போது அவர் மனத்தில் அலை அலையாகப் பல எண்ணங்கள் எழுந்தன.

"இந்தப் பெட்டி யாருடையது? இதை எடுத்துக் கொண்டு வந்தது சரியா? இந்தச் செய்கை திருட்டுத்தனம் அல்லவா! வெங்கடுவுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்! அவன் தான் பெட்டியைத் திருடியதாக ஒப்புக் கொண்டானே. ஆனால் இந்தப் பெட்டியை நான் எல்லோர் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு, சொந்தப் பெட்டியைப் போல் எடுத்துக் கொண்டு வந்து விட்டேனே. வெங்கடு யோக்கியமானவன். வேலை எதுவும் கிடைக்காமல் பட்டினி கிடக்கும்படி நேரும்போதெல்லாம் தான் திருடுவது உண்டு என்று அவன் தைரியமாக ஒப்புக் கொண்டான் அல்லவா!"

சே, இது என்ன பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் என்று சேஷய்யா தம்மைத்தாமே கடிந்து கொண்டார். அவரது தலை சுழன்றது. தம் மனத்தில் எழும் மேற்படி எண்ணங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்துடன், ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

கடைசியாக, மூடப்பட்டிருந்த துணியை எடுத்து அப்பால் எறிந்தார்.

அவ்வளவுதான்! ஏதோ மின்சாரம் தாக்கியது போல் அலறிக் கொண்டு சேஷய்யா பின் வாங்கினார். அவர் நெற்றியில் வியர்வை துளித்தது.

பெட்டிக்குள் உயிரற்ற ஒரு குழந்தையின் உடல் விறைத்துக் கிடந்தது!

உங்கள் பற்களை சுத்தம் செய்ய இதோ ஒரு புதிய சிறப்பான முறை!



ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை நிற 'கோலினாஸ்' உங்கள் பற்களை வெண்மையாக்குவதுடன், பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவுகிறது. உங்கள் சுவாசம் மணிக்கணக்கில் புதுமணம் கமழ விளங்குகிறது. இதன் ரகசியம் செழிப்பான 'கோலினாஸ்' நுரையில்தான் அடங்கியுள்ளது. அது ஆக்டிவ் க்ளோரோபிலை வாயில் பிரஷ் நுழையமுடியாத ஒவ்வொரு மூலைமுடுக்கிற்கும் எடுத்துச் செல்கிறது.

எவ்வளவோ சிக்கனமானது


'கோலினாஸ்' நுரை மூலம் நீங்கள் அதிக பயனும் அடைகிறீர்கள். ஈரமில்லாத பிரஷில் அரை அங்குல அளவே போதுமானது. இப்பொழுதே ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்' டூத்பேஸ்டை உபயோகிக்கத் தொடங்குங்கள்.



உங்கள் குழந்தைகளுக்கு **இலவசம்**

"நகைமுகனும் அவனுடைய பிராணி நண்பர்களும்" என்ற சுவையான சித்திரக் கதைக்கு இப்பொழுதே எழுதுங்கள்:

நகைமுகன், இலாகா 50 J
த. பெ. 541,
பம்பாய்.



'கோலினாஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது

GK. 217 (5)

அன்று ஞாயிற்றுக்கிழமை. கண்ணன் சாவகாசமாக உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் பின்புறமாகச் சலசலப்புச் சத்தம் கேட்டுத் திரும்பினான். ராதைதான் பரபரப்புடன் உள்ளே வந்தாள்.

"இங்கே பாருங்கள்! பக்கத்து வீட்டு ரகு நம்ம பிரேமாவைப் போட்டு அடித்து விட்டான்! குழந்தையின் முதுகில் அவன் கை விரல்கள் ஐந்தும் அப்படியே பதிந்திருப்பதைக் கொஞ்சம் பாருங்கள்!" என்று பொரிந்து கொட்டினாள் ராதை.

பிரேமா ஓடி வந்து, "அப்பா, இங்கே பாரு, அப்பா இந்த ரகுவை! விளையாடிக் கொண்டிருக்கும்போது என்னோடு சண்டை பிடித்து என் முதுகில் அடித்து விட்டான்......!" என்று விம்மல்களுக்கு இடையில் சொல்லி விட்டு 'ஓ' வென்று கண்ணீர்விட்டு அழுதாள்.

கண்ணன் உடனே அவளை அன்போடு அணைத்துக்கொண்டு, "அவன் கிடக்கிறான், முட்டாள்! விளையாடத்தெரியவில்லை அவனுக்கு. நீ அழாதே, அம்மா! அவனைக் கண்டிக்கிறேன்!" என்று கூறி அவளைச் சமாதானப் படுத்தினான்.

ராதை தன் கணவனைப் பார்த்துத் தன் முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு, "உங்களைப் போலப் புருஷரை நான் பார்த்ததில்லை. என்ன அநியாயம் இது! குழந்தையின் முதுகைப் பார்த்தீர்களா? அப்படியே அந்தக் கடன்காரன் விரல்கள் ஐந்தும் பதிந்திருக்கின்றன!" என்று ஆத்திரமாகப் பேசினாள்.

"ராதை, கொஞ்சம் நிறுத்திக் கொள்! எனக்கும் கொஞ்சம் பேச்சுச் சுதந்திரம் கொடு. என்னத்துக்காக இத்தனை படபடப்பும் ஆத்திரமும்! ரகுவும் குழந்தைதானே? நம்ம பிரேமாவை விட மூன்று வயது பெரியவன். அவன் வேண்டுமென்றே அப்படி அவளை அடிப்பானா...?" என்று கண்ணன் மேலே பேசுவதற்குள் ராதைக்குக் கோபம் வந்து விட்டது என்பதற்கு அடையாளமாக அவள் முகம் சிவந்து விட்டது.

"ரொம்ப நன்றாயிருக்கிறதே, நீங்கள் சொல்வது! குழந்தையா அது, கோட்டான்!"

"ராதை, என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? ரகுவின் முதுகில் இதேமாதிரி விரல் பதியும்படி அறையச் சொல்லுகிறாயா?"

"நான் ஒன்றும் அவனை அறையச் சொல்லவில்லை. அவன் அப்பாவிடம் போய் ஒரு வார்த்தை சொல்லுங்கோ. 'உங்கள் பிள்ளை ரொம்பத் துடுக்காயிருக்கான். கொஞ்சம் அடக்கி வையுங்கள்' என்று சொல்லி விட்டு வாருங்கள். கையோடு பிரேமாவையும் அழைத்துக் கொண்டு போய் அவள் முதுகையும் அவரிடம் காட்டுங்கள்!"

"என்ன ராதை! குழந்தைகள் சண்டையைப் பெரியவர்கள் வரையில் கொண்டு போகலாமா? கொஞ்சங்கூடத் தெரியாமல் பேசுகிறாயே! குழந்தைகள் இன்றைக்கு ஒன்றை யொன்று அடித்துக் கொள்ளும். நாளைக்கே ஒன்றாகச் சேர்ந்து கொள்ளும்......"



சிவப்பு ரோஜா

ஸோமாஸ்

அவன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராதையின் முகத்தைப் பார்த்தான். அவன் கோபம் தணிந்து முகத்தில் சாந்தம் நிலவியது. அவள் திடீரென்று சாந்தம் அடைந்ததற்குக் காரணம் அவனுக்குத் தெரியாமலில்லை. அவனது குழந்தைப் பருவத்தின் இன்ப நினைவுதான்.

"ராதை, உன் குழந்தைப் பருவ நிகழ்ச்சி மறந்து போய் விட்டதா?" என்று சாந்தமாகக் கேட்டான் கண்ணன்.

ராதையின் முகத்தில் குறுநகை தவழ்ந்தது. அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். ஞாயிற்றுக் கிழமையானாலும் காலை பத்து

மணிக்கே வீட்டில் சாப்பாடு முடிந்துவிடும். பிரேமாவுக்கும் கணவனுக்கும் சாப்பாடு போட்டுவிட்டு, தானும் சாப்பிட்டு விட்டு, ஒரு வழியாய்ச் சமையலறையைச் சாத்தி விட்டு வந்து விடுவாள். இன்றும் அவள் காரியங்களெல்லாம் முடிந்து விட்டன. கையில் 'ஸ்வெட்டர்' போடும் கம்பளி நூலை எடுத்துக்கொண்டு பின்ன ஆரம்பித்தாள். அவளுடைய விரல்கள்தான் ஸ்வெட்டர் பின்னினவே தவிர, அவள் மனம் ஏதோ பழைய நினைவுகளில் சஞ்சரிக்கத் தொடங்கியது என்பது அவளது பார்வையிலும் இன்ப ரேகை படர்ந்த முகத்திலும் பிரதிபலித்தது.

அம்மாவும் அப்பாவும், கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று விக்கிரகங்கள் மாதிரி அசைவற்றுப் போய் விடவே பிரேமாவுக்கு அவர்களுடன் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. மெதுவாக அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

* * *

ராதைக்கு அப்பொழுது ஏழு வயது இருக்கும், கண்ணன் அவளைவிட நாலு வயது பெரியவன். ராதை கண்ணனுக்கு அத்தை பெண். இருவரும் குழந்தைப் பிராயத்திலிருந்து ஒன்றாக விளையாடி, ஒன்றாய்ச் சாப்பிட்டு, ஒன்றாய்ச் சண்டை பிடித்துக்கொண்டு, ஒன்றாய்ப் படித்துக் கொண்டு இருந்தார்கள். கண்ணனின் தகப்பனார் ஒரு ஊரிலும் நிரந்தரமாகத் தங்காமல் ஊர் ஊராகப் போகும் வேலையில் இருந்தபடியினால் கண்ணன் சென்னையில் அத்தை வீட்டில் இருந்துகொண்டு படித்து வந்தான்.

கண்ணனுக்கு ராதையை ஏதாவது காரணமில்லாமல் சேஷ்டை செய்து அழ விடுவதில் அளவு கடந்த ஆசை.

"அம்மா, இங்கே பாரு அம்மா, கண்ணனை!" என்று கத்துவாள் ராதை.

கண்ணன் அப்பொழுது அவளைப் பார்த்துக் கடகடவென்று சிரிப்பான்.

"நான் அழுதால் உனக்குச் சிரிப்பாயிருக்கிறதோ!" என்பாள் ராதை.

"இல்லை, ராதை! நீ சிரிக்கும்போது உன் மாம்பழக் கன்னத்தில் அழகாகக் குழி விழுகிறது. நீ அழும்போது உன் கன்னம் எப்படியிருக்கிறது என்று பார்க்கணும் போல ஆசையாயிருந்தது!" என்பான் கண்ணன்.

உடனே ராதைக்கு எங்கிருந்தோ சிரிப்பு பீறிக்கொண்டு வந்து விடும்.

ராதையின் அழுகைக் குரல் கேட்டு அத்தை சமையலறையிலிருந்து வருவாள். "என்னடா கண்ணா, ரகளை? அவளை ஏன் ஓயாமல் அழ விடுகிறாய்?" என்று அவனை அன்போடு கடிந்துகொள்வாள் அத்தை.

"அத்தை, நான் அவளை அழச் சொல்கிறேனா? அவள்தான் எதற்கெடுத்தாலும் அழுகிறாள். ஆனால், அத்தை, ராதை அழுவதுகூட அழகாய்த்தான் இருக்கிறது! நீ அவள் கண்ணுக்கு இட்டிருக்கும் மையைக் கலைத்து முகமெல்லாம் அப்பிக் கொண்டிருக்கிறாள் ராதை. அதுவும் அவளுக்கு அழகாய்த்தான் இருக்கிறது. ராதை, நீயே கண்ணாடியில் பார்த்துக் கொள், அழகாயிருக்கிறதா, இல்லையா என்று!" என்று சொல்லி ராதையிடம் கண்ணாடியைக் கொண்டு வந்து காட்டுவான் கண்ணன்.

ராதை கலீர் என்று சிரித்து விடுவாள், அத்தையும் இதைப் பார்த்துச் சிரித்து விடுவாள். பின்னே என்னத்தைச் செய்ய!

"நான் அப்பாவாம். நீதான் அம்மாவாம். நீ எனக்குச் சமைத்துப் போடுவாயாம். நான்..." என்று கண்ணன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ராதை, "ஆமாம். நீ உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பாயாக்கும்! அது இங்கே நடக்காது" என்று பட்டென்று பதில் கொடுப்பாள்.

"ஏண்டியம்மா, உனக்கு என்ன வந்து விட்டது? அம்மா, அத்தை எல்லாரும்



சமைக்க வில்லையா?" என்று கண்ணன் சற்றுக் கடுமையாகக் கேட்பான்.

ராதைக்குக் கோபம் வந்துவிடும். "அம்மா, இங்கே பார் அம்மா, இந்தக் கண்ணனை!" என்று கத்துவாள்.

"அத்தை, இங்கே பாரு, ராதையை!" என்று கண்ணனும் கூடக் கத்துவான்.

இப்படி அவர்கள் இளம் பிராயத்து வாழ்க்கை பகலும் இரவும் போல, சிரிப்பும் அழுகையுமாகச் சென்று கொண்டிருந்தது. ஆனால் இவ்வளவுக்கும் இடையில் கண்ணனும் ராதையும் அறியா வண்ணம் ஓர் இனந்தெரியாத அன்பு பிறந்து அவர்கள் இருவரையும் ஆட்டிப் படைத்து வந்தது.

ராதைக்கு வயது பன்னிரண்டு ஆயிற்று; குழந்தையாயிருக்கும் போதே ராதை நல்ல அழகி. வயது ஆக ஆக, அவள் பூப்போன்ற

உடலில் அழகும் மெருகு கொடுத்துக் கொண்டே வந்தது. அவளது மாந்தளிர் போன்ற மேனிக்கு எந்த நிறப் பாவாடையும் அழகா யிருந்தது. அவள் குணத்திலும் சிறு மாறுதல் ஏற்பட்டிருந்தது. முன் மாதிரி சிறு குழந்தைத்தனம் மாறி, கொஞ்சம் படபடப்பும் துள்ளலும் சேர்ந்து அவள் இயல்பைப் புதுமாதிரியாகக் களை வீசச் செய்தன.

மஞ்சள் உடலில், கறுப்புக் கரை போட்ட பட்டுப் பாவாடையும் நீல நிற 'ஸாட்டின்' ஜாக்கெட்டும் போட்டுக் கொள்ளுவதில் தான் ராதைக்கு ரொம்பப் பிரியம்.

"ராதை, நீ அணிந்து கொள்ளுவதனால் இந்தப் பாவாடைக்கு எத்தனை அழகு உண்டாகிறது!" என்றான் கண்ணன் ஒருநாள்.

ராதைக்குக் கோபம் வந்து விட்டது.

"என்னை அழகில்லை என்று சொல்ல வேண்டும் உனக்கு. அதற்குத் தான் சுற்றி வளைத்து எப்படி யெல்லாமோ சொல்லுகிறாய். சொல்லி விட்டுப் போயேன்!"

"நான் உண்மையைச் சொன்னால் கூட நீ தவறாக எடுத்துக் கொள்ளுகிறாயே! உன் அழகைப் பாராட்டத்தான் அப்படிச் சொன்னேன். ராதை, நான் இப்பொழுது தமிழ் ஆசிரியரிடம் தனியாகத் தமிழ் படிக்கிறேன் அல்லவா! அவர் சொன்ன அழகான உவமைகள் உனக்கு அப்படியே பொருந்துகின்றன. உன் நடைக்கு உவமை வேண்டுமானால் அன்ன நடையைக் கூற வேண்டும். உன் விசாலமான கண்களுக்கு இணையாக மீனைக் கூறலாம். ஆனால் மீனுக்கு உன் பார்வையின் அழகு இல்லை. உன் முகத்துக்குத் தாமரையை உவமை கூறலாம். உன் தலைப் பின்னலுக்குக் கரு நாகத்தை உவமை கூறலாம்..." என்று கண்ணன் உவமைகளை அடுக்கிக் கொண்டே போனான்.

"ஏன் இப்படி மறைமுகமாக என்னைப் பரிகசிக்கிறாய்? அன்னம், மீன், பாம்பு என்று என்னத்தை யெல்லாமோ கூறிச் சுற்றி வளைக்கிறாய்?" என்று கூறி ராதை அழ ஆரம்பித்து விட்டாள்; அவள் கண்களில் மளமள வென்று நீர் பெருக ஆரம்பித்தது.

"ஆ, ராதை! இப்பொழுது தான் புரிகிறது. உன் கண்களுக்கு உவமை!"

"என்னடாப்பா, அப்படிப் பிரமாதமாகக் கண்டுபிடித்து விட்டாய்? அதையும் இப்பவே சொல்லி விடு!" என்றாள் ராதை.

"அதுதான் பிரவாகமாய்ப் பெருகும் நீர் வீழ்ச்சி!" என்றான் கண்ணன், குறும்புத்தனமாக அவளைப் பார்த்துக் கொண்டே.

இதைக் கேட்ட ராதைக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரிய வில்லை.

"ராதை, அந்த அருவி பொங்கிப் பெருகிப் பிரவாகமாக ஓடி வரும் வழிகளில் சிவப்பு ரோஜா மலர்ந்திருக்கிறது. அது தெரியுமா உனக்கு...? நான் புரியவைக்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே ராதையின் பூப்போன்ற கன்னத்தில் பட்டென்று ஒரு அறை கொடுத்தான் கண்ணன். "ராதை, இப்பொழுது உன் கண்களிலிருந்து கன்னத்தில் பெருகி வழியும் அருவிக்கரையில் சிவப்பு ரோஜா மலர்ந்திருக்கிறது, பார்" என்று சொல்லி விட்டுக் கலகல வென்று சிரித்தான்.

கண்ணன் அப்புறம் அவளைச் சந்திக்கவே யில்லை. அவளைப் பார்த்துப் பேசவே தைரியம் இல்லை அவனுக்கு. அன்று இரவு அவன் மாம்பலத்தில் இருந்த சின்ன அத்தை வீட்டுக்குப் போவதாக முன்னமே ஏற்பாடா யிருந்தது; அங்கு போய்ச் சேர்ந்தான்.

சின்ன அத்தை வீட்டுக்குப் போன கண்ணனுக்கு இன்னொரு நல்ல செய்தி காத்துக் கொண்டிருந்தது. திருச்சியிலிருந்த அவன் தகப்பனாரிடமிருந்து கண்ணனை உடனே அனுப்பி வைக்கும்படி தந்தி வந்திருந்தது. திருச்சி தேசியக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்ட படியினால் உடனே அவன் புறப்பட்டுப் போகவேண்டி யிருந்தது. சின்ன அத்தை வீட்டிலிருந்து பெரிய அத்தை வீட்டுக்கு வந்து கண்ணன் அத்தையிடமும் அத்திம்பேரிடமும் தந்தியைக் காட்டிச் சமாசாரத்தைச் சொல்லி விட்டு, தன் புத்தகங்களையும் சாமான்களையும் அவசரம் அவசரமாக எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

பாவம், ராதை! கண்ணன் தன் கன்னத்தில் அடித்ததை எப்போதோ மறந்து விட்டாள். ஊருக்குப் போகும்போது எப்படியும் தன்னிடம் வந்து சொல்லிக் கொண்டு போவான் என்று எதிர்பார்த்துத் தன் அறையிலேயே காத்திருந்தாள்.

கண்ணனுக்கு அவளைப் பார்த்து ஊருக்குப் போகும்போது சொல்லிக் கொண்டு போகத் தைரியமில்லை. அன்று மத்தியானம் தானே ராதையை வீணுக்கு வம்புக்கிழுத்துக் கன்னத்தில் அடித்து விட்டான்! மேலும், அத்தையிடமும் அத்திம்பேரிடமும் ராதை சொல்லியிருப்பாளோ என்ற எண்ணம் வேறு அவன் நெஞ்சில் நெருஞ்சில் முள்ளாக உறுத்தியது.

ஆகவே, அவன் அவளிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டு விட்டான். ராதையின் தகப்பனார் பெரிய வக்கீல்: சதா காலமும் யாராவது கட்சிக்காரர் வந்து அவரோடு பேசிக் கொண் டிருப்பார்கள். அவருக்குத் தம் சொந்த வேலைகளையே கவனிக்க அவகாசம் இருக்காது. அவருக்கு ராதை - கண்ணன் இவர்களிடையே நடந்த விஷயங்கள் ஏதும் தெரியாது. அத்தைக்கோ அவர்கள் சமாசாரம் பழகிப் போன விஷயம்.

கண்ணன் கல்லூரிப் படிப்புக்காகத் திருச்சி போன பிறகு ராதை அவனைப் பார்க்கவே யில்லை. அவன் நினைவு அவள் நெஞ்சில் நீங்காமல் நிலைத்து நின்றது. அவன் பிரிவு அவள் உடம்பையே அனலாய் வாட்டியது.

இப்பொழுது ராதை பூத்துக் குலுங்கும் மலர்க்கொடி போல் இருந்தாள். பருவத்தின் மெருகேறிய அவளுடைய மலரனைய சரீரம் காந்தியுடன் திகழ்ந்தது. முகை விரிந்த மலரின் மணமும் தனிக்கவர்ச்சியும் கொண்டு

ராதை பார்த்தவர் பிரமிக்கும் வண்ணம் வளர்ந்திருந்தாள். ராதையின் கரு விழிகளில் மாத்திரம் இனம் தெரியாத ஏக்கம் குடி கொண்டிருந்தது. அவள் மனசிலும் தனிமை உணர்ச்சி உருவாகி வளர்ந்து வந்தது.

கண்ணன் போனவன் போனவன்தான்; கல்லூரியில் இரண்டு வருஷங்கள் படித்து விட்டு, தொழிற் கல்வியில் பயிற்சி பெற நாகபுரிக்குப் போய் விட்டான். அவனிட மிருந்து தகவல் ஏதும் இல்லை.

ராதைக்கு மணப்பருவம் வந்தும் அது சம்பந்தமாக அவள் தகப்பனார் பரபரப்புக் காட்டாதது அவளுக்கு ஒரு விதத்தில் சந்தோஷமா யிருந்தது. மணந்தால் கண்ணனைத்தான் மணப்பது என்று உறுதி பூண்டிருந்தாள் ராதை. கண்ணன் வருவான், தன் கரம் பற்றுவான் என்ற அவள் நம்பிக்கைக்குச் சிறிதும் ஆதாரம் இருக்கவில்லை. அவனைப் பற்றிய பேச்சையே வீட்டில் யாரும் எடுப்பதில்லை. அவள் தகப்பனருக்குத்தான் வீட்டு நினைவே இல்லையே! ராதை ஏற்கெனவே எதற்கெடுத்தாலும் கூச்சப்படுவாள். இப்பொழுது கண்ணனைப் பற்றி அவள் எப்படிக் கேட்பாள்?

திடீரென்று ஒருநாள் ராதையின் தகப்பனார் அவள் விவாகத்தைப் பற்றிப் பேசினார் தம் மனைவியுடன்.

"அவனே எழுதி யிருக்கிறான். பத்திரிகையில் விவாக விளம்பரம் கொடுத்தபோது 'வேண்டாம்' என்று தடுத்தாயே! அதைப் பார்த்து விட்டுத்தான் அவன் எழுதி யிருக்கிறான். மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் அவனுக்கு. நாளைக் காலையில் வருகிறான்!" என்றார் ராதையின் தகப்பனார்.

"அப்படியா! முகூர்த்தத்துக்கு நாள் வைக்க வேண்டியதுதான் பாக்கி என்று சொல்லுங்கள்!" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் அவள் தாயார்.

ராதைக்கு ஒரே புதிரா யிருந்தது. அவள் உள்ளம் கண்ணனை நினைத்தது. அதற்குமேல் அவள் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டது கூடக் காதில் விழவில்லை. அவளையும் அறியாமல் அவள் மலர்க் கரம் பூப்போன்ற கன்னத்தைத் தடவிப் பார்த்தது; உடம்பு முழுவதும் அவளுக்குச் சிலிர்த்தது.

நாளைக்குத் தன்னைப் பார்க்க வரப் போகிறது யார்? தன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் கண்ணனை மறக்க வேண்டியதுதானா? அம்மாவையோ, அப்பாவையோ இது பற்றிக் கேட்கலாம் என்றால், அதற்கும் இந்தப் பாழாய்ப் போகிற நாணம் ஒன்று குறுக்கிட்டுத் தடுத்தது.

ராதை சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள். நாளைக்குத் தன்னைப் பார்க்க வரப் போகும் வரனைத் தைரியமாக வேண்டாம் என்று மறுத்து விடுவது—பிறகு வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவே காலம் கழிப்பதென்று முடிவு செய்தாள்.

சட்டென்று திரும்பினாள் ராதை. புஸ்தகத்தை மூடி வைத்து விட்டுக் கண்ணன் அவளையே உற்றுப் பார்ப்பதைக் கண்ட அவள் நாணத்தோடு தலையைக் குனிந்து கொண்டாள். அவள் கை தானாகவே தன் கன்னத்தைத் தடவிக் கொண்டது.

"ராதை, உனக்கு நினைவு இருக்கிறதா? நான் அன்று உன் கன்னத்தில் அடித்தபோது உன் கன்னம் இன்னும் சிவப்பா யிருந்தது. அடேயப்பா! நான் ஆறு வருஷங்களுக்குப் பிறகு உன்னைச் சந்தித்தபோது நீ எப்படி வளர்ந்திருந்தாய்! உன்னைப் பார்க்க வரப் போகும் வரன், யாரோ, என்ன பேரோ, எந்த ஊரோ என்று தவித்துக் கொண்டிருந்த உனக்கு எதிர்பாராத விதமாக என்னைக் கண்டதும், ஒன்றும் புரிய வில்லை. நமக்குக் கல்யாணமான மறு நாள் இரவு, பௌர்ணமி நிலவில், மாடியில் சந்தித்துப் பேசியபோதுதான் உனக்கு எல்லாம் விளங்கியது. இல்லையா? அது இருக்கட்டும் ராதை, சின்ன வயதிலிருந்து நாம் இருவரும் ஒன்றாய்ப் பழகி, விளையாடி வந்திருக்கிறோமே, நம் கல்யாணத்தன்று உனக்கு எங்கிருந்து அவ்வளவு வெட்கம் வந்தது? நீ குனிந்த தலை நிமிரவே இல்லையே!" என்று கண்ணன் பரவசத்துடன் பேசினான்.

ராதை கொஞ்சலாக, "இந்தப் புருஷர்களுக்குத்தான் வெட்கமே கிடையாது! நம் கல்யாணத்தின்போது என்னை என்ன அப்படி விழுங்கி விடுவது போல் பார்த்தீர்கள்?" என்று கேட்டாள்.

"ராதை, நீதான் என்னைப் பார்க்கவே இல்லையே! அப்படி யிருக்க நான் உன்னைப் பார்த்தது உனக்கு எப்படித் தெரிந்தது? நீயும் குற்றவாளிதானே?" என்றான் கண்ணன்.

அப்பொழுது "அப்பா, அப்பா!" என்று அழைத்துக் கொண்டே பிரேமா அங்கே வந்தாள். அவள் கூடவே கை கோத்துக் கொண்டு ரகுவும் வந்தான்.

"அப்பா, எனக்கும் ரகுவுக்கும் கல்யாணம். இதோ பார், நமஸ்காரம் பண்ணுகிறோம்!" என்றாள் பிரேமா.

உடனே ரகு, "பிரேமா, நீ கல்யாணப் பெண், தெரியுமோ இல்லையோ? தலையைக் குனிந்து கொள்ளணும். இப்படி இரைந்து பேசக் கூடாது. சரி, நான் மாமாவுக்கும் மாமிக்கும் நமஸ்காரம் பண்ணுகிறேன். நீயும் பண்ணு" என்று சொல்லிக்கொண்டே கண்ணனுக்கும் ராதைக்கும் நமஸ்காரம் பண்ணினான். அவனோடு பிரேமாவும் நமஸ்காரம் பண்ணினாள்.

"ராதை, கல்யாணப் பெண்ணென்றால் வெட்கப்பட்டுத் தான் ஆகணும். இதை நமக்குப் பிரேமாவும் ரகுவும் விளக்கி விட்டார்கள்!" என்றான் கண்ணன்.

அப்பொழுது ராதை கணவனைப் பார்த்து ஒரு பொருள் பொதிந்த புன்னகை பூத்தாள். அதற்கு விடை யளிப்பதுபோல், கண்ணன் முகத்திலும் குறுநகை மலர்ந்தது.


வேலை நேரமோ
விளையாடும்
நேரமோ
எந்த
நேரமானாலும்
கடினமான வேலை காரணமாக உங்கள் உடலிலுள்ள சக்தியெல்லாம் செலவழிந்து, சுறுசுறுப்பான விளையாட்டுகளில் கலந்துகொள்ள இயலாமல் சோர்வடைந்து விடுகிறீர்களா? வேலை செய்வதற்கும் விளையாடுவதற்கும், வாழ்க்கையை புதுமையுடன் கழிப்பதற்கும், தினசரி 'ஒவல்டின்' அருந்துவதன் மூலம் ஏராளமான சக்தியை நீங்கள் பெறலாம். ஏனெனில், 'ஒவல்டின்' பரிபூரண போஷாக்குச் சத்து நிறைந்த உணவு பொக்கிஷம். இன்றே அருந்திப் பாருங்கள்.
விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ.,
(இந்தியா) லிட்.
-அருந்துங்கள் ருசியான
ஒவல்டின்
OVALTINE
...சக்திக்கும்
உறக்கத்திற்கும்!
ரேடியோ ஸிலோனிலிருந்து ஒவல்டின் அமெச்சூர் நேரங்களை கேளுங்கள்:
(ஹிந்தி-41.72 மீட்டர்கள்), சனிக்கிழமைகள் இரவு 8 முதல் 8-30 மணி.
(இங்கிலீஷ் 9520 கிலோசைக்கிள்ஸ் 31 மீட்டர்கள்)
ஞாயிறுகள் இரவு 8 முதல் 8-30 வரை
IV.461



1




2

கல்கி ஆசிரியர் ஈடுபட்டு உழைத்த இன்னும் சில பொதுநலப் பணிகள் :


1. திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் சோஷலிஸ சர்க்கார் அமைக்க ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளைக்குத் தைரியமளிக்கும் முறையில் தமது இல்லத்தில் அவர் குழுவினருக்கு விருந்தளித்து உபசரித்தார்.

2. தென்னாற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி என்னும் சிற்றூரில் புதிதாக ஆரம்பித்து நல்ல முறையில் நடந்து வரும் வேலாயுதம் உயர்நிலைப் பள்ளியின் முதல் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு மாங்கன்று நடுகிறார்.

3. சென்ற ஆகஸ்டு மாதம் பெரம்பூரில் நடந்த இசை விழாவில் நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார் தலைமையில் ஆசிரியர் கல்கி அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார்.



3





1\. 1951-ம் ஆண்டில் இலங்கைப் பிரயாணம் செய்தபோது தபால் மந்திரி ஸ்ரீ நடேசம் பிள்ளையின் விருந்தினராக இருந்தார். ஸ்ரீ நடேசம் பிள்ளை தம்பதிகள் கல்கி ஆசிரியருடன் படம் எடுத்துக் கொண்டனர்.


2\. எட்டையபுரம் பாரதியார் ஞாபகார்த்த மணி மண்டபக் கால்கோள் விழாவில் தலைவர் ராஜாஜியுடன்.

3\. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நடந்த தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின் தலைவராக அமர்ந்து எழுத்தாளர் மகாநாட்டை அகில இந்தியப் புகழ் அடையும்படி செய்தார்.





·SANFORIZED·
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப்
பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
–எத்தனை முறை
சலவை செய்தாலும்
முக்கிய கவனிப்பு
உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள் :
"இது 'சான்பொரைஸ்ட்' துணி
—உடை தைப்பதற்குமுன்
நனைக்க வேண்டாம்"



கல்கியைக் கண்டிருக்கிறேன்; பேசியதில்லை; அவருடன் பழகியதில்லை. ஆனால் மானசீகமாக அவரது பேனாவினின்றும் வடித்தெடுக்கப்பட்டு வந்த கற்பனைகளைப் படிக்கும் பொழுதெல்லாம் கல்கியுடனே இருப்பதாக நான் உணர்வதுண்டு. வெள்ளிக்கிழமை என்று வரும் என்று ஏங்கிக் கிடக்கும் எண்ணற்ற வாசகர்களின் எண்ணத்திலே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. வெள்ளிக்கிழமை என்பதைக் "கல்கி" கிழமை என்று சொன்னால் என்ன! வள்ளுவன் ஆண்டு, காந்தி சகாப்தம் என்றெல்லாம் கூறுகையில் 'கல்கி' கிழமை என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்!

கடந்த சில காலமாக உறங்கிக் கிடந்த சோஷலிஸ்ட் இளைஞர்களைத் தட்டி எழுப்பிய பெருமை கல்கியைத்தான் சாரும். முதன் முதலில் சோஷலிஸ்டுகளைப் பற்றி அவர் எழுதிய கட்டுரை சோஷலிஸ்டுகளுக்குக் கல்கியின் மீது வெறுப்பை உண்டாக்கியிருக்கும். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் உண்மையை ஒளிவு மறைவு இன்றி எடுத்துக் கூறிய அவரின் நேர்மையையும், தைரியத்தையும் பாராட்டுகிறேன். அவரது அந்தக் கட்டுரை என் போன்றோரைத் தட்டி எழுப்பிய தென்றால் மிகை யாகாது. எனவே அவரது மறைவு சோஷலிஸ்ட் இயக்கத்துக்கு ஏற்பட்ட ஒரு பேரிடி என்றுகூடத் துணிந்து சொல்லுவேன்.

மதுரை
15—12—54 மயன்

●

கல்கி அவர்கள் கடந்த முப்பது ஆண்டுகள் பொது இயக்கங்களில் ஈடுபட்டிருந்தாலும் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சோஷலிஸ இயக்கங்களிலும், கட்சியின் கொள்கையிலும், கட்சியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் ரொம்பவும் அன்பும் அக்கறையும் காட்டி வந்தார். அன்னார் தமிழ்நாடு சோஷலிஸ்ட் ஊழியர்களுக்கு, அவ்வப்பொழுது, தக்க யோசனைகளை நேரிலும், 'கல்கி'யின் மூலமாகவும் எடுத்துரைத்து வந்தார்.

அன்னாரது மறைவு வருங்கால சோஷலிஸ இந்தியாவுக்கும், குறிப்பாக, தமிழ் நாட்டு சோஷலிஸ இயக்கத்துக்கும் மாபெரும் நஷ்டம்.

பொள்ளாச்சி
13—12—54 பி. கே. பழனியப்பன்

[தமிழகத்தின் முன்னேற்றத்துக்காகவும், பண்பாட்டின் வளர்ச்சிக்காகவும் எந்தெந்தக் கட்சிகள், பெரியோர்கள் உண்மையாகப் பாடுபட்டு வந்தார்களோ அவர்களுக் கெல்லாம் ஆசிரியர் கல்கி அவர்கள் உற்சாகமும் ஊக்கமும் அளித்து வந்தார். இந்தப் பணியைத் தமிழர் பத்திரிகையாகிய கல்கி பத்திரிகை தொடர்ந்து செய்து வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்]

●

கல்கி அவர்களின் மரணத்தைக் கேட்டுக் கைத்தறிகள் கதறுகின்றன. நாடா துக்கத்தின் காரணமாக நகரமாட்டேன் என்கிறது. மிதிஅடி விசன இடியினால் வேலை செய்ய மறுக்கிறது. விரித்த பாவு பிரிவாற்றாமையால் விறைத்து நிற்கிறது. கைத்தறி நெசவாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறுகின்றனர். கல்கி அவர்கள் கைத்தறிக்குச் செய்த தொண்டு சொல்லத் தரமா! அப்பப்பா! எத்தனை எத்தனை தலையங்கங்கள், எத்தனை எத்தனை கற்பனைக் கட்டுரைகள்; எத்தனை எத்தனை புனைந்த சித்திரங்கள், சிறு கதைகள்! எல்லாம் கைத்தறித் துணிகள் வாங்குவோரை ஊக்குவிக்க; கைத்தறி நெசவாளரை உய்விக்கக் கல்கி அவர்கள் வகுத்த வழிகளாகும்.

கல்கியின் சளையாத உழைப்பினால் அரசாங்கத்தினர்களிடையே ஒரு மாறுதல் ஏற்பட்டது. கைத்தறிக்கு உதவ வேண்டிய ஒரு உண்மையை உணர்ந்தனர். கல்கியின் முடிவுரை இமயத்தையும் அசைத்தது. ரா. கி.யின் ராமபாணம் திடங்கொண்ட நெஞ்சினரையும் திகைக்க அடித்தது. கைத்தறிக்குக் கலர் சேலைகளையும் கரை வேட்டிகளையும் ஒதுக்கினர். செஸ் பண்டு திட்டம் நிறுவப் பட்டது. ஏழை நெசவாளியின் குடிசையில் வறண்டு போய் இப்பவோ பின்னையோ என்று அணையும் தறுவாயில் இருந்த அகல் விளக்கு கல்கி அவர்களின் உன்னத உழைப்பென்னும் எண்ணெயுடன் சுடர் விட்டு எரிய ஆரம்பித்திருக்கிறது. அவ் விளக்கு முழு வெளிச்சத்தையும் கொடுத்து அவ்வெளிச்சத்தின் பயனைக் கைத்தறி நெசவாளன் பருகும் பக்குவம் அடையும் போது அதைக் கண்டு களிக்க இல்லாமல் கல்கியார் மறைந்து விட்டார். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். கல்கியார் இருந்து ஆற்றிய கைத்தறித் தொண்டைக் 'கல்கி' பத்திரிகை ஆற்றும் என்பது திண்ணம். உங்களுக்கு எங்கள் அனுதாபங்கள்.

சென்னை ப. லோ. ஷண்முகசுந்தரம்
10—12—54 மயிலாப்பூர் கை.நெ.கூ. சங்கக்காரியதரிசி

●

எதை நினைத்துக் கண்ணீர் வடிப்போம்! அரசியலிலே ஒரு மேதை மறைந்தார் என்று! கற்பனை மிகு சிற்பி மறைந்தார் என்று! அவர் மறைவை நினைத்துத் துயருறும் எண்ணற்ற மக்களுள் எங்கள் குடும்பமும் ஒன்று....

காங்கேயம்
14—12—54 நாகமணிபாய் சாஹிபா

●

வியாதியினால் பிடிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்தவாறே, அவர் தமிழுக்கும் தமிழர் வளர்ச்சிக்கும், சரித்திரத் துறைக்கும் அரசியல் மேம்பாட்டிற்கும் ஆற்றிய தொண்டினை நினைத்துப் பார்த்தேன். எனக்கு ஒரே பிரமிப்பாகப் போய் விட்டது!

டி. பி. ஸானடோரியம்
தாம்பரம் டி. ஜே. மாதவன்

●

சிவகாமியின் சபதத்தில் மாமல்லர் கூறுகிறார்: "மறு பிறவி இருந்தால் இந்தத் தமிழ் நாட்டிலேயே மீண்டும் பிறக்க விரும்புகிறேன். இறைவனிடம் அத்தகைய வரத்தையே வேண்டுவேன்."

கற்பனைச் சிற்பி!

ஏ. கே. பட்டுசாமி

வெள்ளை மலரணை மீதுறுவாணிகை
வீணையின் தந்தி அறுந்ததென
கொள்ளை நலன்கள் கொணர்ந்து தரும்—கலைத்
தேவி எழுதுகோல் நின்றதென

கலைஞர் தலைவன் மறைந்து விட்டான்!—அன்பர்
கலங்கித் தவித்திங்கு நின்று விட்டார்!
கலைகள் நிரம்பிய பூரண சந்திரன்
கண்ணெதிரே இதோ அத்தமித்தான்!

சிந்தையைத் தூண்டும் சிறுகதைகள்—முதல்
சீரிய பற்பல கட்டுரைகள்
முந்தைத் தமிழக மேன்மையைச் சாற்றிடும்
முடிமணியாகிய நீள்கதைகள்

காவியங்கள் எழுத்தோவியங்கள்—நல்ல
கருத்துச் செறிந்த விமர்சனங்கள்
ஆவிபிரியும் வரையில் எழுதிய
அற்புதக் கற்பனைச் சிற்பியவன்!

கல்கி தமிழ் நாட்டைப் பிரிந்திருக்க மனமில்லாமல் மீண்டும் வருவாரா! வந்து தம் எழுத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு மகிழ்ச்சியும் ஊட்டுவாரா! 'கல்கி'யை மறப்பது சாத்தியமன்று; தமிழ் உள்ளவரை அவர் பெயர் நிலைத்திருக்கும்.

கோவை
12—12—54 அம்புஜா நாராயண்

●

அன்புமிக்க சதாசிவம் அவர்களுக்கு,

காந்தியடிகளின் மறைவுக்குப் பிறகு எங்களை அதிகம் பாதித்தது ஸ்ரீ 'கல்கி' அவர்களின் மறைவுதான். கல்கி பத்திரிகை ஆரம்பித்து டபின்பு. ஏ. மேனன் எழுதிய அட்டைப் பட இதழிலிருந்து கல்கி இதழ்களை நாங்கள் சேர்த்து வைத்திருக்கிறோம். அவற்றை யெல்லாம் சிறுவர்களிலிருந்து, மூதியவர்கள் வரை அடிக்கடி படித்து இன்புறுகிறோம். இத்தகைய பத்திரிகை ஆசிரியரின் கீர்த்தி உச்ச நிலையை அடைந்திருக்கிறது. அந்த நிலையிலே மறைந்து அமர வாழ்வு பெற்று விட்டார். அவர் தோற்றுவித்த கலை மாளிகையான 'கல்கி'யை மேலும் மேலும் சிறப்புற அணி செய்து அழகுற ஆக்குவதே அவருக்கும் அவருடைய விசிறிகளுக்கும் உகந்த பணியாதலால் அதற்கான சக்தி தாங்கள் பெற வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.

வெங்கடாபுரம் ரா. வெங்கடேசுவரன்
12-12-54 மற்றும் குடும்பத்தினர்கள்.

●

மட்புக்குரிய சதாசிவம் அவர்களுக்கு,

பல நூறு வருடங்களுக்கொரு முறைதான் தோன்றக் கூடியதொரு அற்புத மேதை மறைந்து விட்டார். ஆய கலைகள் அனைத்தையும் தமக்குள் ஆவாகனம் செய்து கொண்டு தம் பேனா முனையினால் அவைகளை ஒரு வரம்பிற்குள் கொண்டு வந்து ஜன ரஞ்சகமான நடையில் எழுதி வந்த ஒரு கலைஞர் மறைந்து விட்டார். அமரர் 'கல்கி' ஒரு ஆச்சரிய மனிதர். அநேக துறைகளில் அவர் சாதித்த அற்புத சாதனைகளை எண்ணும் போது பிரமிப்புத் தான் தோன்றுகிறது.

கற்பனைப் புரவியைச் சிந்தனை லகானில் அடக்கிப் பிடித்து அரசியல் விஷயமோ, இலக்கிய சாரமோ, சங்கீத சர்ச்சையோ, ஹாஸ்யக் கட்டுரையோ, சிறுகதையோ, நீண்ட நாவலோ போன்ற எந்த எழுத்துத் துறையிலும் தன்னிஷ்டம் போலத் திளைத்து விளையாடினார் என்று சொல்வது அவர் விஷயத்தில்தான் பொருந்தும். கற்பனையை அவர் தேடிப் போகவில்லை. கற்பனை அவரிடம் அடைக்கலம் புகுந்து கொண்டிருந்தது. அதைத் தம் இஷ்டம் போல் ஆட்டுவித்தார். அதனுடன் விளையாடினார்.

பாக்கி அநேகத் துறைகளில் அவர் புரிந்த சேவைகளை எழுதி மாளாது.

சிந்தனைச் செல்வர், சரித்திர கதாசிரியர், சிறுகதை மன்னர், ஹாஸ்ய கலா விற்பன்னர், தொடர் நவீன சக்கரவர்த்தி, கலா ரஸிக சிரோமணி, தேசத் தியாகி மறைந்து விட்டார். மூன்றே எழுத்துக்கள் கொண்ட மின்சார சக்தி வாய்ந்த அவர் பெயரைத் தாங்கி நிற்கும் தமிழர்களின் பத்திரிகையான 'கல்கி'யைத் தொடர்ந்து ஆதரிப்பதுதான் அமரர் 'கல்கி'க்கு நாம் செய்யும் பிரதி; கடமையும் கூட. 'கல்கி' பத்திரிகையும் இனிமேல் அமரர் 'கல்கி' காட்டிய வழியையே பின்பற்றி நடக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மதராஸ்
10—12—54 எம். எஸ். மணி

●

நண்பர் சதாசிவம் அவர்களுக்கு,

நீங்களும் அவரும் இரு உடல் ஓருயிர் ஆக வாழ்ந்தவர் என்பது கல்கியின் தொண்டிலிருந்து நான் அறிந்ததாகும். எப்படிப் பண்டித நேரு நமது தந்தையை (காந்தி மகானை)ப் பிரிந்தும் அவர் விட்டுப்போன காரியத்தைத் தன்னுலியன்றமட்டும் செய்கிறாரோ அவ்வாறே தாங்களும் தங்கள் அன்பரின் லட்சியப் பாதையைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறேன். அதற்கு வேண்டிய தீர்க்காயுளும் ஊக்கமும் அளிக்குமாறு யான் கடவுளை மனதார வேண்டுகிறேன்.

திருவங்காடு
11-12-54 அன்னபூரணி

●

அன்புள்ள ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கு,


ஆசிரியர் கல்கி அவர்கள் எழுதிய 'கடிதமும் கண்ணீரும்' என்ற கதையின் ஆங்கில மொழி பெயர்ப்பை நான் அமெரிக்காவிலிருந்த போது, அங்குள்ள ஒரு சிறுகதைப் பத்திரிகைக்குக் கொடுக்கும் பாக்கியம் பெற்றேன். கல்கி அவர்களின் அநுமதியைப் பெற்று அதை வெளியிடுவதற்காக அந்த அமெரிக்கப் பத்திரிகையாளர் கல்கி அவர்களுக்குப் பல முறை எழுதினார்கள்...

அவருடைய மரணம் தங்களுக்கும் தங்கள் பத்திரிகைக்கும் ஓர் அதிர்ச்சி. ஆனாலும் ஏற்கெனவே இந்தப் பத்திரிகைக்குள்ள அஸ்திவார



அஜீரணம் வாழ்வையே துன்பமயமாக்கி விடுகிறது; வயதுக்கு மிஞ்சிய வயோதிகத் தோற்றமும் உண்டாக்கிவிடுகிறது. மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் துரிதமான நிவாரணம் தருகிறது. ஏனெனில் அது ஒரு அபூர்வச் சிறப்புடைய பௌடர்; சாஸ்திரீகமான தயாரிப்புத் திட்டப்படி பக்குவமான பொருட்சேர்க்கையுள்ள இந்தப் பௌடர் மூன்று வேலைகள் செய்கிறது—மிருதுவான இரைப்பைக்குச் சமனமூட்டுகிறது; வயிற்றுப் புளிப்பை மாற்றுகிறது; வலியையும் நிறுத்துகிறது.

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் என்று பெயரைச் சொல்லிக் கேளுங்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் Alex C. Maclean "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்ற உண்மைக் கையெழுத்தும் தத்ரூபமாக அச்சிடப் பட்டுள்ளதா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.



மக்ளீன்


பிராண்ட் ஸ்டமக் பவுடர்

எப்பொழுதும் கையில் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

ஒரு டோஸ்

அஜீரணத்தாலேற்படும் வயிற்றுவலி, உடற்பருமன், இருதய எரிச்சல், வயிற்று மந்தம், வாந்தி இவற்றை சடுதியில் குணப்படுத்தும்.

MSY. 9-TAM



ஆம், இதுதான் என் திட்டம்!

ஆயிரக் கணககான கிராமங்களில் விளக்குகள் எரியும். தறி முதலிய இயந்திரங்கள் சுற்றிச் சுழல, மக்களெல்லாம் வளரும் கிராமக் கைத் தொழிலில் ஈடுபடுவார்கள். அனைவருக்கும் வேலை கிடைக்கும். அதிகப்படியான மின்சார சக்தி உற்பத்திக்காக நம் ஐந்து வருடத் திட்டத்தில் 127 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு ஹைட்ரோ-எலக்ட்ரிக் திட்டங்கள் நம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சார சக்தியை மலிவாக அளிக்கும். உலகத்தில் தலை சிறந்த நாடுகளுள் நமது நாடும் ஒன்றாக விளங்க உறுதி கொண்டிருப்பதற்கு இவைகளே தக்க சான்றாகும்.

இவ்வைந்து வருடத் திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் லக்ஷக்கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையை செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்ற விதங்களில் ஈடுபடும்.

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

TN [illegible]

பலமும், தங்களுடைய சளியா உழைப்பும் ஆற்றலும் காரணமாக இனி, பத்திரிகையின் எதிர் காலத்தைப் பற்றி நல்ல உறுதியே கொள்கிறேன்.

ஸரஸ்வதி வித்யாலயா
யூனியன், புனு-1 டி. கே. விசுவநாதன்

●

கல்கி மாமா அவர்கள் மறைவைக் கேட்ட மாத்திரத்தில் எனக்கும் என் குடும்பத்துக்கும் ரொம்ப வருத்தம். கல்கி மாமா எழுதிய அமர தாரா கதை யார் எழுதுவார் என்றும் வருத்தமாய் இருந்தது. இந்த வாரக் கல்கியில் 19ம் பக்கத்தில் ஸ்ரீமதி ஆனந்தி எழுதுகிறார் என்றதும் என் மனம் ரொம்பவும் திருப்தி அடைந்தது. ஸ்ரீமதி ஆனந்தி அவர்களும் அவர்களைப் போல் மேன்மை பொருந்திய எழுத்தாளரும் நன்றாகக் கதைகளை எழுத முன்வர வேண்டுமென்று நான் தினம் பூஜிக்கும் விநாயகப் பெருமானைப் பூஜிக்கிறேன். ராஜாஜி தாத்தா எழுதும் சக்கரவர்த்தித் திருமகன் படிக்க இன்பமாக இருக்கிறது.

சென்னை-21 டி. சித்திரலேகா
17—12—54 (நான்காம் வகுப்பு மாணவி)

●

எதிர்பாராத சம்பவமாகக் "கல்கி" அவர்கள் மறைவைப் பற்றி அறிந்து ஆழ்ந்த துயரமுற்றேன். அவருடைய மறைவானது தமிழ் உலகிற்கும், சங்கீத உலகிற்கும் ஒரு பெரிய ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

மாயூரம்
10—12—54 மாயூரம் எஸ். ராஜம்

●

நண்பர் சதாசிவம் அவர்களுக்கு,

இந்தத் துக்கச் செய்தி பொய்யாக இருக்கக் கூடாதா என்று என் மனம் கடவுளைப் பிரார்த்தித்தது.

நான் கடந்த மூன்று வருட காலமாகக் கல்கி எழுதி வந்த 'பொன்னியின் செல்வன்' என்னும் நாவலைத் தொடர்ந்து படித்தேன். ஆகா! அதில் அவர் கையாண்டு வந்த சொல் நயத்தையும், கற்பனைத் திறத்தையும் கண்டு வியப்புற்றேன்.

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அமைதியைத் தேடித் தவித்த என் உள்ளத்துக்கு ஆறுதல் அளித்தவை அவருடைய (கவிதைகளும், கட்டுரைகளும்) சொல்லோவியங்களே. அவர் திருநாமம் நீடூழி வாழ்க!

திருவல்லிக்கேணி
13—12—54 எம். வி. ராமாபாய்

ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கு,

கல்கி அவர்களின் மறைவைக் கேட்டதிலிருந்து, என் உணர்ச்சி சொல்லும் தரமன்று. என் சொந்த சகோதரனை இழந்து விட்டாற் போன்ற துக்கம் ஏற்படுகிறது. "கல்கி மறைந்தார்; கல்கி நீடூழி வாழ்க!" என்றுதான் சொல்ல முடிகிறது.

நான் ஒரு பழைய கல்கி சந்தாதாரன். 1942 லிருந்தே சந்தா கட்டி வாசித்து வருபவன். அவர் மறைவு தமிழுக்கு மட்டும் பெரு நஷ்டமல்ல, மலையாளிகளுக்கும் அவர் மறைவு நஷ்டமாகும். 'கல்கி' பத்திரிகையை அவருடைய ஞாபகச் சின்னமாகத் தொடர்ந்து நடத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கணங்காடு
11—12—54 ஏ. வி. கண்ணன் நாயர்

●

பண்டையத் தமிழரின் பண்பாட்டை, வீரத்தை, விவேகத்தைப் பத்திரிகை வாயிலாகத் தொடர் கதையாகத் தொடர்ந்து எழுதித் தமிழகத்தை மகிழ்வித்த சித்தனைச் சிற்பி, நல்ல நெஞ்சோடு நாட்டுக்குத் தமிழ்த் தொண்டு செய்து ஊக்கமும் உறுதியும் கொடுத்து ஊருக்கு நல்வழி காட்டிய உத்தமர் கல்கியாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி யடைந்தோம்......

அஸ்ஸாம்
10-12-54 அஸ்ஸாம்—கல்கி அன்பர்கள்

●

கல்கி தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். சிறுகதைகள், சரித்திர சம்பந்தமான கதைகள் எழுதுவதில் திறமை வாய்ந்தவர். "சிவகாமியின் சபதம்" பல்லவர் காலத்திய நிகழ்ச்சியைத் தாங்கி அவரால் எழுதப்பட்டது. பெயரும் புகழும் அடைந்தார். தமிழ் மொழிக்கு அவர் செய்து வந்த தொண்டு போற்றக் கூடியது.

பழையகோட்டை. நல்ல சேனாபதி
9—12—54 சர்க்கரை மன்றாடியார்

●

தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரும், கதாசிரியரும், இலக்கியக் கலைஞருமான கல்கி அவர்களின் அகால மறைவு குறித்து இக் கூட்டம் மிக மிக வருந்துகிறது.

அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், 'கல்கி' காரியாலயத்தாருக்கும் ஜமால்

பூர் தமிழ் மக்கள் தங்கள் மனமார்ந்த அனுதாபத்தை அனுப்பி வைக்கிறார்கள்.

உட்லண்ட் ஹௌஸ்
12—12—54

எஸ். காசி அய்யர்
தலைவர், ஜபால்பூர் தமிழ்ச் சங்கம்

●

தமிழர் வாழும் பல பகுதிகளிலிருந்தும் அனுதாபத் தீர்மானங்கள், வந்து கொண்டிருக்கின்றன. சங்கங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் முதலிய பொது ஸ்தாபனங்கள் கூட்டங்கள் நடத்தி அனுதாபத் தீர்மானங்களை அனுப்பி வருகின்றன:

தமிழ் எழுத்தாளர் சங்கம், நாடகக் கழகம், கம்பர் கழகம், வாலிபர் சங்கம்-சென்னை, ஒய்.எம். ஐ. ஏ. சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னை, மயிலைக் கலாச்சார சங்கம், மயிலை அகாடமியார், மாம்பலம் வாஞ்சி இளைஞர் சங்கம், பாரதியார் சங்கம், அகில இந்திய பிலிம் டெக்னிஷியன்கள் சங்கம், சென்னை. சேவா நிலைய ஆதாரப் பள்ளி, கோவை, இகபர்பன் ஹைஸ்கூல், ராம்நகர், கோவை. அழகப்பா கல்லூரி, காரைக்குடி. செயின்ட். மேரீஸ் ஹைஸ்கூல், விக்ரம சிங்கபுரம், திருநெல்வேலி. குமரகுருபர சுவாமிகள் மாணவர் ஹைஸ்கூல், ஸ்ரீ வைகுண்டம். அன்பு கலா நிலையத்தார், கரூர். யூனிவர்ஸிடி காலேஜ் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம். தமிழ்க் கழகம், மேரி ராணி கல்லூரி, சென்னை. ஸ்ரீ நடராஜா ஆரம்பப் பாடசாலை, விழுப்புரம். போர்டு உயர் நிலைப் பள்ளி, களக்காடு. சத்திரம் உயர்நிலைப் பள்ளி, கடத்தூர் சேலம் ஜில்லா. தக்கர் பாபா வித்யாலயம், தியாகராயநகர், சென்னை. தேசியக் கல்லூரி திருச்சிராப்பள்ளி. ஓ. வி. உயர்நிலைப் பள்ளி சாத்தூர். என். ஆர். கே. உயர்தர ஆரம்பப் பாடசாலை, சென்னை. மாணவர் மன்றம், சரஸ்வதி வித்யாலயா யூனியன், பூனா. ஹிந்து மத உயர்தர ஆரம்பப் பாடசாலை, வாலாஜாபாத். ஸர் தியாகராய கல்லூரி, சென்னை. தமிழ் மன்றம் பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம். சரஸ்வதி வித்யாலயா, நாகபுரி. பாரதியார் மண்டபம் பராமரிப்புக் கமிட்டி, எட்டயபுரம். நாடார் சரஸ்வதி ஹைஸ்கூல், தேனி. போர்டு உயர்நிலை ஆரம்பப் பாடசாலை, தௌலதாபாத், சேலம். காந்தி ஆச்ரமம், சேலம் ஜில்லா. மாம்பலம் தமிழ் மன்றம், மாம்பலம். கவிமணி சங்கம், வில்லிவாக்கம். மாதர் சங்கம், சங்கீத சபா, இளைஞர் காங்கிரஸ்—பெரம்பூர். பாரதி கலைக் கழகம், சைதாப்பேட்டை. அன்னதான சிவன்சங்கம், சென்னை. ஏத்தாப்பூர் பஞ்சாயத்து போர்டு, சென்னை கார்ப்பொரேஷன் ஊழியர் சங்கம் வாசகசாலை, சென்னை. பர்மாஷல் கிளப், கச்சாலீஸ்வரர் கானசபா, செயின்ட் மேரீஸ் யூனியன், சென்னை. தேசியப் பெண்கள் உயர்தரப் பாடசாலை, திருவல்லிக்கேணி. தியாகப்பிரம்ம கானசபா, தி. நகர். சென்னை. தபால்–தந்தி ஊழியர்கள் ரிக்ரியேஷன் கிளப், குந்தக்கல், கோரேகான் தமிழ்ச் சங்கம், பம்பாய். தேசிய மாணவர் உயர்தரப் பாடசாலை, திருவல்லிக்கேணி. லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் பாடசாலை, மயிலாப்பூர். ராமேசுவரம் பஞ்சாயத்து போர்டு, ராமேசுவரம், ஸ்ரீ ராமராஜ்ய சங்கம், அனையம்பட்டி, ஆத்தூர், சேலம். சக்தி நிலையம் வாசகசாலை, திரிகோணமலை, இலங்கை ; இன்னும் பல.

இலக்கிய வானின் சுடர்

கல்கி (ரா. கிருஷ்ணமூர்த்தி) யின் மறைவினால் தமிழ்நாடு ஓர் ஒப்பற்ற எழுத்தாளரையும், பத்திரிகையாளரையும் இழந்து விட்டது. அவர் எப்படி இலக்கிய வானில் திடீர் என்று தோன்றிச் சுடர்விடும் நட்சத்திரமாக ஜொலித்தாரோ, அப்படியே அவர் மறைவும் திடீர் என்று ஏற்பட்டு விட்டது. 1920ம் ஆண்டுகளில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து காங்கிரஸ் தொண்டராக இருந்த அவரைச் சிறந்த எழுத்தாளர் என்று கண்டு தமிழ்ப் பத்திரிகை யுலகுக்கு அறிமுகப் படுத்தியவர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரே யாகும். யாருக்கும் தெரியாதிருந்த இந்த ஆசிரியர் தமக்கு வைத்துக் கொண்ட 'கல்கி' என்ற புனை பெயர் கொஞ்ச நாட்களிலேயே தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவர் நாவிலும் வழங்கும் பெயராகி விட்டது.

தற்காலத் தமிழ் இலக்கியத்தில் தன்னிகரில்லாது திகழ்ந்த கல்கி அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்துள்ள தொண்டு கொஞ்ச நஞ்சமல்ல. பண்டிதர்களிடை சிக்கிய தமிழுக்கு விடுதலை அளித்துச் சிறந்த தமிழ் வசன நடைக்கு ஏற்றது மக்களின் பேச்சுத் தமிழ் என்று பிரபல்யப் படுத்தியவர்களில் தலைசிறந்தவர் கல்கி. மற்றவர்கள் இப் பணியில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தபோது, அப் பணிக்குப் பலமும் உறுதியுமளித்துப் புது யுகத் தமிழ் இலக்கியத்துக்குப் புது உருவமே கொடுத்தார். ஏன், இவரே தமிழ்த் தாயின் சுடர்விடும் மாணிக்கம் என்று கூறினும் சற்றும் மிகையாகாது. இலக்கியத் துறைகளில் அவர் புகுந்து நினைக்காத துறை இல்லை. சிலவற்றுக்கு அவர் எழுத்தே முன்மாதிரியாக வழிகாட்டி யிருக்கிறது.

சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய கலைகளின் அற்புத விமர்சகர் அவர். அவருடைய விமர்சனங்களைப் பெருங் கலா ரஸிகர்களும் சாதாரண மக்களும் மிகவும் ஆவலுடன் எதிர் நோக்கி அவர் கருத்துக்களுக்குப் பெரு மதிப்பளித்துப் படிப்பார்கள். இன்று முன்னணியில் நிற்கும் பல கலைஞர்கள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ 'கல்கி'க்குப் பெரிதும் கடமைப் பட்டவர்கள். சங்கீத ரஸிகர்களும் சங்கீத வித்துவான்களும் தமிழ்ப் பாட்டுச் சம்பந்தமாக நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த வெறுப்பைப் போக்கியவர் கல்கிதான்.

தமிழ் நாவல் உலகுக்கு அவர் தொண்டு மிகப் பெரிது. அவரது 'தியாக பூமி' போன்ற சமூக நாவல்களும், 'சிவகாமியின் சபதம்' போன்ற சரித்திர நாவல்களும் இலக்கிய ரஸிகர்களின் பெரு மதிப்பும் பாராட்டும் பெற்றவை. 'வீணை பவானி' போன்ற அவரது கதைகள் எந்தச் சிறுகதைத் தொகுப்பிலும் சேர்க்க வேண்டியவை யாகும். அவை இன்றைய, புதுயுக இலக்கியத்தின் அற்புத சிருஷ்டிகளாகும்.

[சிந்தனை என்ற பொருளில் தில்லியிலிருந்து வெளியாகும் Thought பத்திரிகையிலிருந்து.]

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road. Kilpauk, Madras-10.

சீர்தூக்கிப் பாருங்கள்

விளம்பரதாரர்களே...

நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் என்ற ஸ்தாபனந்தான் சுருக்கமாக ஆங்கிலத்தில் **ABC** என்று சொல்லப்படுகிறது. இந்த **ஏபிஸி** ஸ்தாபனத்தில் இந்தியா, பாகிஸ்தான், சிலோன் ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் நடத்தப்படும் 175க்கு மேற்பட்ட பிரதான பத்திரிகைகள் அங்கம் வகிக்கின்றன.. இந்தப் பத்திரிகைகளின் விற்பனை கணக்கு எந்த சமயத்திலும் **ஏபிஸி** ஸ்தாபனத்தின் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்பட்டு, அந்தந்த பத்திரிகையின் நிகர விற்பனை எண்ணிக்கை சர்டிபிகேட்டை ஆறு மாதத்திற்கு ஒரு முறை **ஏபிஸி** ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் **ஏபிஸி** ஸ்தாபனத்தின் அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கும் அந்த சர்டிபிகேட் அனுப்பப்படும். அப்போது உங்கள் விளம்பரத்திற்கு நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையின் உண்மை நிகர விற்பனையை நீங்கள் அறிந்து கொள்வதுடன் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்ற உண்மையும் தெரிய வரும்.

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லி-ட்.

பாரத் ஹவுஸ், அபோலோ தெரு :: கோட்டை, பம்பாய்

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும் விளம்பர ஏஜண்டுகளும் ஏற்கனவே ABC யின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

விளம்பரதாரர்கள் —

அல்லைடு போட்டோகிராபிக்ஸ் லி-ட்., ஆயுர்வேதாஸ்ரமம் பார்மஸி லி-ட்., இ. எம். ஆல்காக் அண்டு மொஹாட்டா லி-ட்., அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லி-ட்., பால்மர் லாரி அண்டு கம்பெனி லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ. (இந்தியா) லி-ட்., பர்மா ஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்டு டிஸ்ட்ரிபியூட்டிங் கோ. ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் (இந்தியா) லி-ட்., ஃ போர்டு, கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ. (இந்தியா) லி-ட்., டன்லப் ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லி-ட்., கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கோ., லி-ட். இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லி-ட்., இம்பீரியல் டுபாகோ கம்பெனி ஆப் இந்தியா லி-ட்., இந்தியா டயர் அண்டு ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (ஸிலோன்) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லி-ட்., லிப்டன் லி-ட்., ஜே.எல். மாரிஸன் ஸன் அண்டு ஜோன்ஸ் (இந்தியா) லி-ட்., ஸி & இ. மார்ட்டன் (இந்தியா) லி-ட்., முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லி-ட்., நாஷனல் கார்பன் கோ. (இந்தியா) லி-ட்., பார்ஸி ப்ராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ. லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய், ஸேல்ஸ் ப்ராடெக்ட்ஸ் ஓவர்ஸீஸ் லி-ட்., ஷாலிமார் பெயிண்ட், கலர் அண்டு வார்னிஷ் கம்பெனி லி-ட்., டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லி-ட்., வால்கார்ட் பிரதர்ஸ்.

விளம்பர ஏஜெண்டுகள் —

அட்வர்டைஸிங் & ஸேல்ஸ் பிரமோஷன் கோ., ஈஸ்டர்ன்ஸ், எபிஷியண்ட் பப்ளிஸிட்டீஸ் லி-ட்., எவரெஸ்ட் அட்வர்டைஸிங் லி-ட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க்., கீர்ன்ஸ் அட்வர்டைஸிங் சர்வீஸ் ஏஜண்ட்ஸ், இந்தியா அட்வர்டைஸிங் சர்வீஸ், டி. ஜே. கீமர் அண்டு கோ. லி-ட்., லிண்டாஸ் லி-ட். பி. எஸ். மணி அண்டு கம்பெனி, நேஷனல் அட்வர்டைஸிங் சர்வீஸ் லி-ட்., பிரஸ் ஸிண்டிகேட் லி-ட்., ரஞ்சித் ஸேல்ஸ் அண்டு பப்ளிஸிட்டி லி-ட்., ஸில்பா லி-ட்., ஸிஸ்டாஸ் லி-ட்., எப். டி. ஸ்டுவர்ட் லி-ட்., எல். ஏ. ஸ்ட்ரோனக் அண்டு கோ. (இந்தியா) லி-ட்., ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி (ஈஸ்டர்ன்) லி-ட்.

இதைப் பிரசுரித்தவர்கள் :

ABC ஸ்தாபனத்தின் அங்கத்தினரான 'கல்கி' பத்திரிகை சொந்தக்காரர்கள்

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon

